
கவிவேழம் பாரதிபாலனின்

# அரங்க இலக்கிய அலைகள்



# Staging the waves of Poetry

*Kavivezham* **Bharathibalan**

# அரங்க இலக்கிய அலைகள்

'கவிவேழம்'

## பாரதிபாலன்

**கிருபா பதிப்பகம்**

1, ஐந்தாவது குறுக்குத் தெரு,
தனலட்சுமி நகர், சேலையூர்,
சென்னை - 600 073.
தொலைபேசி : 65322040
அலைபேசி : 9382737070

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | அக்டோபர் 2010 |
| உரிமை | : | ஆசிரியருக்கு<br>'கவிவேழம்' பாரதிபாலன்<br>(டாக்டர் ஜெயக்குமார் குமாரசாமி)<br>பொதுச்செயலாளர்,<br>உலகத் தமிழ் இலக்கிய ஒன்றியம்<br>Bjergmarken 7st, th,<br>4300 Holbaek, Denmark.<br>தொலைபேசி : 0045 – 52749404<br>0045 –59668047<br>மின்னஞ்சல் : bharathibalan@hotmail.com |
| பக்கங்கள் | : | 200 |
| விலை | : | ரூ.120/– |
| அட்டை ஓவியம் | : | சிவராஜா, பி.எஸ்ஸி.,<br>வடகிழக்கு பல்கலைக்கழகம்,<br>பாஸ்டன், அமெரிக்கா |
| விற்பனை உரிமை (இந்தியாவில்) | : | கிருபா பதிப்பகம் |
| First Edition | : | October 2010 |
| Copy Right | : | Author<br>**Kavivezham Bharathibalan**<br>(Dr. Jeyakumar Kumarasamy Litt.D)<br>General Secretary, Global,<br>Tamil Literary Consortium,<br>Bjergmarken 7st, th, 4300 Holbaek,<br>Denmark,<br>Tel : 0045 -52749404<br>0045 - 59668047<br>e-Mail : bharathibalan@hotmail.com |
| Pages | : | 200 |
| Price | : | Rs.120 |
| Cover design | : | S. Sivarajan B.Sc.,<br>North Eastern University<br>Boston, U.S.A. |

# இந்நூல்...



அனைத்து உயிரினங்களையும்
நேசிக்கும் பான்மை
அற்றுப் போனமையாலும்
ஆட்சி பீடங்களின்
அதிகாரப் போட்டிகளினாலும்
அழிந்தும், அநாதரவாகியும்
திக்குதிசை தெரியாது
தடுமாறியும் போன
அகிலத்து ஆன்மாக்களுக்கு....

## பதிப்புரை

முன்னைப் பழமைக்கும் மூத்த பழமையதாய், பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியதாய் இலங்கும் நம் அன்னைத் தமிழ்மொழியை, இன்று அகிலமே உயர்தனிச் செம்மொழி என உவந்து போற்றும் உயர்நிலை வாய்த்துள்ளது. கனிச் சுவைக் கவிதைகள் தொடங்கி, கணினிமயப் படைப்புகள் வரை உலக இலக்கிய அரங்கில் கோலோச்சிக் கொலு வீற்றிருக்கும் தமிழின் மாண்புகளுள் தலையாயது, அது தரணியெல்லாம் பரவி தன் தகுதியை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதே! அவ்வாறு நிலை நிற்பதற்குக் காரணரும் ஊக்குநருமாகத் திகழ்வோர், தாய்த் தமிழகத்துக்கு வெளியிலும் பரந்த உலகின் பல்வேறு நாடுகளிலும் பொறுப்போடும் பொறுமையோடும் பொலிவோடும் தமிழுக்குத் தம் பங்களிப்புகளை நல்கி வரும் பன்முகப் படைப்பாளர்களும் அவற்றின் பதிப்பாளர்களுமே ஆவர். அத்தகு, புகழ்மிகு படைப்பாளர் வரிசையில் முன்னணித் தாரகையாக முகம் காட்டும் ஓர் முத்தமிழ் வல்லாரின் படைப்புகளே இந்நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன.

இதயத்தை ஈர்க்கும் ஈழத்தமிழகத்தில் உதித்தாலும் இன்று திருநிறைந்த தென்மார்க் நாட்டில் வாழும் ‘கவிவேழம்’ எனும் புகழ்ப் பெயர் சுமந்த – ஜெயக்குமார் குமாரசாமி எனும் இயற்பெயருடைய கவிஞர் பாரதிபாலன் அவர்கள், புதின இலக்கியம் – கவிதை இலக்கியம் – நாடக இலக்கியம் – உரை வீச்சு எனப் பன்முக இலக்கியப் பரிமாணங்களில் ஆழமும் அழுத்தமும் சாரமும் சத்தும் நிறைந்த பங்களிப்புகளை வழங்கியவர். ஆய்வு நூலா? புதுமைக் கற்பனை வடிவமா எனத்திகைக்க வைத்த புதுமைப் புதினமாம் ‘சமரச பூமி’ எனும் சாகா இலக்கியம் படைத்தவர் அவர். ஈழத் தாயகத்தினும் ஐரோப்பிய நாடுகள் பிறவற்றிலும் பல்வேறு தமிழரங்குகளில் தம் முத்திரை பதித்து, “கேட்டார் பிணிக்கும் தகையவாய், கேளாரும் வேட்ப” மொழிந்த நற்றமிழ்ச் சுடர் அவர்.

அன்னார் பல்வேறு அரங்குகளில் வழங்கிய கவிதை வீச்சுக்களையும் அவர் படைத்து அரங்கேற்றிய சில நாடக ஆக்கங்களையும் மேடையில் வீசிய மெல்லிய பூங்காற்றாய்ப் பேசிய உரைகளையும் தொகுத்து **"அரங்க இலக்கிய அலைகள்"** எனும் பெயரில் தமிழ்கூறு நல்லுலகத்திற்குக் கிருபா பதிப்பகம் படைத்து மகிழ்கின்றது.

பதிப்பக நிறுவனரின் படைப்புகளையும் சித்தர் மற்றும் கிறித்துவ இலக்கியங்களையும் மட்டுமே வெளியிடும் நோக்குடன் உருவாக்கப்பட்ட எமது பதிப்பகத்தின் பதிப்பு எல்லை, இந்நூலால் மேலும் விரிவு பெறுகிறது. அதன் காரணமும் பெருமையும் நூலாசிரியரையே சாரும். தரணியெங்கும் பரந்திருக்கும் தமிழ் வாசக வட்டத்தினர் இந்நன்முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்குவர் என்ற நம்பிக்கையில் இறையருளை வழுத்தி, இந்நூலை உங்கள் முன் படைக்கிறோம். இச்சீரிய படைப்பை இவ்வண்ணம் வெளியிட அனுமதியும் ஆதரவும் அளித்த படைப்பாளருக்கு என் ஆழ்ந்த நன்றிகள் உரியன.

**மோசசுமைக்கேல் பாரடே**
நிறுவனர் / கிருபா பதிப்பகம்

## உள்ளுறை

பக்கம்

பதிப்புரை 5-6

தொகுப்பாரம் 9-29

அணிந்துரை 30-33

ஆசியுரை 34-35

சிறப்புரை 36-38

திறனாய்வுரை 39-43

**மேற்குலக அரங்க நிகழ்வுகள்**

1. ஜெர்மனி, பெர்லின் அரங்கிலே 44-58
'கை நீட்டும் கடல் அலைகள்' (கவிதை)

2. டென்மார்க், கேர்ணிங் நகரிலே 59-71
'பொறுக்காத நெஞ்சொன்று' (கவிதை)

3. டென்மார்க், கேர்ணிங் நகரிலே 72-76
'ஏங்காதநாள் என்று' (கவிதை)

4. டென்மார்க், வைலை நகரிலே 77-82
'எங்கு வாழ்ந்தாலும் தான்என்ன' (கவிதை)

5. டென்மார்க், கொல்பேக் நகரிலே 83-93
'இரவல் நாட்டுக் கூனலும்
20 ஆண்டு கால நிமிர்வும்' (கவிதை)

6. டென்மார்க் வைன் நகரிலே 94-104
' தமிழ்ப் பத்திரிகை உலகம்
எதிர்கொள்ளும் பிரச்சனைகள் ' (ஆய்வுரை)

## தாயக அரங்க நிகழ்வுகள்

7. கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் 105-107
(கவிதை)

8. திருக்கோணமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் 108-110
(கவிதை)

9. திருக்கோணமலை விக்கினேஸ்வரா கல்லூரியில் 111-112
(கவிதை)

10. திருக்கோணமலை புனித சவேரியார் பாடசாலையில் 113-116
(கவிதை)

11. திருக்கோணமலை இந்துக்கல்லூரியில் 117
(கவிதை)

12. திருக்கோணமலை இந்துக்கல்லூரியில் 118-124
(கவிதைப் பட்டிமன்றம்)

13. குறுங்காவியம் 125-146

14. ஐரோப்பிய நாடக அரங்கினிலே 147-181
(கவிதை இசை நாகம்)

15. கனடா, வானொலி அரங்கம் 182-195
தாயக வன்னி நிகழ்வும்

16. படைப்பாளி உங்களிடம் 196

# தொகுப்பாரம்

திருமிகு. கணபதி ரவிந்திரன், பி.ஏ.,
தலைவர்
கனடா தமிழ்க் கலைஞர் சங்கம்

கவிவேழம் பாரதிபாலன் (டாக்டர் ஜெயக்குமார் குமாரசுவாமி) அவர்கள் 37 ஆண்டுகளாக தமிழ் இலக்கிய உலகிலே முத்திரை பதித்து வருகிறார். இருப்பினும் அவரது கவிபுனையும் ஆற்றல் ஏறக்குறைய 42 ஆண்டுகள் எனலாம். நாங்கள் இருவரும் சிறுவராய் மண் 'அழைந்து' மணல்வீடு சமைத்த காலத்தில் அவரிடம் இருந்து புறப்பட்ட கவியாற்றலில் ஈர்க்கப்பட்டு நானும் கவிஞனானேன். இதனை 'அரை மனிதர்கள்' என்னும் அவரது சிறுகதைத் தொகுதியில் அவரைப் பாராட்டியபோது குறிப்பிட்டிருக்கிறேன்.

'நயமருவு பாக்கள்பல நவிலும் கவிஞன்
ஜெயகுமார் தான்செய்யும் செய்யுள் - இயலிசையின்
தேமதுரத் தேனாய் சுரத்தல்யான் வெள்ளையண்ணை
பாமதிப்பால் காட்டுகிறேன் பார்'

என்று எங்கள் குருநாதர் ஈழத்து வள்ளலார் வெள்ளை அண்ணா (இராமச்சந்திர இலிங்கேசுவரர்) அவர்கள் கவிவேழத்தின் கவியாற்றலை அன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த நாவற்குழியூர் நடராஜன் அவர்களுக்கு வெண்பா மூலம் இனங்காட்டி இருந்தார்.

ஆகவே, இறை அவதாரம் என்று அனைவராலும் வணங்கப்படும் அந்த ஒரு ஞானியால் அங்கீகரிக்கப் பெற்றவர் எங்களது கவிவேழம் அவர்கள்.

அத்தகைய தலைசிறந்த இலக்கியப் படைப்பாளியான இவர் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற சிறந்த கவிஞர். கவிவேழம், பன்முகபாரதி, பைந்தமிழ்ப் பாவலர், முதலான பட்டங்களை அவருக்கு தமிழ்கூறு நல்லுலகம் சூட்டி மகிழ்ந்திருக்கிறது. எமதுகனடா தமிழ்க் கலைஞர் சங்கம் 5.11.2005இல் றொறரன்ரோ வின்சன்ற் சேர்ச்சில் அரங்கில் இடம் பெற்ற நாடக இலக்கிய

பெருவிழாவிலே பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள் கூடியிருந்த அவையிலே இவருக்கு 'பல்கலை ஞானி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்து இருக்கிறது.

அந்த விழாவிலே பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட வட அமரிக்காவைச் சேர்ந்த உலகின் பிரபல கோடீஸ்வரர்களான ஸேர்ஜியா ஸோற்றில் அவர்களும், ஜோ அல்மேய்டா அவர்களும் இவருக்கு மேற்படி பட்டத்தை வழங்கினார்கள்.

இவருக்கு இலக்கிய கௌரவ கலாநிதிப் பட்டத்தினை உலகப் பல்கலைக் கழகம் வழங்கிக் கௌரவித்து இருக்கின்றது. இவரது தமிழ் இலக்கியப் பரப்பும், பல்துறை ஆய்வுப் பரப்பும் பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும் வியக்கவைக்கும் தன்மை வாய்ந்தவை.

2003ஆம் ஆண்டில் வெளிவந்த, இவரது உலகத் தரம் வாய்ந்த 'சமரசபூமி' என்னும் அறிவியல் ஆன்மிக நாவல் பற்றி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் குறிப்பிடும்போது, 'தமிழ்ப் பண்டிதராக இருக்கின்ற காரணத்தினாலே தமிழ் அவருடைய நாவலிலே வரும் மிக நுணுக்கமான இடங்களையெல்லாம் தெளிவுறுத்த நன்கு பயன்படுகின்றது எனவும், தமிழர் (திராவிடர்) வரலாறு பற்றிய மீளாய்வுகள் நடைபெறும் இவ்வேளையில் குமரிக்கண்டம் தொடர்பாக இவரது சமரசபூமியிலே வரும் விடயம் கவனிக்கத்தக்க ஒன்றாக அமைகிறது' எனவும் தமது மதிப்பீட்டு உரையிலே குறிப்பிட்டுள்ளார். அதேபோல தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் தமது மதிப்பீட்டிலும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நூல் அறிமுக விழாவிலும் ஆசிரியரின் இலக்கிய வளம் மற்றும் அவரது ஆய்வு வளம் பற்றி சிறப்பான கருத்துக்களைக் கூறிப் பாராட்டி இருக்கிறார்.

20.05.2005-இல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற கவிவேழத்தின் சமரசபூமி அறிவியல் ஆன்மிக நாவல் அறிமுக விழாவிலே கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் அவர்களும், மேற்படி விழாவுக்கு தலைமை ஏற்ற தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்களும், மேற்படி துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், டாக்டர். விசாகருபன், குமரன் ஆகியோருடன், இந்து நாகரிகத் துறைத் தலைவர் டாக்டர் ம.

வேதநாதன் அவர்களும், நுண்கலைப் பீட விரிவுரையாளர் செல்வி அருட்செல்வி அவர்களும் மேற்படி சமரசபூமி பற்றி புகழாரம் சூட்டி உள்ளனர்.

அவர்கள், சமரசபூமி என்னும் நாவல் தமிழ் நாவல் வரலாற்றிலே புதியதோர் தடத்தை வகிக்கும். சமரசபூமி, பட்டறிவும், படிப்பறிவும் புணர்ந்து சுகப் பிரவசமாகப் பெற்ற அதிசயக் குழந்தை. தமிழர் தம் ஆக்க இலக்கிய உலகும் ஆய்வுலகும் கவிவேழத்திடம் இன்னும் நிறையவே எதிர்பார்க்கிறது. இந்த நூலைப் படிக்கிறபோது, ஒரு கதையைப் படிக்கிறோம் என்ற உணர்வுகளையும் கடந்து உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் சமுதாயத்தையும் அவர்களது வாழ்வியலையும் கண்டுகொள்கிறோம் என்ற உணர்வே தலைதூக்கியது. பண்பாட்டியல், மானுடவியல் ஆய்வாளர்களுக்கு உசாத்துணையாக அமையும் தகுதி சமரசபூமிக்கு உண்டு. ஒரு ஆய்வு நூலுக்குரிய அம்சங்கள் பல இந்த நாவலிலே விரவிக் கிடக்கின்றன. விறுவிறுப்பும், மனிதப் பண்பும், சம்பவச் சுவையும், கொண்ட ஒரு நாவலை எங்கள் முன்னே கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறார். இது பல்துறை சார்ந்த தகவல் பெட்டகம். அவரது பரந்த அறிவிற்காக தலைவணங்குகிறேன். ஐ.நா. சாசனம் கூறும் உலகில் மனித இனம் ஒன்றே எனும் வாசகத்தை இது பிரதிபலிக்கிறது. வெகுவிரைவில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பாடத்திட்டத்தில் உள்ளடக்கக்கூடிய தனித்தன்மையை சமரசபூமி பெற்றிருக்கிறது என்பதில் எதுவித ஐயமும் இல்லை. சமரசபூமி புதிய இலக்கிய வடிவிற்கான வாயிலைத் திறந்துவிட்டிருக்கிறது.' இவ்வாறாக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், தங்கள் அறிமுக உரை, வாழ்த்துரை, நயப்புரைகளை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் வெளியிட்டனர்.

11.07.2004இல் இந்தியாவின் புதுவை மாநிலத்தில் உள்ள ஆந்திர மகாசபா மண்டபத்தில் தேவநேயப் பாவாணர் அரங்கில் கனடா நாட்டைச் சேர்ந்த திரு. செல்லையா அவர்களின் தலைமையிலான உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 9வது அனைத்துலக மாநாடு நடைபெற்றவேளை, இயக்கத்தின் மறைந்த முன்னாள் தலைவரான மலேசியப் பேராசிரியர் அமரர் இர.ந. வீரப்பனார் அவர்களுக்கு சமர்ப்பணமாக இந்த நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. அதிலே நூலை அறிமுகம் செய்த புதுவை மொழி பண்பாட்டுத் துறை நிறுவனர் பேராசிரியர் ப. மருதநாயகம் அவர்கள், ஜெயக்குமார் அவர்கள் மதம், இனம், மொழி, சாதி கடந்த உலகளாகவிய நோக்கை

அனைவரும் பாராட்டும் வகையிலே எழுதி இருப்பதாகவும், பண்டைய இலக்கியங்களும், இடைக்கால இலக்கியங்களும் உலகம் என்ற சொல்லை வைத்தே தொடங்குகின்றன. அந்த வகையிலே தமிழரின் மரபு பேணப்படுவதாகவும் பாராட்டி பேசியுள்ளார். மேற்படி வெளியீட்டு விழாவிலே சென்னைக் கிறிஸ்தவ கல்லூரி, தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் மோசஸ் மைக்கேல் பாரடே அவர்கள் "எதிர்கால மாந்த இனத்தின் ஏற்றத்திற்கு வழிவகுக்க வல்ல ஆய்வு ரீதியான அறிவியல் நோக்குடைய ஓர் அற்புத புதினத்தை இயற்றி தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளார் இந்தப் படைப்புத் திலகம்" என்று பாராட்டியிருக்கிறார். மேலும் அவர், 'நாவல், என்பதே புதுமையான படைப்பு எனப் பொருள் தருவது. அதனால்தான் அதனைப் புதினம் என்பர். ஆனால் சமரசபூமி புதுமைக்குப் புதுமை சேர்க்கிறது. என்ன புதுமை என்றால், படைப்பு இலக்கியத்தையும், ஆய்வு நூலையும் இணைத்து இரண்டின் சுவையையும், ஒன்றில் காட்டும் ஒப்பற்ற தன்மையே எனலாம். ஒரு 25 ஆண்டு கால ஆசிரியப்பணி அனுபவமுள்ள தமிழ்ப் பேராசிரியரான எனக்கு தெரியாத பல தகவல்களை இந்த நூல் கொண்டிருக்கிறது. பிஎச்டிக்காக ஆய்வேடுகளைப் படிக்கிறபோது செய்கிறபோது கூட ஏதாவது ஆய்வுக் கருத்தை தேடிப் பிடிக்க வேண்டியதாய் இருக்கிறது. அதுவும் இந்தக் காலத்திலே... பூதக் கண்ணாடி போட்டு பார்க்க வேண்டியதாய் இருக்கிறது. யாராவது எவனாவது ஒரு கருத்தாவது உருப்படியாக சொல்வானா? அப்படியென்று... அப்படிப்பட்ட உயர்ந்த ஆய்வுகள் இந்த நூலிலே விரவிக்கிடக்கின்றன.

'இப்படி ஒரு நூல் நீங்கள் சாதாரணமாகப் படிக்கமுடியாது. அதுவும் இன்றைக்கு தமிழ்நாட்டிலே வெளி வருகிற நாவல் வரிசையிலே இதனை வைக்கவே முடியாது. ஏனென்றால் இப்படிப்பட்ட நாவல் வரிசையிலே தாய்த் தமிழகத்திலே வெளியிடப்படுகின்ற நாவல்களின் சாயம்கூட இதிலே இல்லை.

'கவிதைபோல, ஆற்றொழுக்காக அப்படியே அலையலையான கருத்துக்களும், இனிய சொற்களும் புரண்டு வருகின்றன."

இவ்வாறு சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் வணக்கத்திற்குரிய திருத்தந்தை மோசசு மைக்கேல் பாரடே

அவர்கள் புதுவையில் மேற்படிநூல் வெளியீட்டு நிகழ்விலே மதிப்பீட்டுரை வழங்கி இருக்கின்றார். யுனெஸ்கோ கூரியர் தமிழ்ப் பிரிவு பேராசிரியர் ம்ணவை முஸ்தபா அவர்கள் புதுவையில் நடைபெற்ற மேற்படி விழாவிலே நூலினை வெளியிட்டு வைத்தபோது, 'ஜெயக்குமார் குமாரசாமி அவர்கள் ஒரு உன்னதமான நோக்கத்தை அடிப்படையாக வைத்து இந்த நூலை எழுதி இருக்கின்றார். அறிவில் பல விடயங்களை - சிந்தனையில் பல விளைவுகளை ஏற்படுத்திப் புதிய கோணத்தில் சிந்திக்கவும், அந்த சிந்தனைக்கு ஏற்ப செயல்படவும் தூண்டுகிற வகையிலே படைப்புக்கள் உருவாக்கப்படாத ஒரு காலகட்டத்தில் - மிக அற்புதமாக இந்த நூலை ஒரு நல்ல நோக்கத்தில் எழுதி இருக்கிறார்.' எனப் புகழாரம் சூட்டி இருக்கிறார். உ.த.ப. இயக்கத் தலைவர் செல்லையா அவர்களும் அனைத்து தமிழரும் தவறாது படிக்கவேண்டிய அற்புத நூல் என்பதால் அனைவரது கையிலே கிடைக்கும் வகையில் வெளியீட்டு நாளான அன்று நூலின் விலையை ஆசிரியர் குறைக்கும்படியாகக் கூறியுள்ளதாகவும் சபையிலே தெரிவித்தார்.

இந்த நூலின் முதல் பிரதியை இந்திய மாநாட்டிலே கலந்து கொண்ட எமது கனடா நாட்டின் சிறந்த இலக்கியவாதிகளில் ஒருவரான டாக்டர். விக்டர் பிகராடோ அவர்கள் பெற்றுக் கொண்டதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாட்டிலே புகழ்ந்து பாராட்டுப் பெற்ற இவரது சமரசபூமியை, 'ஆழமாக உருவகிக்கப்பட்டுள்ள ஒரு சமுதாயப் புதின வகை; கலாச்சார கூட்டு அமைதியான பயணத்தை அதிர்வு கொள்ளச் செய்து திக்குத் திசை தெரியாது தடுமாற வைக்கிறது, மனப்பொருமுதலின் அங்கதங்கள் சிந்திக்கத் தூண்டுகின்றன; இவரது சிந்தனை உலகம் முழுவதும் சிதறிக்கிடக்கின்ற தமிழரின் உள்ளுணர்வுக்கு தூண்டு சக்தியாக திகழும் என்று நம்பவைக்கிறது.' இவ்வாறு, தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் இருகூரான் அவர்கள் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவர் போலவே தமிழகத்தில் தி இந்து ஆங்கிலப் பத்திரிகையில் பணிபுரிந்து வருபவரும் 30 நாவல்களுக்கு மேல் எழுதிக் குவித்த பிரபல நாவலாசிரியரும் சென்னை, கொழும்பு குமரன் அச்சக உரிமையாளரும், ஈழத்தின் முற்போக்கு இலக்கியச் செம்மலுமான செ. கணேசலிங்கன் அவர்கள் சமரச பூமி வெளியிட்டு விழாவுக்கென அனுப்பிவைத்த தமது கருத்துரையிலே, 'ஆசிரியரின் பரந்த அறிவு, விருப்புக்கள், வெறுப்புக்கள், வாழ்க்கை அனுபவங்கள் எல்லாம் நாவலில் மறைமுகமாக வெளிவரும். ஆசிரியர்

தன் வாழ்வில் கூறவேண்டிய பல்வேறு ரக கூற்றுக்களையும் 250 பக்கங்களில் கூறிவிடுகிறார். டென்மார்க்கில் வாழ்ந்துவரும் ஆசிரியர் ஈழத் தமிழர் ஒரு சமரசபூமியை உருவாக்க விரும்புகிறார். அதன் ஆழ்ந்த பிரதிபலிப்பே இந்த நாவல். தமிழர் வரலாறு, அரசியல், பொருளாதாரம், சமூகவாழ்வு முறைகள், பண்பாடு, நாகரிகம் அனைத்தையும் ஒரு நாவல் மூலம் கற்க விரும்புவோர் இந்த நூலைத் தேடி வாங்கிப் படிக்கலாம். பயன் பெறலாம்.' என குறிப்பிட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 20.05.2005இல் இவரது சமரசபூமி நாவல் வெளியீடு செய்து வைக்கப் பெற்றபோது, சமரசபூமி பற்றிய உலகினர் பார்வைகளாக தமிழக வெளியீட்டு நிகழ்வுகள், தமிழீழ, உலகத் தமிழ் அறிஞர்களின், இலக்கியப் படைப்பாளிகள், வாசகர் வட்டங்களின் பாராட்டு விமர்சனங்கள் மற்றும் அவரது பிற படைப்புக்கள் பற்றிய தகவல்கள் அனைத்தும் அடங்கிய சிறப்பு மலர் ஒன்றினை 'உலக இலக்கிய ஒன்றியம்' இலங்கைக் கிளை அமைப்பாளர், இதழியலாளர், கவிமணி க.கோணேஸ்வரன் ஜே.பி. அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

1970இல் ஈழத் தமிழ் மாணவர்களின் கல்வித் தரப்படுத்தலுக்கு எதிராக முதன் முதல் ஆரம்பித்ததே தமிழ் இளைஞர் அமைப்பான 'தமிழ் மாணவர் பேரவை' என்ற அமைப்பாகும். கவிவேழம் ஆரம்பத்தில் தன்னையும் அந்த அமைப்பிலே இணைத்துக் கொண்டவர். அத்தகைய அவரது சமூக இலக்கிய பணிகளை பாராட்டி மேற்படி மாணவர் பேரவை அமைப்பின் தலைவராக இருந்து ஈழத் தமிழர் வரலாற்றில் சிறப்பிடம் பெறும் பெரியார், தமிழர் சமுதாயச்சிற்பி மதிப்பிற்குரிய பொ. சத்தியசீலன் பீ.ஏ. அவர்கள் இலண்டினில் இருந்து, அனுப்பிய வாழ்த்துரையும் மேற்படி சிறப்பு மலருக்கு அணி சேர்க்கின்றது.

அதிலே... 'சமரசபூமி நாவலிலே வரும் பூபதி என்ற பாத்திரம் எடுத்து வைக்கும் கருத்துக்கள் பிரமிப்பூட்டுவனவாக இருக்கின்றன. நாவலூடாக முடிந்த முடிபுகளாய் அடித்துக் கூறும் அவரது சிறந்த ஆய்வுகள் ஆய்வாளர்களையே பிரமிப்படைய வைக்கும். ஈ.வே.ரா. பெரியாரின் கொள்கைகள் உலகம் எங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும். மேலதிக ஆய்வுகளை இந்த நூலைப் படிப்போர் மேற்கொள்ள வேண்டும்.' எனவும் அதிலே பாராட்டியுள்ளார்.

மேற்படி, சிறப்பு மலரிலே தமிழகத்தின் இளம்பிறை பதிப்பக அதிபரும், பிரபல இலக்கியவாதியுமான எம்.ஏ. ரகுமான் அவர்கள், 'தமிழ் கதை

சொல்லும் மரபிலே புதிய சுருதியை இணைத்தல், படைப்பு வீச்சு, அர்த்த ஆழம், ஆங்காங்கே மெல்லிய நகைச்சுவையைத் தூவுதல், பாலியல் வசீகரங்களை வர்ணித்தல், முரண்பாடு, வாதப்பிரதிவாதம், முதலிய குணாம்சங்களைப் பொதிந்து படைப்பிலக்கியத்திலே பாரதிபாலன் தடம் பதித்து புகழ் பூத்து நிற்பது மனநிறைவினைத் தருகின்றது...' என இவர் பற்றி புகழாரம் சூட்டி இருக்கிறார்.

'சமரசபூமி' உலக நாவல்களின் தரத்தை எட்டிப் பிடித்துள்ளது.

'உலக வரலாற்றிலே என்றோ பேசப்படப்போவது இந்த நூல். இந்த நிகழ்விலே, வந்து கலந்து கொண்டுள்ள அனைவரும் அத்தகைய வரலாற்றோடு சம்பந்தப்பட்டவர்கள் ஆகின்றீர்கள் என்ற பெருமை உங்கள் அனைவரையும் சாரும். இந்த நூல் காலம் கடந்தும் வாழும். எல்லா உயிர்களும் தொழும். உலக மாதாவின் ஆசிக்கு உரியதாக உலக மொழிகளிலும் பவனி வரும்...' இவ்வாறாக ஈழத்தின் முன்னாள் ஆங்கில, தமிழ் ஊடகத்துறையைச் சேர்ந்தவரும், பிரபல இலக்கிய படைப்பாளியும் உலக இலக்கிய ஒன்றிய அனைத்துலக தலைவருமான தமிழ்மணி யோகா பாலச்சந்திரன் அவர்கள் கனடா, ரொறன்றோவிலும் மொன்றியாலிலும் இடம்பெற்ற நூல் அறிமுக நிகழ்விலே பலரது கரகோசங்களுக்கு மத்தியில் கவிவேழத்தைப் பாராட்டி இருக்கின்றார்கள்.

மேற்படி 16.10.2005 இல் கனடா ரொறன்றோவில் சிவிக்ஸ் சென்றர் என்னும் புகழ் பெற்ற சிறப்பான அவையிலே இடம் பெற்ற நூல் அறிமுக விழாவில் பேராசிரியர் இரா. பாலசுந்தரம் அவர்களும், "நண்பர் ஜெயக்குமார் குமாரசாமி அவர்கள், சிறந்த எழுத்தாளர், சிறந்த கவிஞர், சிறந்த ஆய்வாளர்... இவரது கற்பனையை விஞ்சி இவரது மிகச் சிறந்த ஆய்வுகள் என்னை வியப்படைய வைத்தது. அத்தனை ஆய்வுகளையும் தனி நூலாக எழுதி இருந்தால் அற்புதமான படைப்பு ஒன்று தமிழிற்கு கிடைத்திருக்கும், இப்படி ஒரு நூல் இதுவரை நான் பார்த்ததில்லை' என்று தமது மதிப்பீட்டுரையிலே பாராட்டி இருக்கிறார். மேற்படி விழாவிலே, 'எதைச் சொன்னாலும் ஒரு கலை அம்சத்தோடு மிகச் சிறந்த முறையிலே சொல்கின்ற அற்புத ஆற்றல் எனது நண்பர் ஜெயக்குமார் அவர்களிடம் இருக்கிறது.' என்று எனது வாழ்த்துரையை கவிவேழத்திற்கு நானும் அங்கே வழங்கி நின்றேன். விழா ஆரம்பத்தில் கலைமாமணி சுகந்தி பாலஸ்கத்தா அவர்கள் சமரசகீதம் பாடி அவையினரைக் கவர்ந்தார்.

மேலும், றொறன்ரோவில் நடைபெற்ற கவிவேழத்தின் சமரசபூமி விழாவிலே யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முன்னாள் மானிடவியல் விரிவுரையாளரும் பிரபல விமர்சகருமான முற்போக்கு சிந்தனாவாதி. இராசேந்திரன் அவர்கள் மேற்குலகினதும் கீழைத் தேசத்தினதும் அறிஞர்கள், தீர்க்கதரிசிகள், இலக்கியப் படைப்பாளிகளதும் ஆக்கங்களுடன் ஒப்புமை செய்து 'உண்மையான நாவலும் இது தான்' என தமது விமர்சன ஆய்வுரையை முடித்து வைத்தார். அவ்விதமே மேற்படி விழாவுக்கு தலைமை ஏற்ற முற்போக்காளர் தேவன் அவர்களும், தத்துவஞானி டாக்டர். இராதாகிருஷ்ணன், ஏங்கெல்ஸ் முதலான அறிஞர்களின் கூற்றுக்களுடன் நூலாசிரியரை ஒப்பிட்டார். அத்துடன் ஒரு அரவாணி இவரது இந்த நூலைப் பாராட்டி கடிதம் அனுப்பி இருந்தமை வேறெந்த நூலுக்கும் கிடைக்காத பெருஞ் சிறப்பு என தமது தலைமை உரையிலே குறிப்பிட்டார். முன்னாள் 'எண்ணம்' ஆசிரியர் மகேந்திரன் அவர்களும் இந்திய ஜனாதிபதி மதிப்பிற்குரிய அப்துல்கலாம் அவர்கள் கூறுவது போன்று இது ஜெயக்குமார் அவர்களின் கனவு என்பதாக தமது நீண்ட உரையை உணர்ச்சியுடனும் சுவையுடனும் கூறி நின்றார்.

30.10.2005இல் கியூபெக் மொன்றியாலில் தெற்காசிய முதியோர் இணையம் ஏற்பாடு செய்த மேற்படி நூல் அறிமுகவிழாவிலே இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மலேசியா நாட்டைச் சேர்ந்த மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. மேற்படி முதியோர் இணைய அமைப்பின் செயலதிபரும் முன்னாள் அதிபருமான பவளம் சோமசுந்தரம் அவர்கள் தலைமையிலே ஆங்கிலத்திலும் தமிழிலுமாக மேற்படி நூல் அறிமுகவிழா நடைபெற்றது.

"இப்படி ஒரு நூல் இன்றைய காலகட்டத்தில் வெளிவருவது வரவேற்க வேண்டியது. இந்த நூல் பல மொழிகளிலும் பெயர்க்கப்பட வேண்டிய ஒரு நூல். இது புதியபுனித மதநூல் வரிசையில் வைத்து எண்ணத்தக்கது." இவ்வாறு, தமது ஆதங்கத்தை இன, மொழி, மதம் கடந்து அனைத்து நாட்டினரும் வெளியிட்டது உலகத் தமிழர் இலக்கிய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒன்றே. எமது ஈழத் தமிழருக்கு அத்தகைய சிறப்பு கிடைத்திருப்பதையிட்டு ஒவ்வொரு ஈழத் தமிழனும் பெருமைப்பட வேண்டும்.

மேற்படி விழாவிலே நூலை ஆங்கிலத்திலும், தமிழிலுமாக அறிமுகம் செய்து வைத்தவர், உலக இலக்கிய ஒன்றியத்தின் அனைத்துலக தலைவர்

தமிழ்மணி யோகா பாலச்சந்திரன் அவர்கள். சிறுகதைக்கும், நாவலுக்குமான வரையறை சட்டத்தை புதுமைப்பித்தன் முதலான பிரபல எழுத்தாளர்களின் வரைவிலக்கணத்தின் பிரகாரம் எடுத்துரைத்து அத்தகைய பிரபலமான படைப்பாளிகளின் அன்றைய காலப்பகுதியில் வெளிவராததும் இப்போது வெளிவந்துள்ளதுமான புதிய இலக்கிய வடிவமான இந்த சமரசபூமி நாவலை வரலாற்று நாவலா? சமூக நாவலா? விஞ்ஞான நாவலா? ஆன்மிக நாவலா? இதனை எந்த வரையறைக்குள் உட்படுத்தலாம்? என்று எழுத்துலகம் இப்போது திணறிக் கொண்டிருக்கிறது. அத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த இந்த சமரசபூமி 'ஒரு காலத்தில் வரலாற்றுச்சுவடு பதிக்கப்போகும் ஓர் அரிய பொக்கிசம்' 'இந்த மனிதாபிமானம் மிக்க எழுத்தாளர் தனது வாழ்நாளில் உலகிற்காக ஏதாவது ஒரு நன்மை செய்து விட்டு போகவேண்டும் என்ற ஓர் உயர்ந்த நோக்கத்தில் இந்த நூலைப் படைத்துள்ளார். அவர் பல சிரமங்களுக்கு மத்தியில் பல இடங்களிலும் கொண்டுசென்று வெளியிட்டு வருகின்றார். பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக இதனை எழுதவில்லை.' இவ்வாறு உணர்ச்சிவசப்பட்டு பேசி, எங்கள் பிறப்பின் நோக்கம் உலக ஜீவன்களுக்கு நன்மை செய்வதற்காகவே. இன்றைக்கு மனிதனை மனிதன் பிடித்துத் தின்கிறான். பட்டங்கள், பதவிகள் என்பன சுயநலமாக வாழ்வதற்குத்தானா? 'கார்கள், பங்களாக்களில் சொகுசாக வாழ்ந்து சுயநலமாக சிந்தித்து மனித வேற்றுமையை விதைத்து அதிலே குளிர்காயும் இன்றைய வேதனைமிக்க மனிதப் போக்குகள் மனித வர்க்கத்தை அழிவுப் பாதைக்குத்தான் கொண்டு சென்றுகொண்டு இருக்கின்றது.

அத்தகைய சுயநலமிகள் வாழுகின்ற இந்த உலகத்தில் தான் இப்படிப்பட்ட மனிதாபிமானம் மிக்க கவிவேழமும் தோன்றி தொண்டாற்றி வருகின்றார். அவரது அற்புத நூலைப் படிப்போர் சிந்தித்து தங்களாலும் மேற்கொண்டு புதிய நூல்களை உருவாக்க முடியும்". இவ்வாறு கூறி மேலும், தொடர்ந்த யோகா பாலச்சந்திரன் அவர்கள், கொழும்பு கலைச்சங்க தாபகரான மறைந்த தனது கலைத் தொண்டரான கணவர் கே. பாலச்சந்திரன் அவர்கள் முன்னர் ஈழத் தமிழ் அறிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்களை கௌரவித்து வந்தவர் எனவும், தமிழகத்தில் இருந்து பொன்னாடைகளை எடுப்பித்து ஜனாதிபதிகள், பிரதமர்கள், அமைச்சர்கள் முன்பாக ஈழத் தமிழ் கலைஞர்களைக் கௌரவித்து பொன்னாடை போர்த்தி கொழும்பிலே விழா எடுத்தவர் எனவும், அவர் மறைந்தபின் எஞ்சிய ஒரு பொன்னாடையை தாம் கனடா வரும்போது அவரது நினைவாக எடுத்து வந்து கவனமாகப் பேணி வந்ததாகவும், அதனை இந்த மனித நேயம்மிக்க படைப்பாளிக்கே

போர்த்தி கௌரவிக்க விரும்புவதாகவும் கூறி, சபையில் இருந்த தனது சகோதரர் இராதா மனோகரனை அழைத்து கவிவேழத்திற்கு பொன்னாடை போர்த்தும்படி கூறிக் கொண்டிருந்தபோது, கவிவேழத்தின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.

அந்த விழாவிலே, ஈழத்தின் பிரபல தமிழ் பொப்பாடகராக இருந்து, தமது இசைப்பணியை கனடாவில் தொடர்ந்து மேற்கொள்ளும் மூத்தோர் இணைய தலைவர் இசைப்பொழில் ஓ சீலா புகழ் அமுதன் அண்ணாமலை அவர்களும் கவிவேழத்திற்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து சமரசகீதம் பாடியது அனைவரையும் களிப்பில் ஆழ்த்தியது.

பிரபல வானொலி அறிவிப்பாளர் திருமதி நந்தினி பிலிப் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியமை அனைவரையும் கவர்ந்தது. ஐரீஆர் வானொலி அறிவிப்பாளர் திருமதி உமாராஜ் அவர்களது வரவேற்புரை அனைவரையும் ஈர்த்தது.

மேற்படி விழாவிலே சிறப்புரைகள், நயப்புரைகளுடன், நூலாசிரியரை வாழ்த்திப் பாடியவர்களுமாக உலக இலக்கிய ஒன்றியத்தை சேர்ந்த திருமதி கீதா மகேந்திரன் மற்றும், சிவமலர் கனகாரஞ்சன், மலேசிய சட்டத்தரணி சரோஜினி சீனிவாசன், சரோசினி இராமலிங்கம், புவனேஸ்வரி செல்வரெத்தினம், மும்பை மாநிலம் இந்தியாவைச் சேர்ந்த மரியா ஏனும் யோகா ஆசிரியை, என பெரும்பான்மையாக பெண்களது உற்சாகமான நயப்புரைகள், வாழ்த்துப்பா, சமரசகீதம் என்பவை தமிழிலும் ஆங்கிலத்திலுமாக நூலுக்கு கிடைத்தது பேரதிசயமாக இருந்தது. பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாட்டவர்களும், ஆங்கிலத்திலே தங்கள் உரையை ஆற்றினர். அவர்கள், 'அனைத்து நாட்டு மக்களும் சகோதரராக அன்னியோன்னியமாக கனடா நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். ஏனைய ஐரோப்பா நாடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். அத்தகைய மேலை நாடொன்றில் இருந்து எழுதி இப்படி ஒரு அற்புத நூல் வெளிவருவது எங்களுக்கும் மனமகிழ்வைத் தருகிறது. இந்த நூனல் ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கும் நாளை எதிர்பார்க்கிறோம். மொழி புரியாவிட்டாலும் இந்த நூலை பெற்றுக்கொள்ள விரும்புவதாக கூறி அவர்களும் நூலைப் பெற்றுச் சென்ற காட்சி பார்வையாளர்களைக் களிப்பிலே ஆழ்த்தியது. அவர்களில் பாகிஸ்தானை பிறந்தகமாக கொண்ட முபஷேர் றசூல் அவர்கள் மொன்றியால் ஆட்சிமன்ற தேர்தல் வேட்பாளர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. இதுதவிர விழா

தொடங்குமுன் மங்கள விளக்கினை ஏற்றி வைத்தவராக பங்களாதேஷ் நாட்டவரான இசுலாமிய நண்பர் ஹுசேன் அவர்கள் முதல் தீபத்தை ஏற்றினார். அதன்பின்பு திருமதி தியாகராஜா மற்றும் மூத்த பெண்மணிகள் தீபமேற்றினர்.

உலகக் கவிஞர் மாநாட்டிற்கு என அமெரிக்கா செல்லும் வழியில் கனடா வருகை தந்திருந்த தமிழகத்தைச் சேர்ந்த பன்னாட்டு தமிழ் உறவு மன்ற நிறுவனர், வா.மு.சேதுராமன் (பெருங்கவிக்கோ) அவர்கள் சமரசபூமி செய்தி அறிந்து கனடா பல்கலைக்கழகத்திலும், கனடா ஐரோப்பா வானொலி தொலைக்காட்சிகளிலும் சமரசபூமி பற்றி புகழ்ந்துரைத்து, தமிழகத்தில் இருந்து வெளிவரும் தமிழ்ப்பணியின் 2006 - சித்திரை இதழிலே பாராட்டி எழுதி இருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ்த்துறையைச் சேர்ந்த முனைவர் வா.மு.சே. ஆண்டவர் அவர்களும், தமிழ்ப் புதின வரலாற்றிலே ஒரு மைல்கல் என போற்றப்படும் சமரசபூமியைப் படித்தேன். திளைத்தேன். அற்புதமான படையல். இதனை சென்னைப் பல்கலைக்கழக இள முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்யவழங்கியுள்ளேன். என அவரது பாராட்டு விமர்சனத்தில் குறிப்பிட்டிருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு, உலகம் போற்றும் ஆய்வறிஞரும் இலக்கிய வாதியுமான அருமை நண்பர் பாரதிபாலனின் இலக்கிய ஆக்கங்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தவை.

இவரது, 'கடற்கன்னி காவியம்' என்னும் காவியம் 18.04.2002இல் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அரங்கேறிய போது அதனை அப்போதைய இந்துக்கலாச்சார அமைச்சராக இருந்த கௌரவ தி. தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் வெளியீடு செய்து வைத்தார். மேற்படி விழாவிலே பல்கலைக் கழக துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை உட்பட பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள், மாணவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.
அந்த விழாவிலே அதனை பாராட்டி விமர்சன உரை பகர்ந்த அப்போதைய தமிழ்த்துறை தலைவராக இருந்த பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் மேற்படி காவியத்தை சிலப்பதிகாரத்தின் நடையுடன் ஒப்பிட்டு

சிலப்பதிகாரத்தைவிட சுருங்கிய நடை எனவும் ஆனால் தெளிவான நடை எனவும் குறிப்பிட்டு, இக்கதையினைப் படிப்பவர் நெஞ்சினை உருக்கும் வகையிலே காவியமாகப் படைத்துள்ளார் பாரதிபாலன் எனவும், தான்வாழும் டென்மார்க் மண்ணின் கதையை தமிழ்நாட்டு, 'நீலத் திரைக்கடல் ஓரத்திலே நித்தம் தவம் செய்யும் குமரி...' போல எமக்குக் காட்டுகிறார் கவிஞர் என்றும், முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்தர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோர் பாடிய... நீரர மகளிரை... நாம் அறிந்திருப்பதால் கடற்கன்னியை நாம் சுவையுடனே இனங்காண முடிகிறது எனவும், உலகம் எல்லாம் இருக்கிற தமிழர்களின் தாய் சிறப்பான இலக்கிய அணிகளைப் பூண்டுள்ளாள். அவள் எழில்கொள் மேனிக்கு மேலும் ஒரு அழகான அணியாக 'கடற்கன்னி காவியம்' வழங்கப்படுகிறது. பாரதிபாலன் இதுபோன்ற காவியங்களை எங்களுக்கு தர வேண்டும். என்றும் பாராட்டி இருக்கின்றார்.

'இவரது கடற்கன்னி காவியத்திற்கு தமிழ் இலக்கியப் பரப்பிலே அழியாத இடம் ஒன்று உள்ளதை ஆய்வாளர்கள் நன்கு அறிவர்' என பேராசிரியர் எஸ் சிவலிங்கராஜா அவர்களும் சமரசபூமி சிறப்பு மலரிலே குறிப்பிட்டுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தராக இருந்த பொற்கோ அவர்கள்.. 'ஒரு மொழியில் இருந்து இன்னொரு மொழிக்கு ஒரு காவியத்தை கொண்டு வரும்போது கவிஞன் பல இடர்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். பாரதிபாலனும் அவ்வாறான பிரச்சனைகளை எதிர் கொண்டிருக்கிறார். பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது அவற்றைச் சந்திக்கிற முறைகள் ஒருவருடைய திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப வேறுபடும். அப்படி வேறுபடுவது ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்குக் கூட ஒரு அடையாளம் என்றே கொள்ளப்பட வேண்டும்.' எனவும் கூறி இவரது மொழி பெயர்ப்புக் காவியத்தை பாராட்டி மேற்படி நூலுக்கு தமது ஆசி உரையை வழங்கி இருக்கின்றார். முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக கல்வி உளவியல் துறை பேராசிரியரும் கனடாவில் வாழ்ந்து மறைந்தவருமான சிறந்த இசைக் கலைஞர் பேராசிரியர் ச. முத்துலிங்கம் அவர்கள், ....சுவாமி விபுலானந்தர்தம் மொழி பெயர்ப்புக் கவிதைகள் தரும் சுகம்போல இவரது கவிதைகளும் மிக அருமை எனவும் இன்னொரு மொழியில் இருந்து மொழி பெயர்த்தது என்று கூறமுடியாதபடி மிகவும் அழகாகக் கவிதை வடித்துள்ளார் எனவும், எங்களது கல்வி அறிவை நடைமுறை உலகிற்கு ஏற்றாற்போல மாற்றி அமைத்துச் சென்ற ஐரோப்பியர் வாழுகின்ற மேலைத் தேசத்தில் இருந்து கொண்டு தம்மாலான தமிழ்த்

தொண்டு செய்துவரும் பாரதிபாலன் சிறிது காலம் தனது மாணவராக இருந்தவர் எனவும்: அவரது கவிதைகளில், கதைகளில், ஆய்வுகளில் தாமே மெச்சும்,விடயங்கள் ஏராளம் என்றும் தமது அணிந்துரையிலே குறிப்பிட்டிருக்கிறார்.

**இவ்வாறு கவிவேழத்தின் இலக்கிய படைப்புக்களில், கவியரங்கு, கவிதா நிகழ்வு, இசை நாடகம் முதலான அவரது பொதுமேடை அரங்க நிகழ்வுகளும் தனித்தன்மை வாய்ந்தவை. படித்தவர்கள், பாமரர்கள் என்றில்லாமல் அனைவரும் பாராட்டும் வகையிலே அமைந்திருப்பவை.**

தமிழ்நாடு மதுரையில் பகவான் பதிப்பகத்தால் 1990-களில் வெளியாகி சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற இவரது கவிதைத் தொகுதியான 'கவிதைக் கனவுகள்' தொகுதியில் கவியரங்கக் கவிதைகளும் உள்ளன. மேற்படி நூலிலே வாழ்த்துரைத்த ஈழத்தின் பிரபல கவிஞர்களில் ஒருவரான கவிஞர் கோப்பாய் சிவம் (சிவானந்த சர்மா) அவர்கள்'.

'...கவிதைகளைப் படித்து இரசிப்பதிலும் அதனை இயற்றியவர் அனுபவித்து வாசிப்பதில் ஓர் இன்பம் இருக்கிறது. அதுவும் பாரதிபாலனோ தமது கவிதைகளுடன் ஒன்றி அருமையாக வாசிப்பார். இருவரும் ஒன்றாக பல கவியரங்குகளில் கலந்து கொண்டிருக்கிறோம்". என நூலினை பாராட்டியிருக்கிறார். அவ்விதமே நூலுக்கு ஆசியுரை வழங்கிய திருக்கோணமலை தமிழ் அறிஞர் பண்டிதர் இ. வடிவேல் அவர்களும், 'மகாகவி பாரதியின் கவிதைச் செறிவிலும், சமூகநோக்கிலும், மிடுக்கிலும் ஒன்றிவிட்ட பாரதிபாலன் (திரு. கே. ஜெயக்குமார்) அவர்கள் கவிதைக் கனவுகள் என்ற கவிதைத் தொகுப்பினைப் படைத்து தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்துள்ளார். தமிழ்த்தாய் வாழ்த்துடன் தனிக் கவிதைகள், குறுங்காவியம், இசைப்பா என்பவைகளால் தமிழன்னையின் தகவும் தளர்வும், தமிழினத்தின் தாகமும் சோகமும், தத்துவச்செறிவோடு தமிழ் மணங்கமழ இந்நூலில் தரப்பட்டிருக்கிறது...' என்றவாறு மேற்படி நூல் பற்றி ஆசிரியரைப் பாராட்டியுள்ளார்.

திருக்கோணமலையைச் சேர்ந்த பிரபல கவிஞரும், பத்திரிகையாளரும், சமாதான நீதிபதியும் உலக இலக்கிய ஒன்றிய இலங்கை அமைப்பாளருமாகிய கவிமணி. க. கோணேஸ்வரன் அவர்கள் இவரது கவியாற்றலைப் பற்றி

குறிப்பிடும்போது, "பாரதிபாலனின் கவிதைகளில் தமிழ் துள்ளி விளையாடும். வார்த்தைகள் வளமிகக் கொண்டு வானத்தையும் துளைத்தெடுக்கும்.

திருக்கோணமலையில் பல கவியரங்குகளில் உடனிருந்து கவிசெய்த அனுபவம் எனக்குண்டு. அவருடன் கவிபாடச் செல்லும்போதெல்லாம் என் நிலையைத் தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டு பரீட்சைக்குச் செல்லும் மாணாக்கனைப் போலவே கவனத்துடன் செல்வேன். அவர் கவியாற்றலில் உள்ளூர எனக்கொரு பயம். இன்று பாரதியார் உயிரோடு இருந்தால் பாரதிபாலன் என்று பெயர் சூடியமைக்கு தட்டிக் கொடுத்திருப்பார் இது வெறும் வார்த்தைப் புகழ்ச்சியல்ல.' என்று கவிவேழத்தின் சமரசபூமிக்குரிய வாழ்த்திலே குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ்நாடு, சென்னை பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த மறைந்த பேராசிரியர் வெ. தெ. மாணிக்கனார் அவர்களே 1990-களில் இவருக்கு கவிவேழம் என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கிறார். பேராசிரியரின் முழுமையான நூல்மதிப்பீடு கவிவேழம் பற்றிய சமரசபூமி சிறப்பு மலரிலே முழுவதாக இணைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பேரறிஞர் மாணிக்கனார் கட்டுரையின் ஓரிரு முக்கிய வரிகளை இங்கே கோடிட்டுக் காட்டுவது பொருத்த முடையது.

'...உள்ளத்துள்ளதும், உணர்ந்துரைப்பதும் தெள்ளுதமிழில் தெளிந்துரைப்பதும் கவிதை எனக் கருத்துரைப்பர் கவிமணி. அப்பண்புகள் முழுவதையும் இந்த நூலிலேபார்க்கிறேன்.'

'கவிதைகளைச் செறிவோடும் சீரிய எண்ணத்தோடும், படைத்தளித்துள்ள அவர் நாட்டு நலம் கருதும் பண்பாளராக விளங்குகிறார். சமூகநலம் போற்றும் சமூகச் சார்பாளராகத் திகழ்கிறார். விடுதலை உணர்விற்கு உரிமைப்பா இசைக்கிறார். இவற்றிற்கான அடையாளச் சின்னங்களே இவரது கவிதைகள்...' இவ்வாறு 90-களில் வழங்கிய மாணிக்கனாரின் அந்த மதிப்பீட்டுரையும் அன்னார் எங்கள் கவிஞருக்கு அன்று வழங்கிய கவிவேழம் பட்டமும் ஒரு தீர்க்கதரிசி திருவாய் மலர்ந்து அருளிய வாக்குகள் என்பதாகத் தான் இன்றைய நாட்களில் அவரை நினைவு கூர வைக்கின்றது. மேற்படி கவிதைக் கனவுகளில் இடம் பெற்ற குறுங் காவியமான 'பாருக்குள்ளே வல்ல நாடு' குற்றுயிராய் குலைந்து அழியும் தமிழினத்தின் ஏக்கப்

பெருமூச்சாக அமைந்துள்ளது.' என அப்போது புதுவைப் பல்கலைக்கழக தமிழ் இணைப்பேராசிரியராக இருந்த பேராசிரியர் நா. ஆறுமுகம் அவர்கள் தமது அணிந்துரையிலே குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது. திருக்கோணமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் கவிவேழத்தின் அந்தக் கவிதை நூல் 16.06.1990இல் வெளியீடு காணுமுன் சிங்கள இராணுவ கெடுபிடியால் அனைத்துத் தமிழரும் நகரை விட்டு வெளியேறும் போது, கவிவேழமும் அந்த 90களில் திருக்கோணமலை நகரை விட்டு 13.06.1990 நள்ளிரவில் வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அதிலே தனது சொந்த நாட்டு சூழலையும், புலம் பெயர் நாட்டு சூழலுடன் இணைத்து குறுங்காவியம் ஆக்கி இருக்கும் `பாருக்குள்ளே நல்ல நாடு என்னும் பகுதி இன்றும் வியப்பினைத் தருகிறது.

அவர் மேற்குலகிற்கு புலம்பெயருமுன் தாயகத்தில் இருந்தபடி எமது இன்றைய மேற்குலகைப் படம் பிடித்துள்ளார்.

அவரது திறனை வியந்து போற்றாமல் இருக்க முடியவில்லை. அவரது குறுங்காவியம் கூறும் ஓராயிரம் உண்மைகள் இன்றைய காலகட்டத்திலும் தொடர்ந்தபடிதான் இருக்கிறது.

எதிர்காலத்தில் இது ஒரு ஆவணம். பிற்கால தமிழரின் ஒற்றுமைக்கும் இதுவே வித்திடக் கூடும். **கவிவேழத்தின் அத்தகைய பாருக்குள்ளே வல்லநாடு குறுங் காவியத்தையும் இதிலே இணைப்பதில் கவிவேழத்திற்கே மிகுந்த ஆர்வம் இருப்பதை இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும்.** கவிவேழத்தின் நூலுக்கு சாட்சியாக, வன்னியில் இருந்து சமரசபூமி நூல் சிறப்பு மலருக்கு வந்த வாழ்த்தினை நோக்குவோம்.

`இன வன்செயலுக்கு தலைநகராகத் திகழ்ந்து வந்த திருக்கோணமலையில், என்னுடன் இணைந்து காந்திய பணியாற்றியவர். இலக்கிய முயற்சிகளை வளர்த்துக்கொண்டவர். திருக்கோணமலையில் அவர் வாழ்ந்த அந்த வேளை மானிட அவலங்களுக்குக் கண்கண்ட சாட்சியாக இருந்து தற்போது புலம் பெயர்ந்து வாழ்கிறார்.'

இவ்வாறு கவிவேழத்தின் சமரசபூமி யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் அறிமுகவிழா செய்யப்பட்டபோது, வெளியான சிறப்பு மலரிலே

வாழ்த்துரைத்துள்ளவர், வன்னியில் இருந்து வெளியாகும் விஞ்ஞான சஞ்சிகையான அறிவுக்கதிர் ஆலோசகரான சமுகயோகி கலியுகவரதன் அவர்கள்.

வடபகுதியில் கவிவேழம் பங்கு பற்றிய பல நூறு கவியரங்கக் கவிதைகள், தனிக் கவிதைகள், பத்திரிகை சஞ்சிகைகளுக்கு எழுதிய கவிதைகள், இவரை ஆசிரியராகக் கொண்ட கல்லூரி கை எழுத்துச் சஞ்சிகையான கலைச்சுடர் ஆகியவை அனைத்தையும் இவருடன் திருக்கோணமலையில் அறிமுகமாகி நட்புறவுடன் பழகியவரும் திருக்கோண மலையில் சிறிதுகாலம் வசித்தவருமான வடமாராட்சியில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் யாழ்ப்பாணம் நல்லூரிலே இவரது வீட்டிற்குச் சென்று கவிவேழத்துடனான தனது நட்பினைக் கூறி தனது இருப்பிடத்தை திருக்கோணமலை எனக் கூறி அனைத்து எழுத்து பிரதிகளையும் பெற்று வரும்படி கவிவேழம் தனக்கு கூறியதாக கவிவேழத்தின் சகோதரரிடம் இருந்து அனைத்தையும் பெற்று சென்று விட்டாராம். கவிவேழம் அனுமதிக்காது, அவை அனைத்தையும் பெற்ற அவர் பின்னர் திருக்கோணமலைக்கு செல்லவில்லையாம். கண்காணாமலே மறைந்து விட்டாராம். தனது சகோதரரைக் கடிந்தபடி பின்னர் ஊருக்கு வந்து நபரின் முகவரியை தேடிப் பிடித்து, அந்த நபரது ஊருக்கு 4,5 தடவை சென்ற போதும் இறுதியில் ஒரு சிலவற்றையே மீட்க முடிந்ததாம். தான் கவிதை எழுதிப் பழகவே அவற்றை வாங்கிச் சென்றதாக அந்த நபர் கூறினாராம். பெரிய சொத்துக்களை இழந்தது போன்று இன்றும் கலங்கும் அந்தக் கவலை அவருக்கு மட்டுமல்ல தமிழ் கூறுநல்லுலகிற்குமே.

ஐரோப்பாவிலும், இவரது கவியரங்கைக் காண கூட்டம் அலைமோதுவதை பல சந்தர்ப்பங்களில் கண்டதாக இவரது உலகப் புகழ் பெற்ற சமரசபூமி என்னும் அறிவியல், ஆன்மிக நாவலில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தினர் வாழ்த்து உரைத்துள்ளார்கள்.

டென்மார்க்கின் பிரபல திரைப்படத் தயாரிப்பாளரும், எழுத்தாளரும், அலைகள் இணையத்தள பொறுப்பாளருமான கி. செ. துரை அவர்கள் இவரது இலக்கிய ஆக்கங்கள் பற்றி தமது இணைய தளத்திலே சிறந்த விமர்சனங்களை எழுதி இருந்ததும், ‘பாரதியின் சுடர்மையை உங்கள் கவிதைகளில் தரிசித்தேன்’ என இவரது கவிதை நூலைப் பாராட்டி

1993இல் பிரத்தியேகமாக எழுதி இருந்த பாராட்டு விமர்சனமும் இங்கே குறிப்பிடத்தக்கது.

அவர்போலவே டென்மார்க்கில் வாழ்ந்து இலக்கியப் பணியாற்றி மறைந்த இரு பிரபல கவிஞர்களான முல்லை யூரான், கட்டுவன் கவிஞர் சிவஞானம் ஆகியோர் தங்கள் புலம்பெயர் வருகைக்குப் பின்னே டென்மார்க்கிற்கு புலம் பெயர்ந்த எமது கவிவேழத்தில் பேரன்பு வைத்து அவரது திறமைகளை பட்டி தொட்டி எங்கும் பரப்பியவர்கள். இதனை கவிவேழம் வேதனை உணர்வுடன் என்னிடம் தெரிவித்துள்ளார்.

01.01.1995இல் முல்லையூரான் அவர்களின் 'காகம்' சஞ்சிகை அறிமுகவிழாவிலே தாம் ஆற்றிய இலக்கிய சொற்பொழிவினை முல்லையூரான் நினைவாக இங்கே பதிவாக்க வேண்டும் என்ற கவிவேழத்தின் ஆவலைப் பூர்த்தி செய்துள்ளேன். 'உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் டென்மார்க் கிளைச் செயலதிபராக இருந்த சிவஞானம் அவர்கள் முன்னர் ஈழத்திலே சுதந்திரனின் சஞ்சிகையான சுடரில் பணி புரிந்தவர். டென்மார்க்கில் அவரால் ஆரம்பிக்கப்பெற்ற அரும்பு சஞ்சிகையிலும், சிறுவர்களுக்கான தமிழாரம் சஞ்சிகையிலும் கவிவேழம் அவர்களை இணையாசிரியராக இணைத்து புலம் பெயர் தமிழ்ப்பணியை ஐரோப்பாவிலே பரவ வகை செய்தவர்.' தந்தை செல்வாவின் பாசறையில் வளர்ந்த இளவல்... பின்னர் டென்மார்க் பெயர்ந்தவர். த. வி. கூட்டணியில் இளைஞர் அமைப்பைச் சேர்ந்த இவர்பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னாள் தலைவர் அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்களும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களும் பாராட்டி இருப்பதாக அவரது 'தணலில் நின்று' என்ற கவிதைத் தொகுதியில் இருந்து அறிய முடிகிறது. கவிஞர் சிவஞானம் அவர்கள் கவிவேழம்மீது தீராத பற்று கொண்டு அவருடன் இணைந்து பணிபுரிவதை பெருமையாகக் கருதியவர்.

அவ்வாறே, டென்மார்க் எழுத்தாளர்களில், தமிழ் டேனிஷ் நட்புறவுச் சஞ்சிகையான கற்பகம் பொறுப்பாசிரியர் து. செல்வகுமார் (சுதந்திரன்), அவர்கள் கவிவேழத்தின் எழுத்துச் சுதந்திரத்திற்கு களம் தந்தவர் என்பதாக நன்றியுடன் கூறிக் கொள்வார்.

முன்னாள் தத்துவ விரிவுரையாளரான பிரபல எழுத்தாளர் க. ஆதவன் அவர்கள் கவிவேழத்துடன் நட்புறவுடன் பழகிவருபவர். பாரிசில் இருந்து

வெளிவரும் ஈழமுரசு பத்திரிகையில் கவிவேழத்தின் சிறுகதை, ஆய்வுக் கட்டுரை முதலானவை வெளிவர அவரே வகை செய்ததாக கவிவேழம் அவர்கள் நினைவு கூர்வார். எழுத்தாளர் தருமகுலசிங்கம், கவிஞர் எம்.சி. உலகநாதன் நிர்மலா ஆனந்தன், இராசேந்திரம், கரவை தாசன், இணுவை சத்தியதாஸ் ஆகியோர் டென்மார்க்கில் கவிவேழத்தின் தமிழ்ப்பணிக்கு ஆதரவு தந்தவர்கள் தந்து வருபவர்கள் என அவரது ஏனைய நூல்கள், சஞ்சிகைகள் தரும் தகவல் ஊடாக அறிய முடிகிறது. கவிவேழம் அவர்களின் நாடகம் (ஸ்கிறிப்ற்) தயாரிக்கும் ஆற்றல் பற்றி சுவிஸ் நாட்டில் இடம் பெற்ற நாடகப் பட்டறை ஒன்றிலே ஈழத்தின் சிறந்த கலைஞர்களில் ஒருவரான ஈழக் கூத்தன் தாசீசியஸ் அவர்கள் டென்மார்க்கின் பிரபல எழுத்தாளரும் நாடகத் தயாரிப்பாளருமான யாழ்பல்கலைக் கழக முன்னாள் விரிவுரையார் க. ஆதவன் அவர்களிடம் பாராட்டிக் கூறியதாக அறிய முடிகிறது...

அவ்வாறான பெறுமதிமிக்க கவிவேழத்தின் ஆக்கங்களில் அரங்க மேடை இலக்கியங்கள் காற்றுடன் கலந்து மறைந்து போனவையாக இருக்கக்கூடாது.

உலகத் தமிழர் வரலாறே கவிவேழத்தின் உள்ளங்கையில் என்று கூறப்படும் அளவுக்கு உளவியல் தேர்ந்த இலக்கிய பாரம்பரியத்துடனும், பல்துறை ஆய்வுடனும் கூடிய அவரது ஞானப் பார்வை தமிழ் கூறு நல்லுலகை மிகப் பிரமாண்டமாகக் கட்டி எழுப்பும் வல்லமை வாய்ந்தது.

அந்த வகையிலே கவிவேழம் பாரதிபாலனின், **அரங்க இலக்கிய அலைகள்...** என்ற பெயருடன் இந்த நூலை வெளியிட முன்வந்துள்ளோம்.

கவிவேழத்திடம் இருந்த மேற்குலக, கீழைத்தேய அரங்க நிகழ்வாக்கங்களை ஒலி, ஒளி நாடாக்களில் இருந்து பிரதி செய்து இருக்கிறோம்... `மேற்குலக அரங்க நிகழ்வுகள்' எனவும் `தாயக அரங்க நிகழ்வுகள்' எனவும் தரம் பிரித்துள்ளோம். அவற்றிலே கவியரங்குகள் மட்டும் அல்லாது, கனடா வானொலியிலும், டென்மார்க் நூல்வெளியீட்டு விழாவிலும் இடம் பெற்ற இலக்கிய ஆய்வுச் சொற்பொழிவுகளும் அடங்கும். கவியரங்கு நிகழ்வுகள் அனைத்தும் இலக்கியத்தரத்தோடு இருந்தாலும் தேவை அற்ற பகுதிகள் என

**அவர் கருதியவற்றை நீக்கி சமுதாயத்திற்குப் பயன்தரக்கூடிய வகையில் உள்ளவற்றையே பிரசுரிக்க வேண்டும் என்ற அவரது எதிர்பார்ப்பை நிறைவேற்றி உள்ளோம் என்றே கருதுகிறேன்.**

வெகு விரைவில் கனடாவில், எனது தயாரிப்பு இயக்கத்தில் குறும்படமாக வரஉள்ள அவரது 'நெஞ்சினிலே சுமந்து...' எனும் கவிதா, இசைச் சித்திரம் ஒன்றை 'ஐரோப்பா நாடக அரங்கிலே...' என்பதாக இணைத்துள்ளோம். டென்மார்க்கில் 27.05.2007இல் ஐரோப்பிய தமிழ் தொலைகாட்சி (ரீரிஎன்) கலைஞர்களும் கலந்து கொண்ட அந்த நிகழ்வு மேற்படி நாடகத்தை டென்மார்க்கை புலம் பெயர் களமாக மாற்றி அமைத்து மேடைக்கு ஏற்றபடி கவிவேழம் ஆக்கி வழங்கிய இந்த கவிதா இசை நாடகம் சிறந்ததாகச் சிலாகிக்கப் பெற்றதாக டென்மார்க் கலைஞர் சக்திதாசன் தனது வாழ்த்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறு சிறந்த படைப்புகளாகப் பேசப்படும் கவிவேழத்தின் அரங்க இலக்கியங்களில் நில், நிதானி, செல் எனும் அவரது தாரகமாக ஐரோப்பிய, தாயக அரங்குகளில் இருந்து முதல் ஒரு பாகத்தை இப்போது வெளியிடுகின்றோம். வானொலி தொலைக் காட்சிகளுக்காக அவர் எழுதிக் குவித்தவையும் ஏராளம். 'புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் அறிவு, கல்வி, இலக்கியம், சமயம், செய்தி என்ற வெவ்வேறு துறைகளில் அவர்களுக்குக் குறை நிரப்பியாகவும், அலைவிலே சிக்கி அகதிக்கோலம் பூண்ட எம் மக்களுக்குப் புலத்தையும் மண்ணையும் ஒன்றிணைக்கும் தொப்பூள் கொடியுறவுப் பாலமாகவும் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை (ஐபீசி) நாம் தொடக்கி நடத்தியபோது, அதிலே தாங்கள் தங்களையும் இணைத்து அவ்வப்போது, வானலையில் வந்து கவிதை, கலை, இலக்கிய, வடிவங்களில் சமூகப் பணிச் சாமரை வீசி மக்களை வளப்படுத்தியவர்கள்' என்று மேற்படி ஐபீசி வானொலிப் பணிப்பாளராகவும் ரீரிஎன் தொலைக்காட்சிப் பணிப்பாளராகவும் முன்பு பணியாற்றிய ஈழத்தின் பிரபல கலைஞர் ஏ.சி.தாசீசியஸ் அவர்கள் இவரது கடற்கன்னி காவியத்திற்கு வழங்கிய வாழ்த்தில் தெரிவித்துள்ளார். கனடாவில் எமது கீதவாணி ஒலிபரப்பிற்கென இவர் வழங்கிய ஆன்மிகச் சொற்பொழிவுகள் வானொலி நேயர்களை வெகுவாக ஈர்த்து மீளவும் அவற்றை ஒலி பரப்பும்படி கேட்டிருந்ததை இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும்.

**இவ்வாறான கவிவேழத்தின் அரங்க இலக்கியங்கள் அனைத்தும் 10 தொகுதிகளைத் தாண்டக் கூடியவை. காலக் கிரமத்தில் அனைத்தையும் வெளிக்கொணர முயல்வோம்.**

மேற்கிலும் கிழக்கிலுமாக அவரது பல ஆண்டுகட்கு முற்பட்ட அரங்க இலக்கியங்கள் அவரது தீர்க்க தரிசனங்களாக இன்று வைத்துப பார்க்கும்படியாக பேரதிசயமாக இருப்பதை இவரது "அரங்க இலக்கிய அலைகள்" என்னும் இந்த நூலைப்படித்து இரசிப்பவர்கள் நிச்சயமாக உணர்வார்கள்.

இந்தத் தொகுதியில் இடம்பெறுபவைகளில், தனக்கு மனநிறைவைத் தருவதாக இறுதியில் இடம் பெற்றுள்ள எமது கனடா வானொலி ஆன்மிகச் சொற்பொழிவு ஒன்றையே கூறிக்கொள்கிறார் கவிவேழம் அவர்கள். அது அனைத்து உலகிற்குமே தேவையான ஒன்று என்பது மட்டுமல்ல தாயகத்திலே வன்னியில் யோகசாத்திரம் நூல் வெளியீட்டிற்காக அனுப்பிய அவரது வாழ்த்துச் செய்தியாகவும் அதுவிடயமே அமையப் பெற்றமையும் அச்செய்திக்காக நன்றி தெரிவித்து யோகசாத்திரம் நூல் ஆசிரியரிடம் இருந்து மின்னஞ்சல் மூலமாக நூலாசிரியருக்கு கிடைக்கப் பெற்ற பதிலுமே நூலாசிரியர் உலக அரங்கிலே தமிழரை நிறுத்தும் பணியாக மேற்படி ஆக்கத்தை கருதுகிறார் என்பதை உணர்ந்து நூலாசிரியரின் வேணவாவைப் பூர்த்தி செய்துள்ளோம்.

காலங்கடந்தும் ஒளிவீசும், அனைவரையும் சிந்தித்து சீர்திருத்தத் தூண்டும், அவரது அரங்க இலக்கிய முத்துக்களை இலக்கிய வாசகர்கள், அபிமானிகளுக்கு ஆரமாகச் சூட்டி தன்மானத் தமிழராக நிறுத்தி மகிழ்வதில் 'கனடா தமிழ்க் கலைஞர் சங்கம்' பெருமிதம் அடைகின்றது.

இந்த நூலைத் தொகுக்க ஆர்வமுடன் ஆலோசனை வழங்கிய அவுஸ்திரேலிய நண்பரும் உலக இலக்கிய ஒன்றிய பொருளாளருமான ஆசிரியர், தம்பி இராசலிங்கம் அவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. அவுஸ்திரேலியாவில் இருந்து வெளிவரும் சங்கநாதம் பத்திரிகையின் ஆசிரியர் தம்பி இராசலிங்கம். அவர்கள் ஆங்கிலத்தை எமது தமிழர்களும் உலகின் வேற்று நாட்டவரும் இலகுவிலே புரிந்து பயில "The Baby English Grammer" எனும் நூலை மிக உயர்ந்த தரத்தில் வெளியிட்டவராவார். அனைவரும் அறிவார்கள். அத்தகைய மலேசியப் பேரறிஞர் மறைந்த வீரப்பனாருக்கு சமர்ப்பணமாகவே கவிவேழம் அவர்கள் தமது உலக நாவலான சமரசபூமியை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க 9 ஆவது மாநாடு புதுச்சேரியில் அரங்கேற்றினார். வீரப்பனார் அவர்கள் இவருக்கு 6

இவர்போலவே, உலகெங்கும் வாழும் கவிவேழத்தின் இலக்கிய நண்பர்கள் பலர் தங்களது ஆதரவுக்கரத்தை நீட்டி உள்ளனர். தாயகத்திலே 1990இல் நடைபெற இருந்து இராணுவ கெடுபிடியால் இடம் பெறாதுபோன கவிவேழத்தின் நூல் வெளியீட்டுவிழா நிகழ்ச்சி நிரல் அறிவிப்புப் பிரதியை மிகவும் கவனமாக வைத்திருந்து இந்த நூல் தொகுப்புச் செய்தி கேட்டு மனமகிழ்வுடன் அனுப்பி வைத்தவர், கவிவேழத்தின் இனிய நண்பர்களில் ஒருவரும், உலக இலக்கிய ஒன்றியத்தின் இலங்கை அமைப்பாளருமான கவிமணி க. கோணேஸ்வரன் அவர்கள். அவருடன் எனது தெரிவில் உருவாகும் கவிவேழத்தின் இந்த இலக்கிய வடிவிற்கு ஒத்துழைப்பு நல்கிய, ஆசிகள், வாழத்துரைகள் சிறப்புரைகள் வழங்கிய அனைத்து அறிஞர் பெருமக்களுக்கும் கவிவேழத்தின் சார்பில் எனது நன்றியை தெரிவிக்கின்றேன்.

இன்றைய கணனி என்பதே `உலகம்' என்ற மாயத் தோற்றத்தில் இருந்து மனித சமூகம் விழித்தெழ வேண்டும். நூல் வாசிக்கும் பழக்கம் வளரவேண்டும். சிந்தனா ஆற்றலும், ஆரோக்கியமான நீண்ட ஆயுசும், அமைதியான வாழ்வும் ஒரு நூலை வாசிப்பவனிடமே இன்று காண முடிகிறது. விஞ்ஞான நுண்ணறிவு மேலோங்கி இருக்கும் இந்த ஐரோப்பியரது கைகளிலே பத்திரிகைகளையும், நூல்களையும் தான் காணலாம். அவர்கள் நோய் நொடி இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்கிறார்கள். ஆனால் ஓய்வு ஒழிச்சல் இல்லாது நாகரிக மோகத்தால் சதாநேரமும் கணனிக்குள் நுழைந்து நூல்களை வாசிக்கத் தயங்கும் எமது புலம் பெயர்ந்த தமிழரில் பலர்...? அந்த நிலை மாறவேண்டும். எமது கவிவேழம் போன்ற சிறந்த எழுத்தாளர்களின் நூல்களைப் படித்து பயன்பெற வேண்டும். எனது அருமை நண்பர் கவிவேழம் பாரதிபாலன் அவர்கள் ஆரோக்கியத்துடன், நீண்டநாள் வாழ்ந்து தமிழ்ப் பணி ஆற்றிட எல்லாம் வல்ல கணபதியை இறைஞ்சுகிறேன்.

றொறன்ரோ, கனடா. தோழமையுடன்,

01.10.2007 கணபதி ரவீந்திரன்

# அணிந்துரை

**திரு.N.ஜெயபாலசிங்கம்,** பி.ஏ.(ஆங்), எம்.ஏ.(வர)
Justice of the Peace (Mannar)
Secretary, Citizens' Committee - Mannar
Member, Local Monitoring Committee (Mannar)
Principal (Emeritus)
Director, Oxford Eng. Acadamy Tel : 060 2230553

கவிவேழம் பாரதிபாலன் என்ற புனைபெயரில் கவியுலகிற்கும், எழுத்துலகிற்கும் அறிமுகம் ஆகியிருக்கும் ஜெயக்குமார் கருவிலே திருவுடையோன். இதனைக் கூறக்கிடைத்த இந்த வாய்ப்பிற்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

நான் பட்டப் படிப்பிற்காக சென்னை சென்ற அந்த நாட்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திராவிடக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவன். சீர்திருத்தக் கூட்டங்களிலும் கலந்துகொண்ட எனக்கு அப்பொழுது பல கவிஞர்களுடனும் எழுத்தாளர்களுடனும் தொடர்பு இருந்தது.

எனது அன்றைய தமிழக தொடர்பின் ஈர்ப்பினால் இலங்கை திரும்பியபின்னர் எனது மகளுக்கு அன்பழகி என்று பேராசிரியர் அன்பழகனின் பெயர் சூட்டி இருந்தேன். மகள், இப்போது அமெரிக்காவில் பணிபுரிந்து வருகிறாள். அன்று, சென்னையில், என்னுடன் சந்தித்து பழகிய இலக்கிய உறவுகளை இன்றைக்கும் மறக்க முடியாது. நான் சந்தித்த சிறந்த கவிஞர்கள், எழுத்தாளர்களுடன் ஒப்பு நோக்கத்தக்க வகையிலும், அவர்களை விஞ்சத்தக்க வகையிலும் கவிவேழத்தின் புலமை கண்டு புளகாங்கிதம் அடைகிறேன்.

கவிவேழத்தின் குழந்தைப் பருவத்தைக் கண்டு மகிழ்ந்தவர்கள் நாங்கள். அவனது மழலைக் காலத்தில் பொம்மை வைத்து விளையாடும்போது, 'ஆனா படிச்சால் அப்பா அடிப்பார்' என்று எதுகை மோனையுடன் தனக்குள் பாடிக்கொண்டு இருப்பான். இலங்கையில் அன்று தந்தை செல்வாவின் தமிழரசுக்கட்சி பெரும் தூண்களில் ஒருவராகவும், பின்னர் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர் அகால மரணம் அடைந்த வழக்கறிஞர் மு. ஆலாலசுந்தரம் அவர்கள். அவர், சிறந்த மேடைப் பேச்சாளர். எனது இனிய நண்பர். இளைஞராக இருந்த போது என்னுடன் சேர்ந்து படிப்பதற்காக எங்கள் வீட்டிற்கு வருவார். சிறுவன் கவிவேழம் ஓடிவந்து எங்கள் மடிமீது ஏறி உட்கார்ந்து, 'அது என்ன, இது என்ன?' என்று கேட்கத் தொடங்கிவிடுவான். உண்மைகளைக் கண்டறிய வேண்டும்

என்ற தேடுதல் அவனது சிறுவயதிலே இருந்த ஒன்று. நண்பர் ஆலாலுவும், சிறுவனாக இருந்த இவனிடம், `ஜெயன் ஆனா படியடா!' என்று குறும்பு செய்வார். உடனே இவனும், தனது மழலையில் பழைய பல்லவியைத் தொடர்வான்.
அவன் பேசிய மழலைகளில் எதுகை, மோனை தொனிக்கும். அவை சுத்தமான தமிழாக இனிக்கும். அவனது அன்றைய மழலைகளால் நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்; வியந்திருக்கிறோம். படிப்பிலே மிகவும் கெட்டிக்காரன். கவிவேழம் பிறவிக் கவிஞர் மட்டுமல்ல, கலைஞன், ஆய்வாளர் என பன்முகம் கொண்டவர் என்பதை இன்றைய காலத்தில் நிரூபித்துக்கொண்டு இருப்பது எமக்குப் பெருமை தருகிறது. இவரது தாய், எனது அண்ணியார், என்னைத் தனது சொந்த மகன்போல பராமரித்து வளர்த்தவர்.

இவரது தந்தையும் எனது இளைய அண்ணனுமான குமாரசாமி முதலியார் இவரது தாய், திருமணத்தின்போது கொண்டுவந்த சீதன நகைகளை விற்றே இந்தியாவில் படிக்க எனக்கு பணம் அனுப்பிக் கொண்டு இருந்தார்.

எங்கள் பரம்பரைக்குச் சொந்தமாக பெருங் காணிகள், பூர்விக சொத்துக்கள் (நல்லூர் கோயில்வீதி, கச்சேரிவீதி, இருபாலை, பருத்தித்துறை வீதி, கள்ளியங்காடு) இருந்தன. இந்தியாவில் இருந்து சுவாமிமார்களை, பிரசங்கிகளை, பாட்டுக்காரர்களைத் தனது செலவிலே வரவழைத்து நிகழ்ச்சிகள் செய்து அவர்களை மாதக்கணக்காக வீட்டிலே தங்க வைத்து, விருந்தளித்து மகிழ்ந்தவர் எங்கள் பாட்டனார். நாங்கள் சிறுவராக யாழ்ப்பாணத்தில் படித்துக் கொண்டிருந்த போது, எங்களது தந்தையார், நகுலராஜ முதலியார்
அவர்கள், சிங்கப்பூரில் புகையிரத நிலைய அதிபராகக் கடமை யாற்றிக் கொண்டு இருந்தார். அங்கே, தனது தெல்லிப்பளை நண்பர் ஒருவரைச் சீனர்கள் சூழ நின்று பயங்கரமாகத் தாக்குவதைக் கண்டு, தான் உறங்கிக் கொண்டிருந்த அறைக்கதவின் குறுக்குத் தடுப்புச் சட்டத்தை எடுத்துக் கொண்டு போய் அந்த சீனர்களை அதிபயங்கரமாகத் தாக்கத் தொடங்கினார். படுகாயமடைந்த அந்த சீனர்கள் தப்பி ஓட்டம் எடுத்தனர். அவர்கள் மீளவும் கூட்டமாக வந்து தாக்கத் தொடங்கலாம் என்ற எச்சரிக்கை பெற்ற தந்தையார் தனது நண்பனையும் அழைத்துக்கொண்டு போய் கிராம அதிகாரியிடம் நிலவரத்தைத் தெரிவித்திருக்கிறார். அந்த கிராம அதிகாரி அந்த இரவு இருவரையும் தனது வீட்டிலே தங்க அனுமதித்திருக்கிறார். அதிகாரி ஒரு சீனர் என்பதால், தாங்கள் உறங்கும் வேளை ஏதும் அசம்பாவிதம் நிகழலாம் என்று கருதிய தந்தையார் நண்பனுடன் அந்த

இடத்தை விட்டு இரவோடு இரவாகத்தப்பிச் சென்று தங்கள் உடைமைகளையும் எடுத்துக்கொண்டு இலங்கை திரும்பிவிட்டார்.

நாகரிக ஆடம்பரச் செலவினால் பின்னர் எங்கள் சொத்துக்கள் சுருங்கியதை எமது ஊரவர்கள் அனைவரும் அறிவார்கள். அரச உத்தியோகத்தராக பணிபுரிந்த எனது அண்ணனை மணம் புரிந்த எனது அண்ணியார் தில்லை நாயகி அவர்கள் திருமணம் ஆகி பெண்களுக்கு இயல்பான சொந்த ஆடம்பரங்கள், கருதாமல், என்னைத் தனது சொந்த மகன்போல கருதி எனது உயர் கல்விக்கு தனது உடமைகளை தந்து உதவியவர்கள். அந்த தாயை இன்றும் வணங்குகிறேன். அண்ணியார் தில்லைநாயகி சொந்தம், அந்நியம் என்று பாராமல் அனைவரையும் உபசரிக்கும் பண்புள்ளம் கொண்டவர்கள்.

அவர்கள் பழி பாவத்திற்கு அஞ்சுபவர். ஆசாரங்கள் அனுட்டானங்களை கடைப்பிடித்து வந்தவர்கள். அவர்களின் சிறந்த வழி நடத்தலினாலேதான் இத்தகைய ஒரு நல்ல கவிஞன், எழுத்தாளன், ஆய்வாளன், மானுடநேயன், ஆன்மிகவாதி தமிழர் சமுகம் உய்ய எங்கள் நல்லூரில் இருந்து ஜெயக்குமார் (பாரதிபாலன்) என்ற பெயருடன் தமிழ் கூறு நல்லுலகிற்கு கிடைத்திருக்கிறான். கவிவேழத்தின் நடைமுறைகள் ஒவ்வொன்றும் எனக்கும் எனது சகோதரருக்கும், எங்கள் சிறுவயதில் கல்வி போதித்த கிறித்தவரான சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களை நினைவு கூர வைக்கிறது. அவர் ஒரு கிறித்தவ பாதிரியார்.

மானிப்பாயில் பிறந்த சுவாமிகள். நல்லூரில் எம்மவர் மத்தியில் வாழ்ந்தமையால் நல்லூர் சுவாமி என்று அழைக்கப்பட்டவர். அவர் உலகம் போற்றும் ஆய்வறிஞர். ஜேர்மனி அரசாங்கம் அவருக்கு அந்த நாட்களில் முத்திரை ஒன்றை வெளியிட்டு இருந்ததை உலகம் அறியும். சுவாமியாரும் அவரது மாணவருமான தாவீது அடிகளாரும் என்னையும் சகோதரர்களையும் செங்கை ராஜாக்கள் என்று நகைச்சுவையாக அழைப்பார்கள். சுவாமிகளது பல்துறை ஆய்வுகள், போக்குகள் ஜெயக்குமாரின் எழுத்துருவில் கண்டு உண்மையிலேயே வியப்படையாமல் இருக்க முடியவில்லை. சேர். பொன். இராமநாதனின் செயலாளராக இருந்த சங்கரப்பிள்ளை முதலியார் அவர்களின் தந்தை சபாபதி முதலியார் அவர்கள் இருபாலை சேனாதிராஜ முதலியாரிடம் கல்வி கற்றவர்.

அந்த சங்கரப்பிள்ளை முதலியாரின் மகனே 14-வயதுப் பண்டிதர் இராமச்சந்திரன். அவரை 'வெள்ளை அண்ணை' என்று அழைப்போம். அவரது புலமையை கூற வார்த்தைகளே கிடையாது. சுவாமி ஞானப் பிரகாசர் உள்ளிட்ட கிறிஸ்துவ துறவிகளாலும், சிங்கள அறிஞர்களாலும், இசுலாமிய அறிஞர்களாலும் மதிக்கப்பட்டவர். தமிழகத்து இராமலிங்க

வள்ளலார் போன்ற குணநலன் கொண்டு வாழ்ந்து அடக்கமான பிரமச்சாரி. அவருக்கு கொழும்புத்துறை மக்கள் ஒரு சிவன் கோயில் எழுப்பி வழிபாடு புரிந்து வருகின்றனர். எங்கள் கவிவேழத்திற்கு அவரது வாலிப வயதில் குருவாக அத்தகைய ஒருவர்தான் வாய்த்திருக்கிறார். அந்த சுவாமிகள் சொந்த பந்தம் கடந்தவர். ஊரில் உள்ள எல்லா சமுகத்திற்காகவும் வாழ்ந்தவர். எங்கள் உறவினராக இருந்தபோதும் அந்த வெள்ளை அண்ணை குரு தன்னிடம் வருவோருக்கு கவிவேழத்தையே தனது மருமகன் என்று அன்று அறிமுகம் செய்திருக்கிறார். சொந்த பந்தம் துறந்த அந்த துறவி கவிவேழத்தை மட்டும் தனது மருமகன் என்று தன்னை நாடிவந்தோருக்கு அறிமுகம் செய்தது ஏன்? என்பது இவரது புனிதப் பணிகளால் இன்றைய காலத்தில்தான் துலக்கம் ஆகி இருக்கிறது.

இவர் எழுதிய `சமரசபூமி' என்னும் அறிவியல் புதினத்தை 2005ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கொண்டுவந்து பல்கலைக்கழகத்தில் அரங்கேற்றியபோது உண்மையிலேயே நான்கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

எமது தமிழ் சமூகமும், சிங்கள சமூகமும் ஒருவரை ஒருவர் சகோதரராக கைகுலுக்கி உறவாட ஒரு நேரம் ஆரம்பித்து விட்டதான உணர்வே அப்போது தோன்றியது. சொல்லொணா மகிழ்ச்சி அடைந்தேன். எமது நாட்டின் இன்றைய சூழ்நிலையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் கடமை புரியும் எனக்கு இவரது சிந்தனையில் இருந்து எழும் மனித நேயக் கருத்துக்கள் புதிய தெம்பை ஊட்டுகிறது. எனது முதுமையை சுமையாக கருதாது சேவை செய்யத் தூண்டுகிறது.

இன்று கவிவேழத்தின் அரங்க இலக்கியங்களை தொகுக்கும் கணபதி ரவீந்திரனின் நோக்கம் புனிதமானது. சிறந்த நண்பர்களைத் தேடுவது என்பது இன்றைய காலத்தில் முயல்கொம்பு. கவிவேழத்திற்கு ஓர் இலட்சிய நண்பன் கிடைத்திருப்பது அவரது பூர்வ புண்ணியம். உலக சமாதானம் விரும்பும் அவர்கள் பணிகள் வெல்ல வேண்டும்.

இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட கவிவேழத்தின் பணிகள் எமது அப்பாவி தமிழர் வாழும் பூமியில் சாந்தியும் சமாதானமும் தோன்ற வகைசெய்யட்டும்!

ஆசியுடன்
ந.ஜெயபாலசிங்கம்

# ஆசியுரை

**திருமிகு.இ.கலியுகவரதன்**
நிறுவனர் & ஆசிரியர்
'அறிவுக்கதிர்' சஞ்சிகை, கிளிநொச்சி

என் உடன் பிறவாச் சகோதரன் கலாநிதி ஜெயக்குமார் குமாரசாமி (கவிவேழம் பாரதிபாலன்) அவர்களின் "Collections from Tamil Classical Literature for Englishtenment" எனும் நூல் வெளியீடு தொடர்பாக நான் அவர் பற்றி அறிந்தவற்றையும், அவரின் இலக்கிய, சமூக, தேசியத் தொண்டு பற்றியும் சில முக்கியமானவற்றைச் சுருக்கமாகக் கூறுகின்றேன்.

நான் அக்காலப் பகுதியில் திருக்கோணமயையில் உறவாக்கி செயற்படுத்தி வந்த தமிழர் முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பின் செயற்பாடுகளிலும், சிங்களவர்கள் தமிழர்கள் மேல் காலத்திற்குக் காலம் கட்டவிழ்த்து விட்ட வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நல் வாழ்விற்காக காலஞ்சென்ற வண. பிதா மரியநாயகம் அடிகளாருடன் இணைந்து நாம் ஆற்றி வந்த தொண்டுகளிலும் தம்பி ஜெயக்குமார் முக்கிய பங்கு வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது நற்குண நற்செய்கைகளால் ஈர்ப்புப் பெற்ற நானும், எனது மனைவியும் எமது குடும்ப நண்பரின் சகோதரியை அவருக்கு விவாகம் பண்ணி வைக்க விரும்பினோம்.

தனது சமூகத் தொண்டுகளைத் திருக்கோணமலையில் நிரந்தரமாக அமைக்க கிடைத்த சந்தர்ப்பமாக கருதியஸ்ரீ அவரும் அதற்கு உடன்பட்டார்.

ஈழத்தின் கவியரங்குளில் தனக்கெனத் தனியான முத்திரை பதித்தவர்.

இலக்கியக் களத்தில் பல மட்டங்களிலும் தனது கால்களைப் பதித்தவர்.

தம்பி ஜெயக்குமார் தனது சமரச பூமி எனும் நூலின் மூலம் மானுட சமுகத்தின் ஐக்கிய சக வாழ்விற்கான ஒரு தத்துவத்தை இன்றைய சந்ததிக்கு வழங்கி பெருமை தேடிக் கொண்டுள்ளார். அவரின் வளர்ச்சிப் பாதையில் அடுத்த மைல்க் கல்லாக எனும் நூல் திகழுமென்பதில் ஐயமில்லை.

யெருக்கும் புகழுக்குமாக பேனா பிடித்து பொழுது போக்காது. ஆரம்பத்தில் இருந்தே தனது பொதுநலத் தொண்டின் ஊடாக சமூக அவலங்கள், அடிமட்ட வேதனைகளைக் கண்ணூடாகக் கண்டு தனது ஆன்மநேய, ஆன்மீக சிந்தையை வளர்த்தவர் ன்பதால் அவரது இலக்கியங்கள் சாகா வரம் பெற்றவை.

04-08-2007-ஆம் திகதி கிளிநொச்சியில் எனது யோகசாத்திரம் நூல் வெளியீடு செய்து வைக்கப்பெற்றபோது டென்மார்க்கில் இருந்து அவரால் மின் அஞ்சல் வழியாக அனுப்பி வைக்கப் பெற்ற ஆன்மீக, ஆன்மநேய ஆய்வுடன் கூடிய வாழ்த்து வரிகள் இன்றைய காலப்பகுதியைக் கருத்தில் கொண்டது என்பதால் விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் ஆறுதலாகவும் அரவணைப்பாகவும் அமைந்தது.

ஜீவகாருண்யமற்ற, தீய செயல்கள் நிரம்பிய இன்றைய உலகத்தில், ஒரு புனிதமான மானுட சமூகத்தின் உதயத்தை வேண்டித் துடித்துச் செயற்படும் தம்பி ஜெயக்குமாரின் முயற்சிகள் அனைத்தும் என்றென்றும் வெற்றி பெற சிவன் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்

14-09-2007 **இ.கலியுகவரதன்**

## சிறப்புரை

### கவிஞர் தம்பி இராசலிங்கம்
உலகத்தமிழ் இலக்கிய ஒன்றியம்
அவுஸ்திரேலியா

மதிப்பிற்குரிய பாரதிபாலன் அவர்கள் ஈழத் தமிழனாகப் பிறந்து உலக சமூகத்தின் தொடர்புப் பாலமாக இன்று செயலாற்றி வருகிறார். இவரது ஆய்வுகளும், இலக்கியப் படைப்புகளும் மேற்குலகிற்கும் சவாலாக இருக்கின்றன. எமது ஈழத்தில் இவரது கவியரங்குகளைப் பார்த்து ரசித்து மகிழ்ந்திருக்கிறேன். அத்தகைய கவிஞரைப் பலகாலம் பிரிந்து 1993ஆம் ஆண்டில் ஜேர்மனி மாநாட்டுக்கு வந்திருந்தபோது மீண்டும் சந்தித்தேன்.

பல தமிழ் அறிஞர்கள் அந்த மாநாட்டிற்கு வருகை தந்திருந்தனர். அங்கே அந்தக் கவியரங்கில் எமது பாரதிபாலன் அவர்களின் கவியரங்கக் கவிதை உலகத் தமிழரைக் கவர்ந்ததை நேரிலே காணக்கூடியதாக இருந்தது. அதனை எனது நண்பன் நூலுக்கு சிறப்புரை ஆவணமாக்கக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்திற்காக மிக்க மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

பேர்லின் மகாநாட்டு கவியரங்கிலே, எமது கவிவேழம் பாரதிபாலன் அவர்களின் கவிதையை அனைவருமே பாராட்டினார்கள்.

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், முன்னாள் தமிழக சபாநாயகர் தமிழ்க்குடிமகன், கிருஷ்ணா வைகுந்தவாசன், சீர்காழி சிவசிதம்பரம், பெருங்கவிக்கோ, ஜேர்மனி தமிழறிஞர் வெ. செ. குணரத்தினம், முதலானோரால் எமது கவிஞருக்குப் பாராட்டும் ஆசியும் வழங்கப்பட்டது.

இதனை ஜேர்மனியில் மேதகம் தமிழ் கல்வி மையத்தில் பணியாற்றும் ஜேர்மனி அறிஞர் அழலாடி கமலநாதன் என்பவர், 'முதன் முதலாக ஒரு புதிய சிந்தனையாளனைக் கண்டேன்' என்று உலகப் புகழ்பெற்ற எமது கவிஞரின் சமரசபூமிக்கு வழங்கிய விதந்துரையிலே குறிப்பிட்டிருப்பது நினைவுகூரப்பட வேண்டிய ஒன்றாகும்.

மாநாட்டு இடைவேளையில் நாங்கள் இருவரும் சக கவிஞர் டாக்டர். வா. மு. சே. ஆண்டவரும், முன்னாள் தமிழக சபாநாயகர் தமிழ்க் குடிமகன் அவர்களும் மண்டப சிற்றுண்டிச் சாலையில் தேனீர் அருந்திக் கொண்டு இருந்த போது, தமிழ்க்குடிமகன் அவர்கள் கவிவேழத்திடம் `இந்த அரங்கிலே பாடிய இந்த கவிதை நடையிலே எந்த மாற்றமும் செய்யாமல் கவி அரங்கங்களில் தொடர்ந்து அப்படியே பாடி வாருங்கள்' என அன்புடன் கூறினார்.

அந்த மாநாட்டில் கலந்து கொண்ட பேராசிரியர் க. ப. அறவாணன் அவர்கள் வா. மு. சே. ஆண்டவரிடம் கவிவேழத்தின் கவிதை நன்றாக இருந்தமையைத் தெரிவித்ததாக கவிவேழத்திடம் அவர் கூறிக் கொண்டு இருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

தமிழக தமிழ் அறிஞர்களை அழைத்து பெருவிழா செய்ததற்காக, ஜேர்மனி அமைப்பாளர் தமிழ் அறிஞர்வெ. செ. குணரத்தினம் என்ற ஈழத் தமிழ் அறிஞரை தமிழகத்தில் வரவழைத்து, உலகத் தமிழர் விருது வழங்கினார்கள்.

அவர் அதற்காக பேர்லின் மாநாடு தகவல்களை புதுவை விஜயா பதிப்பகத்தில் 1998ஆம் ஆண்டில் ஒரு நூலாக வெளியீடு செய்தார். தமிழும் உலகமும் என்பதே அந்நூல். அதிலே ஜேர்மன் மாநாட்டிலே கவிபாடிய கவிவேழம் பாரதிபாலனைப் பதிவாக்கி இருந்தார்.

அவ்வாறு ஜேர்மனியில் மாநாடு செய்ய ஒத்துழைத்த வெ. செ. குணரத்தினம் அவர்கள் கவிவேழத்தையும் ஏனைய கவிஞர்களையும் ஆவணப் படுத்தியபோது, `தமிழகத்தில் தமிழின்நிலை பற்றியும் மாநாட்டு கவிதைகள் அமைந்தன' எனக் குறிப்பிட்டுள்ளார். அவரது அந்த கூற்றினூடாக எமது கவிவேழம் அவர்கள் சிறந்த முறையில் உள்வாங்கப்பட்டமை தெளிவாகிறது. அத்தகைய உயர் சிறப்பு பொருந்திய எமது கவிவேழம் அவர்கள் இறை ஆசி பெற்றவர். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் அனைத்துலகத் தலைவராக இருந்து மறைந்த மலேசியநாட்டு பேரறிஞர் இர. ந. வீரப்பனார் அவர்களது அன்புக்குப் பாத்திரமானவர். வீரப்பனாரின் உலகளாவிய பணிகளுக்குப் பேருதவி புரிந்தவர். 1999 - களில் நடைபெற்ற வீரப்பனாரின் உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க 7 ஆவது சென்னை மாநாட்டிற் சுகயீனம் காரணமாக செல்ல முடியாத சூழ்நிலையில் இருந்தபோதும், எமது கவிவேழம்

அவர்கள் செய்த பொருளாதார உதவியே வீரப்பனாருக்குத் தெம்பளித்தது. மாநாடு நடத்த பேருதவியாக இருந்தது. இதனை விழாவோடு சம்பந்தப்பட்ட ஆவது மாநாடு கனடாவில் நடைபெற்ற போது, பைந்தமிழ்ப் பாவலர் என்ற பட்டத்தை வழங்கி கௌரவப்படுத்தி இருக்கிறார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை சீரிய முறையில் கட்டி எழுப்பும் ஆற்றல் பாரதிபாலனிடம் உண்டு என்று வீரப்பனாருக்கு பின்னால் வந்த தலைவர்களும் பாரதி பாலன் நூல்களில் எழுதி இருக்கிறார்கள்.

கவிவேழம் அவர்கள் தமிழ் பாண்டித்தியம் பெற்றாலும், தன்னை சாதாரண மனிதன் ஆக்கி பொது அரங்கில் தோன்றுவார். அங்கே தமிழ் சாதாரணமாக துள்ளி விளையாடும். தாழ்ந்த தமிழருக்கு தெம்பூட்டி சிறுமை துடைக்கும். அத்தகைய அவரது அரங்க இலக்கியங்கள் அனைத்தும் அர்த்தம் நிறைந்தவை. அவருக்கு கவிவேழம் என்ற பட்டம் சூட்டிய சென்னைப் பச்சையப்பன் கல்லூரி முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் மறைந்த பேராசிரியர் வெ. தெ. மாணிக்கனார் அவர்கள் 1990இல் இவருக்கு வழங்கிய விமர்சனத்திலே ‘மக்களுக்காக எழுதப்படும் இலக்கியங்கள் மக்களுக்கு இலகுவில் சென்று சேரவேண்டும். அதற்காக எளிமைப் பண்பினைத் தேர்ந்துள்ளார் கவிஞர்’ என குறிப்பிட்டிருப்பது நோக்கத் தக்கது. தனது கவிதை நூல்களை தன்னை வழிநடத்தும், தனக்கு தமிழ் புலமையை ஊட்டிய ஈழத்து வள்ளலார் வெள்ளை அண்ணா சுவாமிகள் நெறிவழி உலகிலே பரப்பிவருதல் ஊடாக, கவிவேழத்தின் தமிழ், சமரச சுத்த சன்மார்க்கத்தோடு பண்பட்ட உலகத்தைப் படைக்க வேண்டும் என்ற ஆவேசத்துடன் புறப்பட்டு இருப்பதாகவே உணர முடிகிறது. அத்தகைய உயர் கவிஞனுக்கு வாழ்த்துரை வழங்குவது எனது பெரும்பேறு என்று கொண்டு, மக்களுக்கு அவர்பணி என்றும் தொடர இறைவனை வேண்டுகின்றேன்.

அன்புடன்

**தம்பி இராசலிங்கம்**

# திறனாய்வுரை

கவிஞர் பாரதிபுத்திரன்
தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம், சென்னை - 59.

## *ஊழிக்காலம்*

கலையின்பம் நல்குதல் என்னும் அடிப்படைப் பண்பிற்கு அப்பால் இலக்கியப் படைப்புகள், தன்னை உணர்த்தல், சமூக அனுபவம் தருதல் என்னும் இரண்டு பயன்பாடுகளை அடிப்படை இலக்குகளாகக் கொண்டுள்ளன. பிரபஞ்ச வெளியில் இயங்கும், மனம் கொண்ட ஓர் உயிரி என்னும் வகையில் மனிதன் பெறும் ஆயிரம் உணர்வுகளும் எழுப்பிக் கொள்ளும் ஆயிரம் வினாக்களும் மென்மைப்படவும் மேன்மைப்படவும் விடைகண்டு அமைதி கொள்ளவும் கலையிலக்கியங்கள் துணை நிற்கின்றன. ஒரு கவிதை வரியில் தன் உணர்வினையும் ஒரு பாத்திரப்படைப்பில் தன் முகத்தையும் ஒரு கருவில் தன் வாழ்வையும் ஒரு வாசகன் கண்டடையும் போது படைப்பின் நோக்கமும் படிப்பின் நோக்கமும் வெற்றியடைகின்றன. எல்லையற்ற இவ்வெளியில் தன்னை அடையாளம் கண்டுகொண்ட மகிழ்வையும் அனுபவத்தையும் வாசகன் பெறுகின்றான். அதற்கு அடுத்த படிநிலையாகத் தன்னை மறுசீரமைத்துக் கொள்ளவும் முன்னெடுத்துச் செல்லவும் அப்படைப்பினைத் துணையாக, வழிகாட்டியாக அமைத்துக் கொள்கிறான்.

இலக்கியத்தின் அடுத்த பயன்நோக்கு தூலமானது. ஓர் இலக்கியம் சகமனிதனை - வாழ்ந்த, வாழ்கின்ற, தன்னொத்த சகமனிதனை நாடு கடந்து, இனம் கடந்து, மொழி கடந்து, காலம் கடந்து அறிமுகம் செய்து, பிறருக்கும் தனக்குமுள்ள உறவு என்ன என்பதை உணர்த்தி நிற்கிறது. 'மனிதரில் நீயும் ஓர் மனிதன்' என்ற உணர்வை அது எழுப்புகிறது. இதன் அடுத்த கட்டமாக 'உலகம் உண்ண உண், உடுத்த உடுப்பாய்' என்று அறிவுறுத்துகிறது. 'மானுட சமுத்திரம் நானென்று கூவு' என்று ஊக்கப்படுத்துகிறது. 'விதந்தரும் கோடி இன்னல் விளைத்தென்னை நலித்திட்டாலும்' நாட்டு மக்கள் நலமுற்று வாழத் தன்னையே தருவதற்கும் தயார்படுத்துகிறது. இலக்கியம் படைக்கும் ஒவ்வொரு பாத்திரமும் தன்னோடு வாழும் பிறரின் வகைமாதிரிகளாகவே அமைந்து அனைவரையும் ஒன்றுபடுத்தி உணரவும் சிந்திக்கவும் செயல்படவும் செய்கின்றது.

இவற்றிற்கு மேல் அதனைப் படிக்கும் வாசகன் உணர்வுத் தாக்குண்டு சிரித்தாலும் கலையின்பம் தான்! அழுதாலும் கலையின்பம் தான்!.

❖ ❖ ❖

ஈழத்துப் படைப்பிலக்கியங்கள், குறிப்பாக, 1983க்குப் பின்னர் எழுந்த படைப்பிலக்கியங்கள் தமிழ் இதுவரை காணாத வாழ்வைச் சித்திரித்து, உலகின் ஒவ்வொரு இதயத்தையும் அதிரச் செய்தன.

அவற்றின் வடிவங்கள் புதிதாக இருந்தன; சொற்கள் புதிதாக இருந்தன; வெளியீட்டு உத்திகள் புதிதாக இருந்தன. வெறும் அழகியற் சோதனைகளுக்குள் சிக்கிக்கிடந்த பெருவாரியான நவீனத் தமிழ் இலக்கிய வெளியில் அவை பெரும் வெடிகளாக விழுந்தன. எளிய மொழிக்குள் புதைந்து, சிதைந்து கிடந்த இரத்தமும் சதைகளும் எட்டிப் பார்த்த விழிகளை எரியச் செய்தன.

பெரிதும் மெத்தனப்பட்டுக் கிடந்த தமிழக இலக்கியப் பரப்பு மட்டுமன்றி, உலகெங்கும் ஈழப்படைப்புகள் நடுக்கத்துடன் உணரப்பட்டன. கடந்த நூற்றாண்டில் உலகெங்கும் உரத்து முழங்கிய ஆப்பிரிக்கக் கறுப்பின மக்களின் படைப்புகளுக்கு அடுத்தபடியாக அவை கவன ஈர்பபைப் பெற்றன.

தூறலில் நடந்து மகிழ்வோடு சென்ற கொண்டிருந்தவனின் எதிரே விழுந்து பற்றி எரியும் இடிபோல், ஓர் இனத்தின் வாழ்க்கை, ஓயாத அவலம் ஒவ்வொரு நொடியும் எழுத்துகளாக விழுந்து எரிந்தன. சமகாலச் சமுதாயத்தை, அதன் கொடூர முகங்களை அறிமுகம் செய்த அவை துடிதுடித்துச் செய்தி சொல்லின. இரத்தம் சிந்துவதை எழுதுவதற்கும் இரத்தம் சிந்திக் கொண்டே எழுதுவதற்குமான வேறுபாட்டை உலகம் உணர்ந்து கொண்டது.

ஆனால் எத்தனையோ கருத்துகளுக்கு, நிகழ்வுகளுக்கு, விவாதங்களுக்கு, முடிவுகளுக்கு, எதிர்பார்ப்புகளுக்கு, இழப்புகளுக்குப் பின்னால் இன்று, இந்த நொடியில் மனம் உணருவது என்ன?

மெய்யொடுங்கி, மனமொடுங்கி, வெறுமையின் உச்சத்தில் குத்திட்டு நிற்கும் பார்வையுடன் செயலற்று விழித்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. வெற்றி,

தோல்விகள் குறித்து வரலாறு எத்தனைதான் அறிவுரைகளைப் புகட்டியிருந்தாலும், நெஞ்சம் நொந்து கிடக்கிறது. எண்ணுவதற்கும் தெம்பற்ற சோர்வுடன் உடைபட்ட பலூனாய் மனம் தளர்ந்து கிடக்கிறது. எதைக் கொண்டு சமாதானம் செய்து கொள்ள? எத்தனை சூழ்ச்சிகள், எத்தனை துரோகங்கள், எத்தனை போலித்தனங்கள்... இன்னும் எத்தனை... எத்தனை... எண்ண முடியாது எழுந்தெழுந்து வரும் பேரலைகளுக்குள் நீச்சல் தெரியாமல் தத்தளித்து மூழ்கிறது ஆன்மா!

❖ ❖ ❖

கடந்த முப்பது ஆண்டுகளாய் ஈழத்தமிழினத்தின் ஒவ்வொரு நாளும் இலக்கியமாகிவிட்ட நிலையில் இன்று கவிஞர் பாரதிபாலனின் தொகுப்பினைப் படிக்கும்போது வழக்கமான உணர்வுக்குள் சிக்குவது மட்டுமல்லாமல் வேறு புதிய உணர்வுக்குள்ளும் எண்ணச் சுழிகளுக்குள்ளும் சிக்கவேண்டி இருக்கிறது. பாரதிபாலனின் அரங்க நிகழ்வுகள் - கவிதைகள், ஆய்வுரை, நாடகங்கள் ஆகியன இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. அடிப்படையில், 'கவிவேழம்' எனும் பட்டம் பெற்ற ஒரு கவிதைப் படைப்பாளியின் பன்முகத் திறனுக்கு அடையாளமாக இத்தொகுப்பு அமைந்துள்ளது.

தமிழ் இலக்கியத்தின் வரலாற்றுப் பரப்பு இசைமயமானது. அசைமொழியாகிய தமிழே இசை நயமானது. ஆகவே ஓசை தரும் உவமையிலா இன்பத்திற்கு ஆட்பட்ட மரபுக்கவிஞராக இத்தொகுதி முழுதும் பாரதிபாலன் அறிமுகமாகிறார். இயல்பான, எளிய, இசைமயமான சொற்கூட்டல்களுக்கிடையே தன் உணர்வுகளைத் தடையின்றி ஓடவிடுவதே அவரது திறனாகிறது. அவரது மனம் போலவே அவரது படைப்பாக்கங்களும் ஆழ்ந்த, எளிய வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. வலிந்து செய்யும் எந்தவொரு சோதனை முயற்சியும் மரபுக்குப் பொருந்தாத செயற்கை அழகியல் முயற்சிகளும் அவரிடம் இல்லை.

பாரதிபாலன் குறித்துச் செல்லும் நிகழ்ச்சிகளையும் உணர்ச்சிகளையும் சுருக்கி, அவர் யார் என்று தேடுவோமேயானால் 'அடையாளங்களும் வாழ்க்கை மதிப்புகளும் சிதைவதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் நொறுங்கும் ஓர்

இதயம்' என உணர்ந்து கொள்ள முடியும். தன் மண்ணையும் மக்களையும் மொழியையும் பண்பாட்டையும் இழந்து, உரிமையற்று அகதியாகி அலைகடல் தாண்டி வந்து ஏதோ ஒரு மண்ணில் எந்தவொரு அடையாளமும் உயிர்ப்பும் இல்லாமல் வாழநேர்ந்த அவலத்தில் துடிதுடித்துப் போகும் ஒரு கவியுள்ளமே இத்தொகுப்பின் எல்லா எழுத்துகளுக்குப் பின்னும் ஒலிக்கிறது.

இந்த ஒரு கட்டத்தை எடுத்துக் கொண்டு விவாதிக்கின்றவர்கள் 'ஏன் இதன் பொருட்சுகங்களை மறந்து புலம்பித் தவிக்க வேண்டும்' எனக் கேட்கும் யதார்த்தவாதிகளாக இருக்கலாம். ஆனால் மண்ணில், மரத்தில், இலையில், தளிரில், உறவில், கண்ணீரில், புன்னகையில், பாசத்தில், நேசத்தில், ஆன்மாவைக் கண்டடைகின்ற யாருக்கும் இந்த இன்பம் சாத்தியமானதாக வரலாறில்லை.

இந்த மனம் தான் தீம்புளிப்பாகரில் இனிமை காண்கிறது. நீரின்றி வறண்ட பாலைநில ஊரில் கணவனொடு வாழ்வதைச் சொர்க்கமாகக் கருதுகிறது. அன்னிய நாட்டு ஆயிரம் பைன் மரங்களை விடச் சொந்த நாட்டின் பனை மரத்திற்கு ஏங்குகிறது.

பாரதிபாலன் மனம் உள்ள மனித நேயர். அதனால் அவர். கவிஞர் அதனாலேயே தன்னைப் போலவே அகதியாய் வந்து வாழ்வோரின் பொருளற்ற பொருள் வாழ்வு குறித்து அருவருப்படைகிறார்; மொழியிழக்கும் மனிதர்களைச் சகிக்க மறுக்கிறார் ; பண்பாட்டை உதறிவிடும் மனிதர்களை உதறுகிறார்; எதிர்காலச் சந்ததிக்காக உருகுகிறார். இத்தொகுப்பெங்கும் தெறிப்பது அவரது வெப்பம் கொண்ட உள்ளம் இதற்கெல்லாம் வெடித்துச் சிதறும் கங்குகளே.

❖ ❖ ❖

இத்தொகுப்பில் கவிதைகளைத் தவிர விதந்து குறிப்பிடப்பட வேண்டியவை. 'தமிழ்ப் பத்திரிகை உலகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்...' என்ற ஆய்வுரையும் 'நெஞ்சினிலே சுமந்து' என்ற கவிதா இசைநாடகமும் ஆகும்.

பாரதிபாலன் தீவிரமான தேடுதலும் துணிவும் மிக்க ஆய்வாளர் என்பதை ஆய்வுரை அடயாளம் காட்டுகிறது, ஆங்கிலேய அரசுக்கு விசுவாசமாக இருந்து தம்மை உயர்த்திக் கொண்டோர் குறித்தும், ஆறுமுக நாவலரின் பல்வேறு செயற்பாடுகள் குறித்தும், மறைமலையடிகள் குறித்தும், வள்ளல் பெருமானார் குறித்தும் அவர் முன்வைத்துள்ள கருத்துகள் மிக விரிவான ஆய்வுக்குரிய உட்கூறுகளைக் கொண்டுள்ளன.

'நெஞ்சினிலே சுமந்து' என்னும் நாடகம் அரங்க வடிவத்தில் அவருக்கு இருக்கும் அறிவினைப் புலப்படுத்துகிறது. புலம் பெயர்ந்து டென்மார்க்கில் வாழும் சிறுவனது முன்வாழ்க்கை, பின்னோக்கு உத்தியாகச் சொல்லப்பட்டு, மீண்டும் தற்போதய நிலையின் தன்மையைச் சொல்லும் இந்நாடகம் மிக இயல்பாக, இனிய பாடல்களால், ஓர் இனிய புல்லாங்குழலின் பாடலாய் இருந்த எளிய வாழ்க்கை துப்பாக்கிகளால் சிதைக்கப்பட்ட மாபெரும் துயரத்தை அற்புதமாகச் சித்திரித்துக் காட்டுகிறது.

காட்சிகளின் அமைப்பு, மேடையின் செயல்பாடுகள் குறித்து எழுதப்பட்டுள்ள குறிப்புகள் இது நிகழ்த்தப்பட்ட போது எத்தகையதொரு சிறப்பான வெளிப்பாட்டைப் பெற்றிருக்கும் என்பதை உணர்த்துகிறது.

❧ ❧ ❧

'நாட்டுமக்கள் நலமுற்று வாழவும் நானிலத்தவர் மேனிலை எய்தவும் மூட்டும் அன்புக் கனலொடு வாணியை முன்னுகிறேன்' என்றுரைக்கும் பாரதியின் பரம்பரை இப்படித்தான் விடுதலையும் நேயமும் உண்மையும் உணர்வும் மிக்க மனித குலத்தின் வாழ்விற்காக ஏங்கித் தவிக்கும் போலும்!

இந்த நன்முயற்சிக்கு என்மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதை விட வேறென்ன உவகை இருக்க முடியும்?

அன்புடன்

**பாரதிபுத்திரன்**

# மேற்குலக அரங்க நிகழ்வுகள்

## 1. ஜேர்மனி, பேர்லின் அரங்கிலே...

(12.08.1993இல் ஜேர்மனி பேர்லின் மாநகரின் புதிய கலாச்சார மண்டபத்தில் ஐரோப்பாவின் முதலாவது உலகளாவிய தமிழுறவு மாநாடு இடம்பெற்றபோது, 2ஆவது நாள் தனிநாயகம் அரங்கில் 'கை நீட்டும் கடல் அலைகள்.' என்ற தலைப்பிலே இடம் பெற்ற கவியரங்கு.)

**கவியரங்கத் தலைமை:** தமிழகத்துப் பேராசிரியர் அ. இறையனார்.
**பங்கு பற்றிய ஏனைய தமிழகக் கவிஞர்கள் :** சி. கே. அரங்கசாமி, முனைவர் ஆண்டவர், ஆ. திருவாசகன், கோவிந்தராஜன், திருமுருகன், சண்முகராஜா, மகேந்திரராஜா ஆகியோருடன் கவிவேழம் பாரதிபாலன்.

## கை நீட்டும் கடல் அலைகள்!

**குரு வணக்கம்**

பண்டிதர் வள்ளல் நல்ல
பாவலர் கலைஞர் என்றும்
கொண்டபே ரன்பு மாறாக்
குழந்தைகள் தோழர், கல்வி
கண்டுயர் தரத்தில் நிற்போர்
காதலித் திடும்ஓர் செம்மல்!
தண்டமிழ் வெள்ளை அண்ணன்
தாழ் பணிந் தேத்துகின்றேன்.

**அவையடக்கம்**

நாடாண்ட மன்னவர்தம்
நலன்பாடித் திறன்பாடி
நாட்டுநிர்வாகம்பாடி...

ஏடாண்ட கவிக்குலத்தார்
வரிசையிலே இங்கிருப்போர்
யார் என்றேநீர்...
-தேடாதீர்

மன்னவரும் கவிக்குலமும்
ஜனநாய கத்தினிலே நாங்களேதான்!
வாடாதீர் மன்னவர்காள்!
மன்னவர்நாம் கவியாகிக்
கவிதை செய்வாம்!

சென்னைத் தமிழ் ஆங்கே
சோமாரி ஆகிடவோ?
அன்னைத் தமிழ்க் குலங்கள்
அந்நியத்தின் வருடிகளோ?
எண்ணச் சுமையாலே
எம்மினத்தை மீட்பதற்கே
பைந்தமிழின் காவலர்கள்
பேர்லினிற்கு வந்தனராம்!

தென்நாடாம் தாயகத்தின்
திருக்குறளும் அருட்பாவும்
பன்னாட்டுத் தமிழுறவைப்
பாசமுறப் பிணைப்பதற்கே
பைந்தமிழின் காவலர்கள்
பவனிவரும் பேர்லின்இது.

சிந்தை இனித்திடும்ஓர்
சிறப்பான மாநாடு!
இந்த மாநாட்டில்
இன்றையநாள் கவியரங்கு!
'கை நீட்டும் கடல் அலைகள்'
கைநாட்டு போடுகிற
காலமெனத் தமை இழந்து
கண்டமெலாம் மொழிபடித்துக்

கன்னித் தமிழ் மறந்து
தன்நாட்டு நினைவகன்று
தறிகெட்டு வாழும்இனம்...!
தக்கஒரு இணைப்பகன்று
தவிக்கின்ற தமிழரினம்!

தென்நாட்டு நிலவரத்தால்
திகைக்கின்ற எங்களினம்!
தீந்தமிழர் ஒற்றுமையை
தினம் எண்ணித் துடிக்கும்இனம்!
பன்நாட்டுத் தமிழ்உறவுப்
பாலமதன் வழிநடந்து-இன்று
பண்டையநம் சொந்தமதைப்
பாசமுறத் தழுவும்இனம்!- ஆம்
பன்நாட்டுத் தமிழ் உறவால்
புத்துணர்ச்சி பெற்ற இனம்!
-இன்றைய
பேர்லினையே நினைவிருத்திப்
பகைமதிலைத் தகர்த்த இனம்!
-தங்கள்
காலனிகள் தோறும்எம்மை
கரும்பு நட்டு சத்துறிஞ்சி
மொரீசியசில் பீஜியில்
மொழிமறக்க விட்டவர்கள்!
'அநாதரவாய் விட்டவர்கள்!'

காப்பிரிகள் காடுகளில்
கண்ணீரை எழுதவைத்து
நாப்பிடுங்கி வாழவைத்து - அன்று
நம்மினத்தை வருத்தியவர்.
செந்தமிழர் கண்ணீரை
தேநீராய் அருந்தியபின்
சிந்தையிலாச் சிங்களர்க்கே

தொடர்எழுதப் பணித்தவர்கள்..

இருஇனத்தின் தீவகத்தை
ஓர்இனத்திற்கு உரிமைஇட்டு
பெரும்போரை நீளவிட்டு - இன்று
பரிகசித்தே நிற்பவர்கள்...
-இவை
பிரித்தாள வந்த அந்த
பிரித்தானி, பறங்கிகளின்
பிரித்தாண்ட தந்திரமா? - இது
விட்டகுறை தொட்டகுறை
விபரீத வரலாறா?
-ஆம்

பிரிட்டன்பிரான்ஸ் ஒல்லாந்து
போர்த்துக்கல் பறங்கியரின்
பிரித்தாண்ட தந்திரத்தால் இன்று
பரிதவிக்கும் தமிழினத்தார்!!
-அந்த
பறங்கியிடம் பாரதமே
படித்துவைத்த வரலாறு!- இன்று
திராவிடனைத் தெருத்தெருவாய்த்
துரத்திவிடும் வரலாறு!!

எங்கும் தமிழனுக்கு
இருப்பிடமே இல்லாது
அங்கும் இங்கும்என
அகதிநிலை பெறுவதென
கண்ணியமே இல்லாது
கழகமெலாம் உடைப்பதுவும்
பண்பிழந்து பைந்தமிழைப்
பலகூறாய்ப் பிரிப்பதுவும்
பாரதமே பறங்கியிடம்

படித்துவைத்த வரலாறு!

இந்த வரலாற்றை
இங்கிதமாய் முறியடித்து
அன்னைத் தாய்த் தமிழை
அகிலமிசை ஏற்றவல்ல - எங்கள்
பன்நாட்டுத் தமிழ் உறவே!
பல்லாண்டு வாழியநீ!
இந்த அமைப்பினிலே
**`கை நீட்டும் கடல் அலைகள்!'**
இன்றையநாள் கவியரங்கு!

இனிய கவிஅரசே!
இணைந்த பெருங் கவிக்குலமே!
இவ்வரங்கை நிறைத்துள்ள
இவ்வுலகத் தமிழினமே!- உங்கள்
அனைவர்க்கும்.. எந்தன்
அன்பான வணக்கங்கள்!!

`கடல்வானும் மலைவானும்
கட்டித் தழுவிவரும்!
அலையோடு அருவிகளோ
ஆனந்தம் மீட்டிவரும்!
பூங்கொடியைத் தான் சுமக்க
படர்கிளையோ பார்த்திருக்கும்!
கனி சுமந்து மரங்கள் எல்லாம்
கிளிகுயிலுக்கு ஏங்கி நிற்கும்!
மான்விழியோ நீர்அருந்தி
மீன்விழியைப் பாடிவரும்!
கட்டுமரம் கரை ஒதுங்கிக்
கடற்பரிசு தான் வழங்கும்!
பனம்பழத்தின் வாசனையோ
பண்பாடு காட்டிநிற்கும்!
தளிர்க் கரங்கள் கூடையெலாம்

தேச் செடியின் தளிர் சுமக்கும்!
பால்மரமோ தெங்குடனே
பலன்விழைக்கப் போட்டியிடும்!
கருக்கலிலே கண்விழித்துக்
கமபுலத்திற்கு ஏகுவெனப்
புட்களிடும் பூபாளம்
புத்துணர்ச்சி தான்வழங்கும்!
தன்மானம் காக்கவென

தறி ஓசை எச்சரிக்கும்!
மானிடர்க்குப் பரிசாக
மாணிக்கம் காத்திருக்கும்!
-இப்படி
சொர்க்கத்தைத் திறந்து, எமக்கு
சுகம் அளிக்கும் ஈழம் அது!

கைஅடக்கத் தீவு! - அதனுள்
கதகதப்பும் சுகக் குளிரும்!
தேவைக்குத் தக்கபடி

சுகங்காணச் சுற்றிடலாம்!
`இப்படிஓர் இன்பூமி
இவ்வுலகில் ஏதுமில்லை!
இயற்கை இவர்க்களித்த
இன்பப் பரிசுஎனவே
எவர்கண்ணோ பட்டதனால்
எங்கெங்கோ சுற்றுகிறோம்!
அரசியலால் இனவெறியால்
அழகு ஈழம் இழந்தவர்நாம்!
எங்களுக்குள் சண்டையிட்டு
எதையெதையோ இழந்தவர்நாம்!
அந்நியர்தம் நாடுகளில்
அவர்அவர்தம் மொழி படித்து

எங்களது வாழ்நாளை
எப்படியோ ஓட்டுகிறோம்!
உறைபனியில் கவசமிட்டே
ஊர்நினைவில் வாடுகின்றோம்!

செயற்கைத் தோரணத்தில்
செந்தமிழைத் தேடுகின்றோம்!

அந்நாளை நினைவுகளோ
அழியாத கோலமன்றோ!

மிளகாய்ப் பொரியல்அதை
நொறுக்கெனவே தின்றவர்நாம்!
ஆகா! என உறைத்து
ஆனந்தம் கண்டவர்நாம்!
அறுசுவை உண்டிகளை
அடுக்காய்ப் பிரித்து, அதற்கு
உறுசுவை ஊட்டி, அதன்
உண்மையிலே தவழ்ந்தவர்நாம்!

ஊரைவிட்டு வந்தாலும்
உண்டசுவை மாற்றவில்லை!
பாரைக் கருவாட்டுப்
பார்சலுக்கும் எழுதுகின்றோம்!

காரை எடுக்கின்றோம்!
தமிழ்க்கடைகள் தேடுகின்றோம்!
ஊரைக் கண்டதுபோல்
உள் உவகை பூக்கின்றோம்!

பண்டம்எலாம் ஏற்றியபின்
படக்கெனவே விரைகின்றோம்!
சோற்றைப் பிசைந்தபடி
சோகமுடன் மூச்செறிவோம்!
`தென்னைபனை ஓலைகளை
தேன்கதலி வாழைகளை

பன்னீரால் கழுவியபோல்
பால்நிலவு முன் எறிப்ப...

தென்றல் உடல் தழுவ...
சிறுவர்களாய், வெற்றுடம்பில்
துறுதுறுத்துத் திரிந்தோமே!
தெம்பாங்கு இசைத்தோமே!

அப்பாவிக் குழந்தையராய்
அன்றேநாம் வாழ்ந்தோமே!
மண்அழைந்து மண் அழைந்து
மணல்வீடு சமைத்தோமே!

பண்பாடு காப்பதிலும்
பாலகர்நாம் குறைந்தவரோ?

பெற்றவரை பெரியவரை
எம்வயதில் மூத்தவரை
இருக்கைதனை விட்டெழுந்தே
வணக்கமிடும் பண்பினர்நாம்!
மெத்தப் படித்திருந்த
மேதாவி யானாலும்
படிக்காத பெற்றவர்க்கு
பாலகராய் இருந்தவர்நாம்!
-இப்படி
பெரியோரைக் கனம்பண்ணி
பெற்றவரை வழிபட்டு
பூவரசம் பிரம்படியில்
பண்பட்டு வளர்ந்தவர்நாம்!- ஆம்
ஐந்தில் வளைந்திட்ட
அன்றையநாள் குழந்தையர்நாம்!

-எங்களது

பூம்பாதம் பட்டதுமே
பூமித்தாய் சிலிர்த்திடுவாள்!

-அன்று

கெந்திப் பிடித்தோம்!
கிளித் தட்டு தாம் மறித்தோம்!
கும்மி கோலாட்டம்
பரதம் கரகம்என
கலாச்சாரச் சுனையினிலே
களிப்புடனே நீச்சலிட்டோம்!- எங்கள்
கலாச்சாரச் சுனையினிலே
களிப்புடனே நீச்சலிட்டோம்!

-இன்று

கருங்கடலில் பால்டிக்
அட்லாண்டிக் சமுத்திரத்தில்
எதிர்நீச்சல் போடுகிறோம்!
எதையெதையோ பாடுகிறோம்!

ஸ்கன்டி நேவியராய்
ஜேர்மனியாய் பாரீசாய்
சுவிஸ்லண்டன் நெதர்லாந்து
அவுஸ்ரேலியா கனடாவாய் - இன்னும்
எங்கெங்கோ ஓடுகிறோம்!
உயிர்மூச்சு வாங்குகிறோம்!
அந்தந்த நாடுகளின்
அரசியலை மாற்றுகின்றோம்!

-இல்லை

பத்திரிகைக் காரருக்கு
பச்சைக் கொடிகாட்டுகிறோம்!

எம்பெயரில் எவர்எவரோ
பிழைக்கவழி பண்ணுகிறோம்!
குழம்பிய எம் சிந்தைகளால்
குவலயத்தைக் குழப்புகிறோம்!
சீராய்எம் தமிழ்காக்கும்
செய்கையெலாம் தாம்மறந்து

ஓரா யிரம் மன்றம்
ஊர் ஊராய்த் தொடக்குகிறோம்!
அச்சில் வருவ தெலாம்
அசல் என்று போற்றுகிறோம்!
எச்சிலையே சுவைத்தபடி
எம் ஈழம் மறக்கின்றோம்!

உல் பிஸ்கி வைன்அடிப்பில்
உல்லாசம் தேடுகிறோம்!
உடல்பொருளை விரயமிட்டே
உருக்குலைந்தும் போகின்றோம்!

கால்கிழிந்த கால்சட்டை
காதில் ஒரு வளையமிட்டே
கால்சுழுக்க நடனமிட்டே
லம்பாடா பாடுகிறோம்!

டிஸ்கோ சாந்திகளின்
பின்னாலே ஓடுகிறோம்!
பலலட்சம் ஈட்டுதற்கு
இலகுவழி தேடுகின்றோம்!
எதிர்காலம் இல்லாமல்
இருள்சிறையில் வாடுகின்றோம்!
-நாங்கள்
செல்லுகிற தேசமெலாம்
சச்சரவு தேடுகின்றோம்!
-எங்களது
செல்லரித்த பேதமையில்
வல்லமைகள் காணுகிறோம்!
மன்னிக்கும் பாங்கினையோ
மனதிருத்த மாட்டாமல்
வஞ்சம் தீர்ப்பதிலே
வாழ்நாளைப் போக்குகின்றோம்!
மேற்குலகின் மொழிவழியே
மிதக்கின்ற சிந்தையினால்

நாக்குளறித் தமிழ் கதைக்கும்
நம்சிறுவர் சிறுமியரை
பெருமிதமாய் நோக்குகிறோம்!
பெயரையுந்தாம் மாற்றுகிறோம்!

தமிழ்த்தாயின் தலைக் குனிவை
தமிழினம்நாம் மறக்கின்றோம்!

வையகம்எம் குறளைஎலாம்
வாயாரப் புகழ்கிறதே!
- எங்களது
பையன்களுக்கு ஒரு குறளைப்
படிப்பிக்க நினைத்தோமா?
வள்ளுவர் கோட்டமதன்
வரலாறு தனை மறந்து

குமரிக் கோட்டமென
குதூகலங்கள் தேடுகிறோம்!
-ஆம்
கலாச்சாரம் காட்டுதல்போல்
கண்துடைக்கும் சினிமாவில்
தமிழ்ப் பண்பு காணுகிறோம்! - அதை
சிறுவருக்கும் காட்டுகிறோம்!

எதிர்கால சந்ததிக்கு
ஏற்றவழி சொல்லாமல்
ஏனோ தானோவாய்
எங்கெங்கோ நடக்கின்றோம்!

எம்மினத்தை எவரெவரோ
இழிவுசெயும் வேளையிலே
இன்னும் தெரிந்ததென்று
இரண்டொன்றைக் கூவிடுவோம்!
நாகரிகம் என்பதற்கு
நாம்விதித்த விதி இதுதான்!

சாதியத்தால் பிளவுபட்ட
தமிழன் சரித்திரமே
வீதிவிபத்தாக்கி - இன்றும்
வில்லங்கப் படுத்துதெமை!

அண்மையிலே அச்சான
ஆங்கிலத்தார் அகராதி
பொருட்பெண்டிர் நாடெனவே
பொருளுரைக்க, தாய்லாந்தோ
பொங்கி எழுந்ததுவாம்!
பெருங்கோசம் போட்டதுவாம்!
நூலைத் தடையிடென
நீட்டி முழக்கியதாம்!
-ஆம்
அவமானம் என்றவுடன்
அவர்களது தன்மானம்!

கண்ணகியர் நாடெனவே
கதறுகிற தாய்லாந்தும்
இந்தியரை அகதியராய் - அன்று
அனுப்பி வைத்த பர்மாவும்

தங்கள்அக ராதியதில்
எங்கள்தமிழ் இனத்தவரை
பயங்கரப்பேய் பிசாசெனவே
பொருள்உரைத்து வைத்துளராம்!

இன்னும் தெரிந்திருந்தால்
இரண்டொன்றை நாம்கூறி
எங்களது தமிழினிற்கு
அகராதி முடித்திருப்போம்!
இரண்டுபட்டு நிற்பதனால்
எங்களுக்கு இந்தநிலை!

சிங்களத்தார் செய்கையதால்
சேர்ந்தஒரு இலட்சியர்நாம்!
எங்களுக்குள் எதை நினைந்து
ஏதேதோ பண்ணுகிறோம்!

சிலுவைகளாய் மசூதிகளாய்
புத்தர்களாய் புவி முழுதும்
தத்தமைத்தாம் பலப்படுத்தல்
தற்கால வரலாறு!

தம்மதத்தால் இணைவதிலே
தந்திரங்கள் தாம் வகுத்து
தரணிக்கோர் உரை எழுத
தேசமெலாம் துடிக்கிறது!
-இங்கே
தன்மானத் தமிழினம்நாம்
ஒன்றுபடல் தாம்மறந்து
துண்டுபட்டு நிற்கின்றோம்!
துயர்கதையாய் தொடர்கின்றோம்!

எரிகின்ற ஈழமதை
எண்ணாமல் திரிகின்றோம்!
எங்களது பிரிவினையால்
எம்முரிமை இழக்கின்றோம்!

பர்மியத்தில் இந்தியர்கள்
பட்டதுயர் நாமறிந்தும்
நம்இட்டம் போலெல்லாம்
நடக்கின்றோம்! நடக்கின்றோம்!!
-இட்லர்வழி
நாஸிகளின் வன்முறைகள்
நமைவாட்டும் வேளையிலே
கூண்டுப் பறவைஎனக்
குறுகிப்போய் வாழுகிறோம்! - அப்போது

எங்களது ஈழகத்தை
அடிக்கடிநாம் நினைந்திடுவோம்!

என்றோ ஒருநாள் எம்
ஈழம் எமை அழைக்கும்! - எங்களது
துண்டுபடு நிலைஅகன்று - அங்கே
ஒன்றுபடும் அணி பிறக்கும் - அப்போது
பன்நாட்டு மொழிகளிலே
பள்ளிகளைத் திறப்பதற்கு
எம்நாடு திண்டாடும்!
-அங்கும்
அகதிநிலை உருவாகும்!
-எனவே
செந்தமிழைச் சிறுவரது
சிந்தையிலே பதித்திடுவோம்!
ஆன்மிக நேயமுடன்
இக்கணமே இணைந்திடுவோம்!

விஞ்ஞான நுண்ணறிவு
மேவுகிற மேற்கினிலே
அஞ்ஞாத வாசங்கள்
அனுபவிக்கும் அகதியர்நாம்!

இங்குள்ளோர் அறிவியலை
எம்ஈழம் கொண்டேக
தங்கியுள நாட்களெலாம்
தக்கபடி வழிசமைக்கும்!
-வான்பீச்சும்
புக்காரா பிடிப்பதற்கும்
புதுவழிநாம் பயின்றிடலாம்!
உலங்கு வானூர்தி
உபயோகம் இல்லாதே - தலை
உலர்த்திடஎம் பெண்டிருக்கு
உயர்பரிசே வழங்கிடலாம்.
-அங்கே
கைகால் இல்லாமல்
கதறுகிற மானிடத்தை

காக்கும் வழிவகைகள்
கச்சிதமாய் ஆற்றிடலாம்!

அன்ன பூரணியை
அமெரிக்காக் (கு) அனுப்பிவைத்தோம்!
ஆறுமுக நாவலரால்
எம்தமிழைக் காத்துவைத்தோம்...
-என்று
பழம்பெருமை பேசாமல்
பேதமைக்குள் உறங்காமல்
சிந்தைத் தெளிவாலே
சோதரர்நாம் ஒன்றிணைவோம்!

வேற்றுமையை களைந்திடுவோம்!
வீறு கொண்டு எழுந்திடுவோம்!
ஒற்றுமையைப் பலமாக்கி
ஓங்கி முழக்கிடுவோம்!

நாற்றிசையும் நமை நோக்கி
நாள்தோறும் ஏக்கமிடும்
ஈழ மாதாவின்
இதயம் மலர்கிறது!

கைநீட்டும் அலைக்கரமோ
காவியமே படிக்கிறது!- அதில்
ஒன்றுபட்ட தமிழினத்தின்
உல்லாசம் தெரிகிறது!

வணக்கம்

# 2. டென்மார்க் கேர்ணிங் நகரிலே...

(12.06.1993இல் டென்மார்க் கேர்ணிங் நகரில் உள்ள Noregade skole இல் இடம்பெற்ற ஈழத் தமிழர் முத்தமிழ்விழா கவியரங்கில் கவிவேழம் பாரதிபாலன் தலைமை ஏற்றுப் பாடியது. குருவணக்கம், அவையடக்கம் ஆகியன ஆரம்பத்தில் உள்ளதுபோல் அமைவதால் அவை இங்கே இடம்பெறவில்லை. தொ. ஆர்.)

## பொறுக்காத நெஞ்சொன்று

-இங்கே
முத்தமிழை முன்நிறுத்தி
முத்தமழை பொழிக என
வித்தகர்தம் வழியினிலே
விளங்கிடுமோர் கவியரங்காம்!
இந்தக் கவியரங்கிற்கு
ஏற்றபடி தலைமையிட
என்னைப் பணித்தவரோ
எனதன்பின் துரை. முல்லை!
..பொறுக்காத நெஞ்சொன்று... இது தலைப்பு!

இந்த வசந்தத்தில்...

இன்பத்தில் நீந்தி
இனிக்கின்ற மானிடமே!- இங்கே
துன்பியலைப் பாடிஉம்மை
துடிக்க வைக்கப் போகின்றோம்!
பொறுக்காத நெஞ்சமென நாம் மூவர்!
-ஆம்
என்தலைமை ஏற்று உவந்து
எடுப்பாக கவிபுனைந்து - வந்துள்ள

பொன்னண்ணா சாந்தி எனும்
பொங்குதமிழ்க் கவிக்குலமே!
இன்னிசையால் நாட்டியத்தால்
இசைவான பட்டிமன்றால்
இவ்அவையைக் கிறங்கவைக்கும்
இனிய கலைக் குழுவினரே!
-இவர்களை
சேவகமே புரியவைத்து
செந்தமிழர் நாங்கள்என
கரகோசம் புரியவந்த
கலாச்சாரத் தமிழினமே!
-உங்கள்
அனைவர்க்கும் எந்தன்
அன்பான வணக்கங்கள்!
பொறுக்காத நெஞ்சொன்று...

வாத்துக்கள் வசைபாடி
வாழ்விடத்தை மாற்றுகையில்
வையமெலாம் வெதுவெதுப்பின்
வகைதேடி ஓடுகையில்

பூத்துக் குலங்குகிற
புதுவசந்தம் என நினைந்து
`வசந்தம் - சமர் என்னும் கோடைகாலம்'
பூத்துக் குலங்குகிற
புதுவசந்தம் என நினைந்து
புதிதாக ஓர் அரும்பு
புறப்பட்டு நின்றதுவாம்!
ஆத்தாடி! தாய்மரமோ
அலறித் துடித்ததுவாம்!
அக்கணமே உறவுகளை
அவ்விடத்தே அறுத்ததுவாம்!
கூத்தாட தன்தோளை

கூதலிடம் கொடுத்ததுவாம்!
'கூதல், வின்ரர் எனும் கடுங்குளிர்காலம்'
கூத்தாட தன்தோளை
கூதலிடம் கொடுத்ததுவாம்!
கூசாமல் முத்தமிட்டே
குடிவெறியாய் மயங்கியதாம்!
கூதலனின் கொடுங்கோன்மை
கோலமதை மாற்றியதாம்!
கொடுந்துயரால் தனிமரமோ
கோவென்று கதறியதாம்!

ஆதவனைக் கரங்கூப்பி
அட்சரங்கள் ஓதியதாம்
அழகான காலையிலே
அரும்புகளோ தோன்றியதாம்!

பாதகனின் பிடிதளரப்
பகலவனை அணைத்ததுவாம்!
பாசமெலாம் சொரிந்தேஓர்
பசுமரமாய் நிமிர்ந்ததுவாம்!
-அந்த
வசந்தம் மீண்டதென
வந்தஒரு புதுமிடுக்கு!
-மக்கள்
சாதகமாய் இயற்கையுடன்
தமை இணைத்தே வாழ்க்கையிடும்
ஐரோப்பா வந்துவிட்டோம்!
வாழ்வியலில் ஈழவர்நாம்!
நிர்வாணம் எய்திநின்ற
நெடுமரங்கள் துகிலுடுக்க
நிர்வாணம் ஆகிவிடும்
மானிடர்கள் தேசமிதில்

புஸ்வாணம் எனவேதாம்
புறப்பட்டு வந்தவர்நாம்!
கிஸ் கொடுக்கும் தெருக்களிலே
கூச்சமுடன் நடப்பவர்நாம்!

பண்பாட்டு அருவருப்பில்
புண்பட்டுத் தவிப்பவர்நாம்!
திண்டாட்ட வாழ்வமைத்து - எங்கள்
தேசம் அதை நினைப்பவர்நாம்!
-ஊரில்
கொண்டாட்டம் போல் அமைந்த
குளிர்காலக் கருக்கலிலே
திருவெம்பாப் பாப்பாடி •
தெருத்தெருவாய் நடந்தவர்நாம்!
- அங்கே
காதலிலும் கன்னியரைக்
கண்ணடிக்கும் வேளையிலும்
வேதத்தை இலக்கியத்தை
வீம்புக்கு அழைத்தவர்நாம்!
கண்ணகிபோல் சீதையைப்போல்
கிழத்தியர்க்கு கற்பமைத்து
எண்ணத் திரைக்குள்ளே
எம்வாழ்வை ஏற்றவர்நாம்!
-அங்கே
மொட்டிட்ட மலர்ஆவாள்
முற்றியவோர் கனிகன்னி!
கட்டிளங் காளையர்க்கோ
காதலினால் வரும் சன்னி!
கட்டுக் கட்டாகக்
கடிதக் கதை பண்ணி - காளை
தொட்டுச் சுகங்கொடுப்பான்!-
தொடருங்கதை பின்னி!
-அந்த
சொந்த நாட்டில் எம் சுதந்திரம் போனது!
சூழ்ந்து வாட்டிடும் துயர்கள் அங்கானது!

- எம்மால்
இந்தியாவுமோ எட்டி உதைக்குது!
இந்த நாடுகள் தஞ்சம் கொடுக்குது!
-இங்கே
வந்த எங்களின் வாழ்க்கைதாம் எப்படி?
வன்முறைகளாம் சண்டையாம் இப்படிச்
சந்து பொந்தெலாம் சொல்வது கேட்குது!
- புவிச்
சரிதம் தமிழனைச் சண்டியன் ஆக்குது!

முன்பு தோன்றிய மூத்த குடிகள் நாம்!
மூன்று வேந்தராய் அன்றுநாம் ஆண்டதாம்!
அன்பு என்பதே எங்களுக் கில்லையாம்!
அடிக்கடி எம்முள் படையெடுப் பாகுமாம்!

பின்பு மன்னர்எம் ஆட்சிகள் போனதாம்!
பிரிந்த முத்தமிழ் ஒருதமிழ் ஆனதாம்! - இருந்தும்
தொன்று தொட்டஅத் தோஷங்கள் போனதா?
சோழ! பாண்டிய! நெஞ்சு பொறுக்குமா?

கந்தன் ரத்தமோ A ஏப்பிரிவானதாம்!
காளி ரத்தமோ B ப் பிரிவானதாம்!
எந்தன் ரத்தமோ Oப் பிரிவானதால்
ரத்த வங்கியாய் ஐக்கியம் பாடுவேன்!
-ஆம்
எங்கள் ரத்தமோ ஓ பிரிவானதால்
இரத்த வங்கியாய் ஐக்கியம் பாடுவோம்!
சந்தனத் தமிழ்த் தென்றலாய் வீசுவோம்!
சாதிச் சாக்கடை வாடையை மூடுவோம்!
சிந்தை எங்கணும் சமரசம் ஊட்டுவோம்!- நீர்
சீறி வந்திடில் எம்கன்னம் காட்டுவோம்!

காந்தி அன்றொரு யேசுவாய் மாறினார் - தன்

கன்னம் காட்டினார் வெள்ளையன் ஓடினான் - அதை
ஏந்தி நின்றஎம் ஈழத்துக் காந்தியும்
எங்கள் வாழ்வினுக்கு அகிம்சையைக் காட்டினார்!

சாந்தி வந்ததா புத்தரின் நாட்டிலே?
சரித்திரங்களோ கறைகளாய்ப் போனது!
வாந்தி கொண்டு அந்த புத்தரும் ஓடினார்! - பெரும்
வன்முறைகளைப் பிக்குதான் பாடினார்!
... `இக்கணம்இதை எதற்கு நீ பாடணும்?
இந்த நாட்டிலே டிஸ்கோதான் ஆடணும்!

பக்க வீட்டுடன் பகைமைதான் வளரணும்!
பருப்பு வேகுமுன் உப்புதான் போடணும்!...'

... `ஐக்கியத்தைநீ எப்படிப் பாடுவாய்!
யாருக்கு ஒற்றுமை இங்குநீ காட்டுறாய்!
அக்கம் பக்கமா? அகதிஎம் சொந்தமா?
அவை கலைந்ததும் அவர்அவர் வேறுதான்!...'
என்ற கூக்குரல் என்செவி கேட்குது!
இடையில் ஈனமாய் செந்தமிழ் கேட்குது!
நன்று நன்று நம் செந்தமிழ் வேந்தரே
நானும் இங்குஏன் ஒற்றுமை பாடணும்!
ஒன்று சொல்கிறேன் என்னுயிர் போக்கிடும் - அங்குஎன்
உதிரம் பொங்கிஉம் ஒற்றுமை பாடிடும்!
மன்றில் நீங்களோ கவரியாம் மான்இனம்!- உங்கள்
மயிரை ஒட்டுமாம் இங்குஎம் பாவினம்!!
(இராகத்தில்)
`நெஞ்சினிலே துயர் சுமந்து
நெடுங்கடலைத் தாண்டி இங்கே
தஞ்சமென்று வந்தோமடி - ஈழத்
தமிழ் இனத்தின் கதை கேளடி!
சொத்து சுகம் துறந்தவர்கள்

சொந்த பந்தம் பிரிந்தவர்கள்
திக்குத் திசை தெரியோமடி - ஈழத்
தமிழ் இனத்தின் கதை கேளடி!...'

'மெல்லத் தமிழ்இனிச் சாகும்!.. அந்த
மேற்கு மொழி இந்த புவிமிசை மேவும்'!' - இதைப்
பாரதிக்கு அன்று யாரோ பகர்ந்தனன்!
-ஆமாம்

பாரதிக்கு அன்று யாரோ
பகர்ந்தனன், மேலைத் தேசம்
சீர்என வளர்ந்தே செல்லும்
சிறப்பெலாம் மேவும், ஆணி
வேர்என உலகைத் தாங்கும்
மேன்மையாம் விஞ்ஞானத்தை
பாரெலாம் எடுத்துச் செல்லும்
பக்குவம் மேற்கிற் குண்டாம்!
இத்தகு ஆற்றல் இல்லை
எம்தமிழ் மொழிக்காம், இங்கே
செத்திடும் சிலநாள் அந்த
செந்தமிழ் தேவை தானா?

'மெல்லத் தமிழ் இனிச் சாகும் - அந்த
மேற்குமொழி இந்த புவிமிசை மேவும்!'
-இதை
பாரதிக்கு அன்று யாரோ பகர்ந்தனன்!

'யாரடா பேதை சொன்னான்!'
பாரதி குமுறுகின்றான்...
பாரடா தமிழா நெஞ்சம்
பலம் பெற்று எழுந்தே வாடா
தேரடா கலை விஞ்ஞானத்தை
திக்குகள் எட்டும் சென்றே
வாரடா வாரிக் கொண்டே
வண்டமிழ் காக்க வாடா!

பாரதி வாக்கு இன்று
பாரிலே பலிதம் என்றே
காரணத்தோடே எங்கோ
கவிதை நான் சொன்னேன்
-ஆமாம்
ஆண்டவன் மேற்கிற்கு எம்மை
அகதியாய் அனுப்பி வைத்தார்
-நாம்
மீண்டதும் ஈழம் ஆங்கே
மேற்கே கொண்டு செல்வோம்
என்று
காரணத்தோடே எங்கோ
கவிதை நான் சொன்னேன்
-இங்கோ
காண்கிற காட்சியாலே
கலங்கியே நிற்கின்றேனே
எப்படிப் பிறந்தேன்
-என்னை
எப்படி ஈன்றாய் அம்மா?
அப்படி செய்து காட்டு
அப்பரும் முன்னால் வாரும்!
செப்படி காட்ட வேண்டாம்!
செய்துஉடன் காட்ட வேண்டும்!'
இப்படிப் பிள்ளை கேட்டால்
ஈன்றவர் என்ன செய்வார்?
'என்னடா பழக்கம் சொன்னாய்
இதை எங்கே கற்றாய்?'
- என்று
முன்னிலே நிறுத்தி ரண்டை
முதுகிலே போடுவீரோ?
'பெற்றவர் அடித்தார் என்று தொலை
பேசியில் சொன்னால் போதும்
மற்றதை பொலிசார் பார்ப்பர்!
மனத்துணிவு அதனால், பிள்ளை
- இங்கே
கற்றதை உரிமையோடே

கதைக்கு (து)எம் உரிமை தன்னை
விற்றுநாம் விட்டோம்!' என்றே
விம்மிடுகின்றோம் இன்று!

இங்கும் அங்கும் எங்கும் இதுநிலைதாம்!
-நாங்கள்

வரலாற்றின் ஏடுகளை
வசதிக்குத் தக்கபடி
மாறுதல்கள் செய்துவிட்டோம்!
'இன்றுபோய் நாளைவா!'
-இதை

இராமன் சொல்லான்இனி!
இந்திர சித்துகளால்
இராவணர்க்குத் திண்டாட்டம்
இனிமேல்தான் ஆரம்பம்!
-இங்கே

செஞ்சோற்றுக் கடன் என்ற
சொல்லுக்கே இடமில்லை!
கர்ணர்களை
-கும்ப
கர்ணர்களை
இவர்கள் இதிகாசம்
இனிமேல் படைக்காது!
-அதனால்

நெஞ்சம் பொறுக்காமல் ஏதேதோ
புலம்புதல்கள் செய்துவிட்டேன்!
-எந்தனது

முன்கவியை முடிக்கின்றேன் - வந்த
முதல்கவியை அழைக்கின்றேன்!
-முதலில்

பொறுக்காத நெஞ்சுடனோ
பொன்னண் ணாதான்
புத்தெழுச்சிக் கவிபாட வரப்போகின்றார்!
-தமிழினத்து

கன்னா பின்னா கறைநீக்கி வரமருள

அவையின் முன்னே... - பொன்
அண்ணா வருக! அருங்கவியை அள்ளித் தருக!

உள்ளத்து உணர்ச்சிகளை உங்கள் முன்னே!
உணர்ச்சி படக் கொட்டிவிட்டார்
பொன்னண்ணா தான்...
பள்ளியிலே படிப்பில்லை...
படும்நோய்க்கு மருந்தில்லை...
தலையாட்டி தமிழர்களால்
தன்மானம் போச்சுதென்றார்!
- ஆம்
எமக்கேநாம் எதிரியெனும்
இழிநிலையும் சாடி நின்றார்!
பொன்னண்ணா போதனையால்
பொங்கி நீங்கள் - மீள
போடுங்கள் பெருங்கோசம்!
கரகோசம் தான்!!-
நன்றி! அவர் வாழ்க!
-அடுத்திங்கே
அச்சம் மடம் நாணம் என்று
அன்றைய பெண் கிடந்தாள்!
- அவள்
அடிமையாகிக் காலம் எல்லாம்
வேதனையில் உழன்றாள்!
' 'ஆண்களுக்கே பெண்நிகர் ' என்று
எம்கவிஞன் புகன்றான்!- அந்த
பாரதியின் புரட்சிப்பெண்எம்
பூமியிலே பிறந்தாள்!
-அவள்
பொங்கி எழும் போதினிலே காளி வேசம்!
பொல்லாத புன்சிரிப்பில் காதல் மோகம்!
மங்கையரே இல்லைஎனில் உலகம் ஏது!
மனமுவந்தே பூமித்தாய் வகுத்ததீது!
-அந்த
பெண்ணினத்தின் பிரதிநிதியாக இங்கே

பெண்ணொருத்தி எழுகின்றார் கவிதைபாட!
பண் போல அவர்பெயரே சாந்தியாமே!
அவர் படைப்பில் சாந்தியைத்தாம் பார்ப்போமாநாம்!
சாந்தி எனும் சோதரியே வருக!
- நீவிர்
சபையினுக்கு சாந்தியினைத் தருக பார்ப்போம்!!.

சாந்தி என்ற பெயர்வழியே சாந்தி தேடி
- இங்கே
சஞ்சலத்தால் வாடுகிறோம் சாந்தி இன்றி!
பூந்தி லட்டு பாயாசம் படைக்கும் பெண்ணா
பாடல்இதை எழுதியதாய் பதைக்கின்றீரா?
என்னவொரு ஆவேசம்!
எங்கள் நாட்டை
எடுத்துவந்தார் எம்பெண்கள் கதைகள் சொன்னார்!
ஆமிகளோ காமியராய் ஆகி நின்ற
அருந்தமிழ்பெண் வேட்டைகளை
அலறிச் சொன்னார்!
-ஆம்
எம்பெண்கள் படுதுயரை எடுத்துச் சொன்னார்!
உங்கள்கண்ணீர் கரகோசம் ஏற்றுட்கார்ந்தார்!
அவர் வாழி!
மளமளவென்று இவ்வரங்கை முடிக்க என்றே
மன்றத்தார் உத்தரவு - நிகழ்ச்சி என்று
இன்னிசைகள் உள்ளதனால் முடிப்பியத்தை
இவ்வாறாய் சுருக்கிவிடை தருவோம் கேளும்!
-அன்று
இந்தியர்கள் பிழைப்பதற்கு
பர்மாபோய் சேர்ந்தார்கள்!
சின்னக் காஞ்சி என்றும்
சேலம் மதுரை என்றும்
தங்கள் ஊர்ப்பெயரை
பர்மாவில் இட்டார்கள்!
செல்வம் சேர்ப்பதிலே

முனைப்பாக இருந்தார்கள்!
வட்டி சீட்டெனவே - ஆம்
-இங்கேபோல்
வட்டி சீட்டினிலே
முனைப்பாக இருந்தார்கள்!
தங்கம் வைரம் என
தாய்க்குலங்கள் காய்த்தார்கள்!
-இங்கேபோல்
தங்கம் வைரம் என
தாய்க் குலங்கள் காய்த்தார்கள்!
தங்கள் கோயில்களை
அங்கே சமைத்தார்கள்!
-பர்மியரின்
கண்ணை உறுத்துகிற
காரியங்கள் செய்தார்கள்!
பர்மியனோ கண்விழித்தான்!
-இந்தியரை
தன்னை சுரண்டவந்த
அந்நியராய் இனங்கண்டான்!
-அவர்களுக்கு
செய்யாத அத்தனையும்
செய்தன்றே அனுப்பி வைத்தான்!
-பர்மாவில்
அலங்காரப் பந்தர்இட்டு
அழகாக வாழ்ந்தவர்கள்!
பர்மியத் தமிழர்என
புகழ்ஏந்தி நின்றவர்கள்!
அனைத்து உடமைகளை
பலஉயிரை மானமதை
பர்மாவில் பறி கொடுத்து
அகதியென வந்தார்கள்!
சொந்த நாட்டினுக்கே
சோகமுடன் சென்றார்கள்!
-இன்று
சொந்த நாட்டினரே

அகதியென கூறுகிற
அந்நாளை இந்தியராய் - நாமும்
ஆகும்நாள் தொலைவில் இல்லை!
தங்களது கலாச்சாரம்
எங்களினால் மங்குதென
இங்குள்ள வெள்ளையர்கள்
விழிக்கின்ற வேளையிது!
-எங்களது
சிந்தைத் தடுமாற்றம்
சிறிதும் விலகாதோ?
ஒற்றுமையாய் ஒருகுலமாய்
ஒண்தமிழர் மாறாரோ?
எதிர்கால சந்ததிக்கு
ஏற்றவழி தோன்றாதோ?
துண்டுபடு தமிழினமே - நீ
ஒன்றுபட மாட்டாயோ?
உள்ளம் துடிக்கிறது!-
என்பாசத் தமிழினத்தை
விதி எங்கோ இழுக்கிறது!

வணக்கம்

## 3. டென்மார்க் கேர்ணிங் நகரிலே...

(1.10.1994இல் டென்மார்க் கேர்ணிங் நகரில் தமிழ் டேனிஷ் தோழமை ஒன்றியம் Sonde skole-ல் நடத்திய கவியரங்கிலே பாடியது.)

**ஏங்காத நாள் என்று?**

...`எதுகவிதை எவன் கவிஞன் என்பதல்ல கேள்வி.
எனது வாழ்வு கவிதையானதா?.. அதுவே எனது கவிதை'

-என்று
தாரகம் ஒன்றைத் தந்தே
தலைக்கவி ஆகிப் பாடும்
வேலணை ஊரைத் தாங்கும்
விறல்மிகு பொன்னண்ணாவே!

சிந்தனைக் கவிதைதந்து
சிரிக்கவும் வைத்தே தன்னை
வந்தனைக் கடவுள் ஆக்கு
வளர்கவி முருகையாவே!

பற்றுடன் தமிழர்க்காக
பலபட சேவைசெய்தே - தான்
கற்றதோ குட்டுவாங்க! - என்று
கவியறை தேவிதாசா!
-இங்கே
கலையுடன் பண்பாடென்ற
கட்டுக்குள் தமிழைக் கூட்டி
தொலை உணர்வோடே எம்மை
தூக்கிடும் தோழர்மாரே!
`தமிழ் டெனிஸ் தோழமை ஒன்றியம்'
அந்நிய மண்ணில் தோன்றும்

அருங்கலைத் தமிழ்ப்பண்பாட்டை
ஆவலாய் காணவந்த
அவைநிறைப் பெரியீர்! - உங்கள்
அனைவர்க்கும் எந்தன்
அன்பான வணக்கங்கள்!

'ஏங்காத நாளென்று?'
-கவித் தலைப்பு இதுவேதான்!

மாற்றப்பாடு அறியா மண்ணில்
மாறிநாம் பாடிப் பாடி
ஏற்றந்தாம் ஏதுகண்டோம்!
ஏங்கிடா நாளுண்டாமோ?
வேற்றுமண் ஆனபோதும்
வீம்புகள் பேசிப்பேசி
தோற்பதா தமிழன் வாழ்வு
துயரெலாம் தீர்ந்திடாதா?

உளவிய லாலே எம்மை
உரசித்தான் பார்ப்பேன் - எங்கள்
குழப்பத்தின் பாங்கே காண்பேன்!
- ஈழக்
குடிகளின் அவலம் காண்பேன்!
-அங்கே
பறங்கியர் அன்றுசெய்த
பலவகைத் துயரும் - எங்கள்
அறங்களாய் வகுத்தே நின்ற
ஆரியச் சாதிப்பேயும்
-அதனால்
புறங்கொள்ள வைத்தே நிற்கும்
புத்தசிங்களர்தம் பாங்கும் - இன்று
உறங்கிநாம் உருக் கொண்டாடும்

உளவியல் வரலாறாகும்!
-அதனால்
அவர் அவர்க்கு ஏற்ற வார்த்தை
அளந்திடுகின்றோம்! - எங்கள்
அவலத்தைப் போக்கும் பாதை
அடைந்திடத் தவறுகின்றோம்!

இவர் அவர் பகைப்பில் என்ன
இலாபம் என்று எதிர்பார்க்கின்றோம்!
இனசனப் பலத்தில் நின்று
இரவலாய் கூவுகின்றோம்!
-ஆமாம்
ஊரையே தூக்கி வந்தே
உலகம் என்றோதுகின்றோம்!!

பலபல நோக்கும் எங்கள்
பார்வையும் பலகோணத்தில்
விலக்கிட வளர்ந்தே எம்மை
வில்லங்கப் படுத்தும்!
-எந்தத்
தலைமையும் தவறே என்று
தத்துவ விளக்கங் காட்டும்!
அலையிலே எழுதினாற்போல்
அழிவையும் விதியாய்க் கூட்டும்..!
-அன்று
ஆரியக் கலப்பினாலே
அவரவர் பிரிந்தே நின்றார் - ஊரில்
நேரிய தமிழர்தம்மை
நினைந்திடா வகையில் சென்றார்!
-எங்கும்
ஊருக்கோர் குணமும் - தங்கள்
உறவுக்குள் மயக்கும் கொண்டே - இன்று
பாருக்குப் பாடம் சொல்ல

படைஎனக் கிளம்புகின்றார்!
-அன்று
சிங்கள ஊரில், எங்கோ
சிரிக்கிற தமிழன் கண்டால்
'எங்களின் தமிழன்! ஆகா!'
என்றொரு இனிமை தோன்றும்!
-இன்று
மேற்கிலே வந்திட்டாலும்
மேவிடும் துயரம் எல்லாம்
இவனது இயக்கம் என்ன?
இவனது ஊர்தான் என்ன?
-என்று
தமிழனைக் காணக் காண
தயக்கமே தோன்றும்! தோன்றும்!!
-இதனால்
மாற்றப்பாடு அறியா மண்ணில்
மாறிநாம் பாடிப் பாடி
ஏற்றம்தான் ஏது கண்டோம்!- என்று
எழுதிடாதிருந்தேன் பாட்டு
-என்னை
புரட்டினார் பொன்னண்ணாதான்!
- இங்கே
கவித்தலை தாங்கும் அன்னார்!
... பாரதி!
தோழமை ஒன்றியத்தில்
சுதந்திரம் தந்துள்ளார்கள்!
விரைகிறார் கவிஞர் எல்லாம்
விரையுங்கள் வாங்கள்!
- உங்கள்
மனதிலே பட்டதெல்லாம்

மக்கள்முன் கொண்டுவாங்கள்!

- இங்கே

மாகரகோசம் வாங்க
வழியதைத் தேட வாங்கள்!!'

-நானோ

வந்ததும் பார்த்தேன் - இங்கே
சிறுவர்கள் ஆடல்! பாடல்!

- ஆம்

சிந்தையில் சுகமே சேர்க்கும்

- இந்த

தெய்வங்கள் வடிவம் பார்த்தேன்!!

-பிள்ளைகள்

தங்களின் வருங்காலத்தை
தக்கவாறு ஆக்கிக் காக்க - எம்மில்
ஒற்றுமைப் பாலம்போடும்
உண்மையின் ஒளிக்கீற்றுக்கள்!
ஏங்காத நாளென்று? என்று - இங்கே
ஏங்கியே வந்தோர்க்கெல்லாம்
பாங்குடன் பாலர்க்காக - நானும்
பாலகன் ஆகப்போறேன்.

(இதன்பின் ஜேர்மனி பேர்லின் மாநாட்டிலே பாடிய தாயக நினைவுக் கவிதைகள் பாடப்பட்டுள்ளன)

## 4. டென்மார்க், வைலை நகரிலே...

(14.10.1995இல் டென்மார்க் வைலை நகரில் உள்ள டொமூஸ் (Domus) மண்டபத்தில் டெனிஷ் தமிழ் தோழமை ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப் பெற்ற கவியரங்கில் பாடிய கவிதை... )

### எங்கு நீ வாழ்ந்தாலும்தான் என்ன...

கவி என்று குரங்கிற்கும் கருத்தொன்றுண்டு!
கவித்தலைப்பும் குரங்கின்வால் நீளமாச்சோ? - இங்கே
கருத்துக்கள் மாறியதால் குரங்கானோமா?
இங்கும் அங்கும் தாவிவிட்டு இஞ்சி தின்று
இளிக்கின்ற குரங்காகி நிற்கின்றோமா?

எண்ணங்கள் சுமந்த போதும்
எழுதிட மார்க்கம் இன்றி - அன்று
புண்ணென நொந்தே இங்கே
புலம்பிநான் நின்றேன்!- அப்போ
விண்ணர்கள் சிலபேர் வந்தார்!
விளம்பரம் காட்டிநின்றார்!- நானும்
கண்ணியத் தமிழை மேலைக்
காற்றிலே பறக்க விட்டேன்...!

கடிதங்கள் குவிந்தது- உந்தன்
கவிநயம் சிறந்த தென்றார் - உலக
விடியல்கள் சொல்லும் நீரே
வியத்தகு மனிதர் என்றார்!
துடித்தழும் தமிழர்க் கிங்கே
தூயஓர் தமிழ்க் காற்றாக
அடித்து நீர் வீசும் போழ்தில்
ஆறுதல் தோன்று தென்றார்!

`படித்திட பலஏடுண்டு!
குடித்திட பியரும் உண்டு!
கூடிட நட்பும் உண்டு!
வெடிப் புழுகு எடுத்து வீச
விதவித அரங்கும் உண்டு!- ஆனால்
அடித்துநீர் சொல்லும் பாட்டால்
அசையுதெம் உள்ளம்' என்றார்!

`ஏக்கமும் பிரிவும் எங்கள்
இதயத்தை வாட்டும் போழ்தில்
தூக்கமுங் கெட்டே நின்று
துயரில்நாம் அலையும் போழ்தில் - இங்கே
சாக்களாய் வாழ்வை ஏற்று
சஞ்சலப் படும்போதெல்லாம்
பூக்களாய் தடவுதையா
புனிதம்நின் பாட்டுக்கு' என்றார்!

`எங்களுக்காக ஏதும்
ஏற்றநல் வார்த்தை தாரும்!
தங்கமாத் தமிழர்க் கிங்கே
தக்கதை எடுத்துப் பேசும்!' - என்று
பக்கமாய் எழுதிச் சொன்ன
பலபல கடிதம் எல்லாம் - நான்
வைக்கவே இடம் இல்லாமல் - உம் ஊர்
வைலைக்கும் எடுத்தே வந்தேன்!

எத்தனை துயரம் நாட்டில்!
ஏங்கிடும் மக்கள், தெய்வ
பக்திதாம் செய்தபோதும்
படைத்தவன் இரக்கம்பாரான்!- அங்கே
நித்தமும் மரணஓலம்!- இங்கோ
நிம்மதி வாழ்வா? எல்லாம்
எத்தனை நாளுக் காகும்?
எவர்இதை எண்ணிப் பார்ப்பர்!
-வானில்
சடசட கெலியும் சீனச்
சகடையும் குண்டு பீச்ச

பலபடப் பாட்டும் உண்டு!
வெடவெட நடுக்கத்தோடே - ஊரின்
வீதியால் சனங்கள் ஓட
உடமையா? உயிர்தான் என்றே
ஒதுங்கிய குழிக்குள் நாகம்
படமெடுத் தாடும் நாடா? - ரத்த
பாசங்கள் வாழ்வே வீணா?
-இங்கே
மேடையில் ஏறிப் பேசி
மேதையாய் பேரும் வாங்கி -வீசும்
வாடையில் தமிழன்நான்ஓர்
வல்லவன் என்றே கூறி
காடையர் தம்மைச் சேர்த்து
காரிலே பியரை ஏற்றி
தாடையைத் தடவிக் கொண்டும் - யூரோப்
தமிழல்லோ வளர்க்கின்றார்கள்...?

எப்படி வந்தார் மேற்கில்
என்பதை விளக்கி, கொஞ்சம்
செப்படி செய்தே ஆன டென்மார்க்
சிற்றிசன் கோமான்மாரோ - பின்னால்
'இப்படி வரலாமா பார்!
இலட்சியம் மறந்தாபோனாய்!
தப்படா தம்பி!' என்றே- இப்போ
தமிழ்ப் புத்தி சொல் கின்றாராம்...

கள்ள போன் எடுத்தே ஏதும்
கண்டவாறு ஏசி, முன்னால்
வெள்ளையாய் சிரித்தே சொல்வார்
'வீணருக்கு இதுதான் வேலை!
குள்ளர்கள் நேரில் தோன்றா
கோழையர்!' என்றே மேடை
துள்ளிட ட்றாமா போட்டே -கை
தட்டலும் வாங்குகின்றார்!!
-தமிழ்
போட்டியா? யாரும் இங்கே

'ஆட்டவா பார்க்கின்றாய் வால்
அறுத்திடு கின்றேன்!' என்றே
றோட்டிலே போவோர்க் கெல்லாம்
உரோசத்தை கிளப்பும் வண்ணம்
கூட்டியும் குறைத்தும் சொல்லி
குழியிலும் தள்ளுகின்றார்!!

ஆளுக்கு தகுந்தாற் போல
ஆவலாய் பேசுவார்கள்!
கோளும் பொய் பொறாமை கொண்டே
கோபத்தில் மிரட்டுவார்கள்!
கூழுக்காய் மீசைக் காக
கூக்குரல் போடுவார்கள்!
வாழுங்கள் என்றே சொல்லி - வழியில்
வாழைத்தோல் போடுவார்கள்!

ஊருக்கு ஒன்றைச் சொல்வார் - தமிழ்
உறவுக்குள் வேறைச் செய்வார்!
பேருக்குத் தமிழன் என்றே
பேசுவோர் தம்மைக் கண்டால் - இனி
நேருக்கு நேரே வந்து
நியாயத்தைக் கேட்டல் வேண்டும்!
யாருக்கு அச்சம் வேண்டும்!
அகதிக்கும் அச்சம் உண்டா?
அகதிக்காய் அனைத்தும் தந்தே - இங்கே
ஆதரித்து அணைக்கும் டென்மார்க்
தகமைகள் பெறநாம் வேண்டி
தருமராய் நடக்கின்றார்கள்!- நாமோ
புகுந்திங்கு ஏதோபண்ணி
புகழ் பணம் பண் பாடென்று
தகுந்திடா வழியில் நின்றும்
தமிழனாய்க் கூவுகின்றோம்!
-வெற்றுப்
பொதுநலத் தொண்டைக் கூறி
புகழினை வளர்க்காதீர்கள்!
எதுதமிழ்? புரியாமல்நீர்

புதுப்புது விளக்கம் சொன்னால்
எதனையும் எழுதாதீர்கள்!
புதுமையை புகுத்தும்போதும்
பூந்தமிழ் மரபைப் பாரும்!
-உங்கள்
முதுமையை வயதாய் எண்ணி
மூடமை வளர்க் காதீர்கள்!
-இப்படி
அறிவுநாம் பெறுதல் வேண்டும்! - எம்மில்
அறியாமை அகல்தல் வேண்டும்!
நெறிப்படி வாழ்தல் வேண்டும்! - உலக
நீதியில் நிற்றல் வேண்டும்! - அப்படி
அறிவியல் வழியில் ஆய்வீர்! - பாரில்
அடுத்த சந்ததிகள் தோன்றும்! - யமன்
பறித்தபின் உடல்தான் ஏனோ?- அதன்
பாகத்தை ஆய்வில் சேரும்!

பத்தினி என்றுஉம் பெண்ணை-தமிழ்
பண்பென மடக்கு கின்றீர்!
வைத்தஉம் சட்டம் என்றே
வீம்புகள் பேசுகின்றீர்!- கண்கள்
குத்திட வெள்ளைக்காரி
குறிஎன காமத்தோடே
பித்தராய் டிஸ்கோபாரில் - பண்
பாட்டிற்கா ஆடுகின்றீர்!

மாற்றாந் தாய் ஆகும் எங்கள்
மடைத்தனம் மறைய வேண்டும் - அந்த
வேற்றுமை தொலையவேண்டும்! - ஊர்
வேதனை ஒழிய வேண்டும்! - எங்கள்
நாற்றங்கள் யாரும் பேசா
நல்லவர் ஆக வேண்டும்!
போற்றி எம் தமிழே என்று - நாம்
புனித நீர் ஆடல் வேண்டும்!
என்னைப் போல் அவனும் என்ற

ஏற்ற நல் இதயம் கொண்டால்
வன்பகை மறையும் எங்கள்
வணக்கமும் தெய்வம் ஏற்கும்!
என்னதான் தீபம் ஏற்றி
இதயத்தே இருட்டை வைத்தால்
மன்பதை மீதில் எந்த
மாற்றமும் தோன்றிடாதே!

ஒருகணம் தாமும் எம்முள்
ஒற்றுமை வேண்டும் என்றே
கருணையாம் இறைவன் பாதம்
கூப்புவோம்!- `இறைவா! எம்மை
பெருமையாய் படைத்த தெல்லாம்
பிடிபடத் தானோ!? வேண்டாம்!
ஒருமையாய் எம்மைச் சேரும் - எம்மை
ஒண்தமிழ் மீட்பர் ஆக்கும்!'

எங்குநாம் வாழ்ந்தாலும்தான்
என்னவென் றலறும் மாந்தர்
பொங்கியே புவியில் சேர்க!
பேரணி ஒன்றாய் மீள்க!- அங்கே
அள்ளுக தமிழை வெற்றி
ஆனந்தம் எங்கும் மேவ!- வந்து
துள்ளிநாம் கவிதை செய்வோம் - அந்த
தூயநாள் வருமா பாரும்?

வணக்கம்

# 5. டென்மார்க் கொல்பேக் நகரிலே...

(டென்மார்க்கில், தமிழர் புலம் பெயர்ந்து வந்து 20 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு கொல்பெக் நகரின் றியல் ஸ்கூல் மண்டபத்தில் 14.10.2006இல் ஏற்பாடு செய்யப்பெற்ற பெரு விழாவின்போது ஏற்பாடு செய்யப் பெற்றகவியரங்கிற்கென படைத்தது...)

## இரவல் நாட்டுக் கூனலும் 20 ஆண்டுகால நிமிர்வும்...

அருமைக் கவித் தலைவ!
ஆனதமிழ் கவிக் குலத்தீர்,
பெருமைபெறு பெரியவர்காள்!
பேச்சினிய சோதரிகாள்!
வருங்காலத் தூண்கள் என - டென்மார்க்
வளர்த்துவிட்ட மாணவர்காள்!
அருமைவிழா அரங்கிதனில் - என்னை
அழைத்த விழா அமைப்பினர்காள்! - உங்கள்
அனைவர்க்கும் எந்தன் அன்பான வணக்கங்கள்!
-அன்று
போக்கிடம் மேற்கே என்றே
புறப்பட்டு வந்தே நின்றோம்!
ஏக்கமே சூழ்ந்த திங்கே
எதுபகல் இருள்தாமென்றே
பூக்களாய் மலர்ச்சி சிந்தப்
பொதுமையாய் துணிச்சல் நீத்தோம் - தமிழ்
ஆட்களைக் காணக் காண
அச்சத்தால் வேர்த்தே சோர்ந்தோம்!
-அங்கே
ஊரிலே காணாதோராய்
உலவிய தமிழர் தம்மை - இங்கே
உறவிட்டோம் வணக்கம் என்றோம் - ஆம்

உதட்டினால் நடிப்பும் செய்தோம்!
யாரிவர் ஊரில்' என்று
அலசவும் செய்தோம்! - நாமே
யாழ்நகர் வடமர் தென்மர்
ஆட்சியாம் பிளவும் கற்றோம்!

தீவகப் பிரிவுங்கூட்டி
தீந்தமிழ் முழுங்கிப் பார்த்தோம்!
-இப்படி
யாழ்நகர் அணியென்றாகி
வன்னி கை கோர்க்கலானோம்!
-கிழக்கே
திருமலை, மூதூர் என்றோம்!
மட்டுமா நகரும் என்றோம்!
-டென்மார்க்கில்
பெருமையாய்ப் பொழுதைப் போக்க
பல விழா பார்த்தும் விட்டோம்!
உருவத்தால் பலர்தான் - ஆனால்
உள்ளத்தால் தமிழர் என்றே
கருவத்தைக் காட்டி பொய்யாய்
கவிதைகள் கக்கி நின்றோம்...
தருமமாம் டென்மார்க் வாழ்வை
தரக்குறை வானதாக்கி
பெருமைஎம் ஊர்தாம் என்றே
பெருங்கதை அளக்கலானோம்! - தமிழன்
உருவத்தின் போலி கண்டு
ஒதுங்குவோர் பண்பாடற்றோர்! - என்று
பருவமே மாறும் நாட்டில்
பண்பின்றி பேசலானோம்!
இரவலாம் நாட்டில் கூடி
இத்தனை கூனல் செய்தோம்!
- வந்து
இருபது ஆண்டுமாச்சு
இங்கு கூன் நிமிர்ந்ததாமோ?
-நீங்கள்

இட்டஇத் தலைப்பில் உண்மை
இருக்குமா தேடுகின்றேன்...
இட்டஇத் தலைப்பில் உண்மை
இருக்குமா தேடுகின்றேன்.
-அன்று
ஈழ நெருக்கடியால்
இங்கோடி வந்தவர்நாம்!
வாழ வழிதேடி
வசதியிங்கு பெற்றறவர்நாம்!
கோழையரா நாங்களிங்கு?
கொள்கைபலம் பெற்றவர்கள்! - இப்படி
ஆளையாள் காண்கையிலே
அசல்நடிப்பும் செய்பவர்நாம்!
கூழைக் குடிக்கையிலே
கொடுமீசை நினைவெடுக்கும்!
-இங்கு
கோழையராய் வீரமிடும்
கொள்கைபெறு நாயகர்நாம்!
-வந்து
இப்படியும் அப்படியும்
இருகாலை நுழைத்ததனால்
இரவல் நாட்டிதனுள்
ஆப்பிழுத்த குரங்கானோம்!

சிந்திக்க நேரமின்றி
செய்தொழிலாம் சுமையதனுள்
ஆளுக்குத் தக்கபடி
கதை அளந்து காரியத்தில்
கண்ணாய் இருந்தபடி
கரன்சி எண்ணிக் களிக்கின்றோம்!
-எந்த
அவையும் கிறங்க வைத்தும்
அடுத்த வழி பார்க்கின்றோம்!
பணத்திற்கு அடுத்தபடி

பண்பாட்டைக் கொண்டாலும்,
குணமும் கொள்கையுமாய்க்
கொக்கரித்துத் திரிகின்றோம்! - ஆம்
சுளுக்கெடுத்து செல்லுகிற
சுகபோக சுந்தரர்நாம்!
-இருந்தாலும்
ஈழப் பிரிவுகளாம்
இடையிடைஎம்
மூச்செறிவாம்!
-ஊரதுவோ
தூரப் போனதையும்
துயரமெனப் பாடுகின்றோம்!
-இங்கே
சீரைத் தேடிவிட்ட
சீமான்கள் ஆகிவிட்டோம்!
தமிழன் எனச்சொல்லி
தலைக்கனமும் ஆகின்றோம்!
-இங்கே
பாவேந்தர் பலபிரிவாய்
பண்பாடு காட்டுகின்றோம்!
கனவான்கள் ஆவதற்கும்
கனக்கவழி பண்ணுகிறோம்!
அவரவரைப் புகழ்ந்துரைக்க
ஆன அணி திரட்டுகிறோம்!- இன்று
இருபது என நிறைவுபெற்ற
இன்பமிகு நன்னாளை
இனிமையுடன் கொண்டாட
இவ்விரவில் கூடியுள்ளோம்!
-இங்கே
சோக நினைவொன்றை
சொல்லத் துடிக்கின்றேன்.
-அதனை
14 - ஆண்டுப் பழங்கதையாய் தள்ளாதீர்
- அன்று, 11.12.1992

கொல்பேக் பாவரங்கில் - முதல்
கவியோடு தோன்றியநாள்! - நண்பர்
முல்லை அருகிருந்தார் - அவரோடு
முதல் அரங்கத் தொடர்பதுதான் - நான்
சொல்லிநின்ற கவியாலே
சொக்கிவிட்ட முல்லையவர்
கவியரங்க நிறைவின் பின்
தனி அழைத்து ஓர் கதை சொன்னார்
-தானும்
முன்பெல்லாம் என்போல
மூச்சாகப் பாடிநின்று
பின்பு அதனை
பிதற்றலென இவர்கள்வழி முடிவாக்கி
இன்றையநாள் அமைதிஎன
தன்பணியைத் தொடக்குவதாய்
-ஓர்
சோக மூச்சுடனே
ஏதேதோ சொல்லி நின்றார்!
பப்பாசி மரமேற்றி
பாதத்தில் ஊசி குத்தும்
தப்பான மனிதர்களை
தக்கபடி இனங்காண
பவ்வியமாய் சொல்லி எனைப்
பாப்பணிகள் தொடர்க!' என்றார்...
எவ்விதமோ எதுவழியோ
எனக்கவைகள் புரியவில்லை.

அன்றையநாள் கவியரங்கில்
அன்புடனே எனை அழைத்தே
அரங்கேற விட்டவரை
அலசிநின்றேன் அவர் ஜீவா
இன்றையநாள் இவ்வரங்கில் - ஜீவா
இவரேதான் எனை அழைத்தார்!

அன்றேபோல் வந்துகவி
அளக்கவென ஆணையிட்டார்!
-இருந்தாலும்
முல்லையூரான் மறைந்தவுடன்
மொய்த்தவரில் ஜீவாவோ
எல்லையிலா பாசமுடன்
என்னண்ணா என அலறி
ஏக்கமுற சமரகவி
பாக்களினால் பாசமிட்டார்!- முல்லைப்
பண்பாளர் படைத்தவற்றை - நான்
பார்ப்பதற்கும் அனுப்பி வைத்தார்!
அகராதி வைத்தியமாய்
அகதியரை அரவணைக்கும்
அருமை நண்பன் ஜீவாவின்
அழைப்பிற்காய் கவிவடிக்க
அரங்கமிங்கு வருகை தந்தேன் - வந்து
அந்நாளை நினைக்கின்றேன்...!
-முல்லையூரான்
டென்மார்க் முழுவதுமாய்
என்பெயரைப் பெருமையிட்டார்
-அவரோடு
இன்னும் ஒருவரையும்
இதயத்தில் ஏற்று கின்றேன்.
-டென்மார்க்கில்
நன்கூன்ற என்னை வைத்தார்
கோர்சன்ஸ் சிவஞானம்! - அவரோடு
ஒன்றிணைந்து உலகத் தமிழ்
விழாவொன்றை நடத்திடவே
தமிழகத்தை மலேசியத்தை
உலகமதை அழைத்திட்டோம்!
எப்பாடு பட்டும்எம்மை
இல்லாமல் பண்ணவென

தப்பான வழியில் சில
தற்குறிகள் செயல்படவும்
-அதை
தன்பலத்தால் தூரக்
கிள்ளி எறிந்துவிட்டு
வெற்றி விழாநடத்தஅவர்
வீரத் தோள் தந்துநின்றார்..!
மலேசியத்து பெருந்தலைவர் - தமிழ்
வீரப்பன் ஆர்வமுடன்
சிந்தைக் கினியவர்என்
சிவஞானந்த் தம்பி என்றார்!
-டென்மார்க்கில்
சிறுவருக்குத் தமிழாரம்
பெரியவர்க்கு அரும்பு என
பெறுமதியாம் சஞ்சிகைகள்!
பெருமையுடன் தொடக்கி என்னை
தன்னுடனே இணையாசான்
ஆக்கி வைத்த தமிழ் மறவன்
சிவஞானம் மறைந்ததெலாம்
சிந்தித்தால் வேதனைதான்!
-அவருடனே
முல்லையுந்தான் இம்மண்ணுக்கு
உரமாகிப் போனார்கள் - ஆம்
இருவருமே மறைந்த பின்னால்
இதுவரையில் கவியரங்கில் - டென்மார்க்
நிகழ்ச்சிகளை ஏற்காமல்
நிற்பதுஎன் தர்மமென்றேன்...
-இன்று
அடுத்து வரும் நாட்களுக்காய்
ஆனகவி தூக்கி வந்தேன்...
-தமிழன்
கறைபோக்கும் காரியங்கள்
கடுகதியில் ஆற்றிடணும்

முறையான காரியங்கள்
முட்டின்றி தொடர்ந்திடணும்!
முறைகேடாய் நடப்பவற்றை
மூட்டைகட்டி எறிந்திடணும்
-அதற்காய்
கறைபடியா நெஞ்சினரை
கடுகதியாய்த் தேடுகிறேன்.
-வந்து
இருபதினை நிறைத்துவிட்டு
இவ்வரங்கில் கூடியுள்ள
பெருமைபெறு பெற்றோரில்
பெருமாற்றம் தோன்றவில்லை.
ஒருகூனும் நிமிரவில்லை
இருபதுதான் ஆனதுமெய்
-பெற்றோர்
20 வயதேதான் - இங்கே
அனுபவத்தில்
இளையவர்தான் - இந்த
20க்கு நாற்பதென
அனுபவத்தால் மூத்தவர்கள்
இளையவராம் பிள்ளைகளே!
-அவர்கள்
பெற்றோரை ஈன்றவர்கள்!
-அதனால்
சிறுவர்களே நிமிர்த்துகிறார்
கூனல்களை எனப் புரிந்து
பெற்றோருக்கு அவர்கள் வழி
பெருவாழ்த்துக் கூறுகின்றேன்.
-பிள்ளைகளோ
பொறுமையிலே பெற்றவர்க்கும்
பெற்றவர்கள் ஆனவர்கள்.
வெறுமையிடு தமிழினத்தின்

வெட்டிப் பேச்சறிந்தவர்கள்.
பாசமுடன் வளர்த்துவிடும்
-டென்மார்க்
பண்பான நாடுஇருந்து
-பெற்றோர்க்கு
பகுத்தறிவைப் போதிக்கும்
ஈ.வேரா. பெரியார்கள்! - எங்கள்
ஈ.வே. ரா பெரியார்கள்! - நீங்கள்
ஓங்கி முழக்கிடுவீர்!

`யாதும் எமது ஊரே!
யாவரும் எம் உறவினரே!'
என்றேதான் பழந்தமிழர்
ஏற்று உவந்த பண்பாடாம்!
-அந்த
ஐயன்னா நாவன்னா
அரவணைப்பும் அது மொழியும்!
-தமிழர்
பண்பாட்டுக் கிலக்கணத்தை - அன்று
பாடிவைத்தார் வகைபுரிவோம்!
`உலகத்தின் வழக்கறிந்தே
ஒழுகுதலாம் பண்பாடு! - இதனை
வள்ளுவப் பெருந்தகையோ
வடித்துளராம் தம் குறளில்!

கலித்தொகையோ கட்டிவைத்த
கவின்வரிகள், பண்பதுவோ
பாடறிந்து ஒழுகலெனும்!
-இந்த
அற்புதங்கள் எழுதி வைத்த
அந்நாளைத் தமிழினம் நாம்
பார்முழுதும் வாழுகின்றோம்...!
-பாரில்

பரந்த ஒரு பண்பினர் நாம்!
நாடற்றோம், நிலை கெட்டோம்
பண்பாடும் தொலைத்துவிட்டோம்
-என்ற
வீணச்சம் தேவையில்லை
எல்லாமே எங்களிடம்!
ஈழம் இருந்தாலும்
- டென்மார்க்
இங்கு வந்து சேர்ந்தாலும்
இருப்பவைகள் அனைத்திலும்நாம்!
இவ்வுணர்வால் பலம்பெறுவீர்!

அகிலத்தில் உள்ளவைகள்
அனைத்தையும்நாம் பொதுமையிட்டோம்!
அகிலத்தே பல மாற்றம்
சீர்திருத்தம் பிறந்தபின்போ
ஆழத்தே இருந்தேதான்
அந்தரத்தைப் பாடுகின்றோம்!

ஐரோப்பா நிறத்தினிலே
ஓர் அண்ணன் தமிழன்உள்ளான்!
அவன்தம்பி ஆபிரிக்க
இடிஅமீன் கரு நிறத்தான்...
அவன் தங்கை மஞ்சளிலே
சீனத்தி மறைந்திருப்பாள்... இப்படி
தமிழினம் எம் இனத்தினுள்ளே
தரம்பிரித்த நிறக்கலவை - ஆனால்
மாந்தவின ஆய்வுகளோ
திராவிடராம் தமிழினத்தார்
தருவடிவம் கருநிறந்தான் - ஆக
எங்களது நிறக் கூட்டும்
எங்களது வாழ்வமைப்பும்
எவ்வாறு உள்ளதென

எளிதினில்நாம் புரிந்துவிடில்...
ஐரோப்பா மட்டுமல்ல...
அனைவருமே இனித்திடுவர்!
- அதனால்
இனத்தில் சாதியத்தில்
இருக்கின்ற போலிமையை
விரட்டி அடித்திடலாம்
விடியல் ஒன்றே படைத்திடலாம்!
- இங்கே
குள்ளத் தனமாக
கொக்கரிப்பர் பண்பாடாய்
கள்ளர் கரன்சிக்காய் - தமிழ்
கலாச்சார கடைவிரிப்பர்!
- அவர்களை
தள்ளுங்கள் உங்களுக்குள்
தமிழ் வடிவம் தேடுங்கள்!
வடமர் தென்மர் வன்னியரை
மட்டுமலை தீவகத்தை
கட்டிஅணைத்திடுங்கள் - இனிய
காதலிட்டே களிப்பிடுங்கள் - நாங்கள்
திண்மைபெற்றே ஓங்கஒரு
தீந்தமிழைப் படைத்திடுங்கள்.

பனிமூட்டம் வசந்தம் என
பருவங்களைப் பாராதீர்!
தனித்தவமாம் ஊசி இலை
தருக்களிடும் தளிர் ஆவீர்!

(மேற்படி கவியரங்கு நேரம் போதாமையால் இடம் பெறவில்லை என அறிவிக்கப்பட்டது.)

# 6. டென்மார்க் வைன் நகரிலே...

,
(01.01.1995-இல் டென்மார்க் வைன் என்ற நகரத்தில் காலஞ்சென்ற பிரபல கவிஞர் முல்லையூரானின் `காகம்' என்றசஞ்சிகை அறிமுக நாள் கருத்தரங்கு. எழுத்தாளர் தர்மன் தருமகுலசிங்கம் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது. அதிலே கவிவேழம் பாரதிபாலன் அவர்கள் ஆற்றிய இலக்கிய ஆய்வு உரை...)

## தமிழ் பத்திரிகை உலகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்...

இந்த `காகம்' சஞ்சிகை அறிமுக விழாவில் பத்திரிகை என்ற தலைப்பைத் தந்திருக்கிறார்களே!

சஞ்சிகை பத்திரிகை வாய்ப்படுமா? என்ற கேள்வி என்னுள் எழுந்திட `ஜேணல்' (Journal) என்ற மூலத்தில் இருந்தே பிறந்தவையே பத்திரிகை, சஞ்சிகை என்ற முடிவின் ஊடாக தமிழ் உலகம் கையாண்டு வந்த பத்திரிகைத் தரத்தைத் தரம் பிரித்தபோது, பத்திரிகை என்பது, செய்திப் பத்திரிகையாக நில்லாது, மருத்துவப்பத்திரிகை, மஞ்சள்பத்திரிகை, திருமணப்பத்திரிகை, குற்றப்பத்திரிகை...

இப்படியாக தமிழ்ப் பத்திரிகை உலகம் கடைவிரித்து இருந்து இருப்பதை காணக்கூடியதாக இருந்திருக்கிறது.

தமிழ்த்துறைத் தொடர்பின் ஆரம்ப கால கட்டத்தில் சஞ்சிகைகூட தொடர்பத்திரிகையாகவே கையாளப்பட்டது.

இந்த நிலையில் ஈழத்தில் சிங்களர் தணிக்கைக்குப்போய் செய்திகளே போடமுடியாத கால கட்டத்தில் எமது செய்திப்பத்திரிகைகள்கூட பல கலை அம்சங்களைத் தாங்கி சஞ்சிகைகளாகவே பவனி வந்த காலகட்டத்தைத் திரும்பிப் பார்க்க வேண்டுகின்றேன். அதில் இருந்து இன்னும் பின்நோக்கிச் செல்வோமே!

இப்போது, பிரித்தானியா காலனிகளில் ஒன்றான 'சிலோன்' என்னும் எமது இலங்கை தென்படுகிறதல்லவா?

அந்த இலங்கையில் அன்று ஆங்கிலேயர்களால் படித்தவர்கள் என்று முத்திரை குத்தப் பெற்றவர்கள் ஈழத்தமிழர்களே!

அதுவும் யாழ்ப்பாணத் தமிழர்களே!

அவர்கள் வெள்ளையர்களால், முக்கிய பதவிகளில் அமர்த்தப்பெற்றவர்கள். 'எசமான விசுவாசம் மிக்கவர்கள்' என பெயர் எடுத்துவிட்டோம் என்று தங்களுக்குள் பெருமைப்பட்டவர்கள்.

வெள்ளையனோ தமிழர்தம் உளவியலை இவ்வாறுதான் உள்வாங்கி இருக்கின்றான். 'நாட்டுப்பற்று இல்லாதவர்கள். போட்டி பொறாமையில் தனது சொந்த இனத்தையே சாய்ப்பதில் வல்லவர்கள். கோள் சொல்வதில் கெட்டிக்காரர்கள். அடுத்துக் கெடுப்பதில் வல்லவர்கள்.'...

இத்தகைய தமிழ்ச் செம்மல்களை பதவியில் இருத்திபலன் அனுபவித்த ஆங்கிலேயன், இந்தத் தமிழர்களால் பின்னாளில் தனக்கு ஏதும் ஆபத்து நேர்ந்துவிடுமோ என்ற பயத்தினால் போலும், ஈழச் சுதந்திரத்தை சிங்களருக்கே விட்டுச் சென்றிருக்கிறான்.

இங்கே பத்திரிகை என்ற தலைப்பிற்கும், ஆங்கிலத் தமிழ்ச் சிங்கள சம்பவங்களுக்கும் என்ன தொடர்பு? என நீங்கள் கேட்கலாம்.

அது குற்றப்பத்திரிகை என்ற தலைப்பில் இடம்பெற வேண்டிய விடயமாகும்.

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலகட்டத்தில் யாழ்ப்பாண நல்லூரில் இடம்பெற்ற சம்பவம் அது. அதனை நிரூபிப்பதற்கு என்னிடம் வரலாற்றுச் சான்றுகள் ஏதும் கிடையாது. கர்ணபரம்பரையாக எனது காதுக்கு எட்டிய தகவலே அது. சபாபதி முதலியார் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேய அரசுக்கு விசுவாசமானவர். அவர் ஆங்கில அரசில் உயர்ந்த பதவியில் அமர்த்தப்பட்டவர். அவரின் மனைவி மீனாட்சி அம்மாள்.

மீனாட்சி அம்மாளின் அண்ணன் சின்னத்தம்பி முதலியார். சின்னத்தம்பி முதலியார் அந்தநாளில் பெரிய புரட்சிக்காரர். அந்நிய ஆங்கிலேய நீதிபதிமுன் கைகட்டி நிற்பானேன்?

அந்நியர்முன் எங்களது குறைகளை எடுத்துரைப்பானேன்? எல்லாமே எங்களுக்குள் நின்றுபோக வேண்டும் என்ற கொள்கை உடையவர். எனவே தனது சமூகத்திற்கு தானே தீர்ப்பு வழங்கத் துணிந்தார். அவரது சமூகம் அதற்கு ஆதரவு தந்தது. அவரது தீர்ப்பை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டது.

எதிரிகளின் குற்றத்தைப் பொறுத்து, குற்றப்பத்திரிகையின் நிறம் வேறுபடுமாம். பொய்பேசிய குற்றமாக இருந்தால் பச்சைநிறச் சாயத்தால் எழுதப்பெற்ற குற்றப்பத்திரிகை எதிரியைச் சென்றடையுமாம்.

`பச்சைப் பொய்' என்ற வார்த்தையில் உள்ள பச்சைக்கும் பொய்க்கும் ஏதோ தொடர்பை எமது தமிழர்கள் கண்டிருக்கிறார்கள் போலும். தனது மைத்துனர் தமிழருக்கு நீதிமன்றம் வைத்து இராஜதுரோகம் செய்கிறார் என்பதை ஆங்கிலேய எசமான விசுவாசம் மிக்க சபாபதி முதலியார் கண்டு அதனை அரசுக்கு எடுத்துரைக்க அவர் மைத்துனர் கைதாகி சிறைவாசத்தை அனுபவித்து அந்நியராம் ஆங்கிலேயச் சிறையிலேயே மாண்டுபோகிறார்.

அவரைக் காட்டிக் கொடுத்து, ஆங்கிலேயர்தம் விசுவாசத்திற்கு பாத்திரமானவர் என்வழித் தொடர்பில் உறவினர் என்பதால் உள்ளம் வெந்தவன் நான். அதேவேளை அந்நியராம் ஆங்கிலேய நீதிபதியை ஏற்காத சின்னத்தம்பி முதலியாரின் சுதந்திரக் காற்றை உள்வாங்கிச் செம்மைப்பட்டிருக்கின்றேன்.

இவை பாட்டி சொன்ன பழங்கதையாக மட்டுமல்ல. நான் அறிந்தவரை குற்றப்பத்திரிகையை இங்கிருந்துதான் இவ்வாறு இனங்காணுகிறேன். இந்தக் கதையை சிறுவயதில் கேட்டதும், `பத்திரம்' என்று சுட்டுவிரல் காட்டும் சம்பவமும் என்நினைவுக்கு வருகின்றது. `பத்திரம் பார்த்துக்கொள்' பத்திரமாகப் பார்த்துக்கொள், `பத்திரமாக வைத்துக் கொள்' இவை எல்லாமே கவனம், கவனமாகப் பார்த்துக்கொள், கவனத்தில் வைத்திரு என்ற பொருளிலே பத்திரிகைக்கும்நிலைத்திருக்க வேண்டும்.

பைப்ரஸ் என்ற புல்லில் இருந்து செய்யப்பட்டதால் பேப்பர் எனப் பொருள் கொண்ட தாள் அல்லது கடதாசி என்பதன் அர்த்தம் பெறுவதாகவே கிறித்தவ ஆதியாகமத்திற்கான பெயர் பைபிள் என ஆனதாகவும், 4-திசைகளிலும் இருந்து வரும் சம்பவங்கள் கொண்ட தாள் அல்லது இதழ் என்பதாக விளக்கும் நியூஸ் பேப்பர் என மேற்குலக பத்திரிகையின் கதையும், தமிழ் அகராதிகள் பத்திரிகை என்பதற்கும் பத்திரம் என்பதற்கும் பொருள்தரும், இலை, ஓலையுறுதி, ஒற்றை, இறகு திருமுகம், உறுதிப்பத்திரம், குற்றுவாள், அம்பிறகு என்பவையும் ஒருபுறம் இருக்க, எமது ஈழத் தமிழர் பத்திரிகை என்ற சொல்லின் அர்த்தத்தை, கவனத்தில் வைத்திருத்தல், என்ற பொருளிலேயே ஏற்றனர் என்றே கொள்ள வேண்டி இருக்கிறது.

அந்த ஆங்கிலேயர் கால கட்டத்தில் வசனநடை கைவந்த வல்லாளர், பத்திராதிபர் என்ற வகையில் எமது ஈழத்தின் தமிழ் பெரியார் 'ஆறுமுகநாவலர்' அவர்களையும் நோக்குவோம். அவரது நாவன்மையும், எழுத்துவன்மையும் கண்டனத்திலும், சாதியத்திலும், ஆரியப் பிராமணியர் வழி, தமிழக ஆதீனங்கள் வழி நின்று சைவசமயப் பத்திரிகைப் பணியாக பின்னர் ஈழத் தமிழரிடையே புகுந்து கொண்டது. அந்தக் காலகட்டத்தில் சண்முகநாதன் போன்ற பத்திரிகைகள் ஈழத்தில் மிகத் துணிச்சலாக நாவலர்தம் தவறான போக்குகளை சாடி நின்றதாக அறிய முடிகின்றது. இவை ஒருபுற மிருக்க, தமிழகத்திலே இந்த வைதிக ஆரிய ஆதினம் எல்லாம் தமிழைத் துண்டாடும் கொள்கையை இந்தியா, இலங்கை சுதந்திரம் அடையுமுன்பே முடுக்கி விட்டிருக்கவேண்டும் என்றே கருத வேண்டியுள்ளது. ஏனெனில், கிறித்தவ ஆதியாகமத்தை ஆங்கிலேயருக்கு தமிழிலே மொழி பெயர்த்துக்கொடுத்த ஆறுமுகநாவலர் எனும் ஆறுமுகம்பிள்ளை, பின்தங்கிய மக்களை மதம்மாற வைத்து கிறித்தவம் வளர ஊக்குவித்துக் கொண்டே கிறித்தவத்தையும் மதம்மாறிய மக்களையும் சாடி சைவத்தை வளர்த்திருக்கிறார்.

ஈழத்தின் வடபகுதியில் இருந்த பல கண்ணகி ஆலயங்கள் நாவலர் பத்திரிகைக் கண்டனத்தால் அது ஒரு செட்டிப் பெண் வழிபாடு எனக் கொண்டு அத்தகைய ஆலயங்கள் இல்லாது ஒழித்தனர் என்பதும், ஒருசிலவே வடபகுதியில் ஓர் இரு இடங்களிலும், குறிப்பாக வன்னி, தீவகம் முதலான இடங்களில் நின்று நிலைத்தன என்பதும், கிழக்கு மாகாணத்தில் கண்ணகி

வழிபாட்டை நாவலரால் ஒழிக்க முடியவில்லை என்பதும், கண்ணகி ஆலயம் மறைந்த இடங்கள் மாரி அம்மன், துர்க்கை அம்மன் என உருமாறின என்பதும் நாவலர்தம் பத்திரிகைக் கண்டன வரலாறு தெரிவிக்கிறது.

தவிர, நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் பாரம்பரிய முறைப்படி வேல் வைத்து வணங்கப்படுவதுடன், மேற்படி கோயில் பணிகளில் ஈடுப்பட்டிருந்த தீவிர முருக தொண்டர்களான வீர சைவ செங்குந்தர்கள் எனக் கூறப்படுபவர்களின் கோயில் பணிகளும் கொச்சைப்படுத்தப்பட்டது... நல்லூர் கோயில் நிர்வாகமும் நாவலர் பத்திரிகை கண்டனத்திற்கு உள்ளாகியது... மடாலயமாகவும், சமாதிக் கோயிலாகவும் கொள்ளத் தக்கதான கடவுளர் சிலைகள் அற்ற - நல்லூர் கந்தசுவாமி கோயில் முறைமைகள் நாவலர் கூறிக் கொள்ளும் வைதிக ஆரிய ஆகம விதிகளுக்கு கட்டுப்படாதவை என்பதான வாதங்களும் தொடர்ந்தன.

மேற்படி, நல்லூர் சம்பவங்கள் இவ்வாறு இருக்க, பூர்விக வரலாறுதாங்கிய தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய பூசகர்களாக மேற்படி கோயிலுடன் தொடர்புபட்ட சைவ மீனவர்களே இருந்து வந்ததும், நாவலர் கண்டனத்திற்கு உள்ளானது.

இவ்வாறான நாவலர்தம் கண்டனங்களுக்கு எதிராக தீவிர முருக பக்தரான நல்லூர், திருநெல்வேலி அச்சுக்கூட மாணிக்கம் அடிகள் வெளியிட்ட சண்முகநாதன் என்ற பத்திரிகை நாவலரது அர்த்தமற்ற கண்டனம் என்பதாய் அனைத்துத் தமிழருக்குமாக அவர்களது பாரம்பரியம் தாங்கி மிகத் துணிச்சலாக தனது புரட்சிக் கருத்துக்களை தொடர்ந்து வெளியிட்டு வந்தது. அப் பத்திரிகைக்கு மூடுவிழா நடத்த ஆங்கிலோ உறவு தாங்கிய நாவலர்சார் பத்திரிகைச் செல்வாக்கும் அமைவு கொண்டது. இவை போன்ற சம்பவங்களால் நாவலர்வழி, ஈழத் தமிழ் சைவர் சமுகம் அன்றைய காலத்திலேயே சாதிய ரீதியாக பெரு விரிசல் கண்டுவிட்டது வழிதெளிந்திட முடிகின்றது.

இந்த இடத்திலே தமிழ்நாடும் ஈழமும் சம்பந்தப் பட்டதான ஏறக்குறைய 65 ஆண்டுகட்கு முற்பட்ட ஒரு விடயத்தையும் தொட்டுச் செல்ல வேண்டியது அவசியமாகின்றது.

தமிழ் நாட்டில் இருந்து தனித் தமிழிலே முழங்கிய மறைமலை அடிகள் என்னும் வேதாசலம் பிள்ளை அவர்கள் தனது மகள் நீலாம்பிகை திருமணத்தை வடமொழி கலவாது தூய தமிழிலே பேசுவோருக்கே நிகழ்த்தக் கருதினார். அவர், நிகழ்த்திய சுயம்வரத்தில் கலந்து கொண்ட அவர் சமூகம் சார்ந்த நூற்றுக் கணக்கான பிள்ளை எனும் வேளாளர் அறிஞர்களைவிடவும், வடமொழி கலவாது, தனித் தமிழிலே தனது மகள் நீலாம்பிகையுடன் உரையாடி அவர் கரம் பற்றியவர் ஒரு சலவைத் தொழிலாளர் பரம்பரையைச் சேர்ந்ததமிழ் அறிஞராவர். மறைமலை அடிகள் தனது மகளுக்கு நீலாம்பிகை எனச் சூட்டிய பெயர் வடமொழி சார்ந்தது எனவும், 'கறுப்பு ஆச்சி' என தனித் தமிழிலே அப்பெயரை வைத்திருக்கலாமே என்று அந்தத் தூய தமிழ் அறிஞர் குறைகூற, இந்தக் கூற்று மறைமலை அடிகளையே நாண வைத்திருக்கக் கூடும்...

தனித்தமிழ் முழங்கி, அது வழி சமரசம் கருதி, சலவைத் தொழிலாளி பரம்பரையில் வந்துதித்த அறிஞருக்கே தமிழகத்திலே சாதியம் கடந்து மகளை மணம்புரிவித்து மகிழ்ந்த அந்த மறைமலை அடிகளின் மகள் சுயம்வரத்திற்குச் சென்ற பிள்ளை எனும் வேளாளர் வகுப்பைச் சேர்ந்த ஈழத் தமிழ்பண்டித மணிகளோ நூற்றுக்கணக்கான வடமொழி கலந்து இராவணன் போல சுயம்வரத் தோல்வியைச் சந்தித்துத் திரும்பினர் என்பது ஒரு புறமிருக்க, அத்தகைய மறைமலை அடிகளாரும், தனது முதுமையில் ஈழம் வந்து ஆறுமுக நாவர் வழி வைதிக ஆரிய முறைமையை உட்கொண்டு தம்மைப்போன்ற பிள்ளை வகுப்பினரான வேளாளர்களைப் போற்றிப் புகழ்ந்து திருப்திப்படுத்திச் சென்றிருப்பதை அவரது யாழ்ப்பாண வருகையின் அன்றைய சொற்பொழிவுகள் பற்றிய பத்திரிகை அறிக்கைகள் தரும் தகவல்கள் வழி தெளிந்திட முடிகின்றது.

தமிழர்களின் தீர்க்கதரிசனம் இல்லாத அன்றையவிரிசல் போக்கினால், பின்னாளில் தமிழருக்கு ஏற்படப்போகும் பேரபாயத்தை நாவலர் தமிழ் நாட்டில் ஆற்றிய சைவமதத் தொண்டுவழி உணர்ந்தவர் தமிழ் நாட்டைச்சேர்ந்த 'அருள்பிரகாச வள்ளலார்' அவர்களே!

ஆன்மநேய ஒருமைப்பாட்டின் ஊடாக சமரச சுத்தசன்மார்க்கம் என மதவழிபாட்டை நடத்தியவர் அந்த வள்ளலார் ஒருவரே! 'உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்.' என்று கலங்கி நின்ற கருணை மகான் அவர்.

தமிழகத்திலே ஆரியர், நாவலர் ஒப்பந்தம் அந்த ஞானியை தடுமாற வைத்துவிட்டது. இவை தமிழர் வரலாற்றின் சோகக் கதைகள்.

இந்தக் கதையை நீட்சிப்படுத்தாது, ஆங்கிலோ-நாவலர் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் வருவோம்.

உதயதாரகை, சண்முகநாதன், உதயபானு, வித்தியாதர்ப்பணம், இலங்கை நேசன், இந்துசாதனம், சன்மார்க்கபோதினி, விஞ்ஞானவர்த்தினி, முஸ்லிம்நேசன், சைவ உதயபானு, ஈழகேரி என்னும் இவைகளை அன்றைய பிரித்தானிய காலனி ஈழத்தின் பத்திரிகைகளாக உள்வாங்குவோம்.

ஆங்கிலேய கல்வி அழுத்தங்களையும் உள்வாங்குவோம். ஆசார அனுட்டானம் நிறைந்த சைவ சிந்தனைகளை நுகர்வோம்.

இதேவேளை பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட மக்கள் மதம்மாறி ஆங்கிலக் கல்வி பயின்று மேற்குலகினர்போல ஆங்கிலப் பத்திரிகை படிப்பதைக் காண்போம். மேட்டுக்குடியினரும் தாங்கள் பின்தங்கிவிடப் போகிறோம் என்ற பயத்துடன் கிறித்தவம் தழுவி 'சிலோன் றிவியூ' முதலாக தாமே ஆங்கிலப் பத்திரிகையும் வெளியிட்டு அரை ஆங்கிலேயராகி விட்ட காட்சியையும் கண்டு தெளிவோம். இவற்றை எல்லாம் கோர்வைப்படுத்தினால், நாவலருடனும், ஆங்கிலேயருடனும் சடுகுடு விளையாடிய அன்றைய அப்பாவித் தமிழரின் சமூகசித்தாந்தமே இன்றுவரை தொடரும் ஈழத் தமிழரின் நிலைப்பாடு என்று தெளியலாம்.

இத்தகைய பின்னணியில் இருந்து எழுந்து, பிரித்தானியர் சிங்களரிடம் ஒப்படைத்துச் சென்ற ஈழ உரிமைகளுக்காகப் போராடுகின்ற இன்றைய காலகட்டம் வரை கோர்வைப்படுத்தினால்...

வெள்ளையர் அடக்கு முறையூடாகப் பிறந்து... சிங்களர் காலத்தில் தணிக்கைக்குப்போய், தமிழர்தம் உரிமைக்காக சுதந்திரத்துடன் எழுதவேண்டிய இன்றைய காலகட்டத்தில் கூட எம்மிடையே உருவாகியுள்ள பிளவுகள், இடக்குமுடக்குகளால் தமிழ்ப்பத்திரிகை உலகம் இன்னும் முழுமை பெறவில்லை என்றே கருதவேண்டியுள்ளது.

எழுத்தாளர்களின் சுற்றிவளைப்புகள், பிள்ளையார் சுழிகள் கூட ஏதோ ஏக்கங்களை தெரிவிப்பதுபோன்ற பிரமையையே அது ஏற்படுத்தி வைக்கின்றது. ஆம், தமிழ்ப் பத்திரிகை உலகம் இன்னும் சுதந்திரத்துடன் அடியெடுத்து வைக்கவில்லை.

எமது முழுத் தமிழினமும் நேச மனப்பான்மையுடன் ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன், ஒருவரையொருவர், தழுவும் போது, எழப்போவதுதான், உண்மையான, உயிரோட்டமான பத்திரிகைச் சுதந்திரம். அதுவரை தணிக்கையை நிரப்பும் பழைய சங்கதிதான். இனி, தமிழ் நாட்டுப் பத்திரிகைத்துறை அவலத்திற்கு வருவோம். இந்தியாவில் முதன்முதலாக கீழைத்தேய மொழியாக தமிழ் மொழியே அச்சுவாகனம் ஏறி இருக்கின்றது. 'தம்பிரான் வணக்கம்' என்ற பெயருடன் வணபிதா கென்றிக்ஸ் என்னும் பறங்கியரால் 1577இல் இந்நூல் வெளியிடப்பட்டு இருந்திருக்கின்றது. தமிழர்தம் தொன்மைச் சிறப்பிற்கு தலை வணங்கியவர்கள் ஐரோப்பியர்களே! அதே வேளை அன்னைத் தமிழை மறந்து அன்னியமோகத்திற்கு தமிழர் அடிமையாகி இருந்திருக்கின்றனர்.

'தம்பிரான் வணக்கம்' அச்சேறி 4 நூற்றாண்டுகள் கழிந்த பின்பும் தமிழ்ப் பத்திரிகைகள் நல்ல தமிழை வளர்க்கவில்லை.

1942இல் தினமணி தமிழகத்து பிரபல பத்திரிகைகளில் ஒன்று இப்படித்தான் தலைப்புச் செய்தியைப் போட்டிருக்கிறது.

**ஶ்ரீ.கோ. குணா அடிசனல் மஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். ஶ்ரீ ஹென்றி ஹார்டி ஜாமின் கூறி ஆஜரானார். இது விசியம் பம்பாய் ஹைகோர்டிற்கு அப்பீல் பண்ணுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.'**

இதேவேளை இந்தியாவில் படித்தவர்கள் வரிசையில் முன்னணியில் நிற்கும் மலையாளிகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களது பத்திரிகை வளர்ச்சி அனைவரையும் படித்தவர்கள் ஆக்கிக் கொண்டு வந்திருக்கிறது. அழகான இனிய சொற்பிரயோகங்கள், மேற்குலகின் அறிவியல் விஞ்ஞான சொற்களை உள்வாங்கும்போது, ஏற்படுத்தும் மொழியாளுகை அந்த மலையாளத்தில்... அங்கே, எமது சங்கத் தமிழ் இலக்கியச் சொற்கள்

அவர்களின் பேச்சுப்பதமாகப் பிரயோகிக்கப் படுதல் கண்டு புளகாங்கிதம் அடைகின்றோம்.

அதேவேளை தூய தமிழர்களாகிய நாங்கள் எங்கோ அந்நியத்திற்குள் புகுந்துவிட்டோம் என்ற அவலம் ஏற்பட்டு, தலைகுனிந்து கொள்கின்றோம். ஈழத்தில் பிறந்து கிறித்தவகல்வி முறையில் பயின்ற நாவலரும், கிறித்தவராகியே படித்து உயர்ந்து பின்னர் சைவரான தாமோதரம்பிள்ளை முதலான ஈழவர்களாலேயே தமிழ் வளர்க்க வேண்டிய நிலையில் அன்றைய தமிழ்நாடும் இருந்திருக்கிறது. பாரதியார், பாரதிதாசன், திரு. வி. க., மறைமலையடிகள், பேரறிஞர் அண்ணா, கல்கி வரதராஜன், ரா.பி. சேதுப்பிள்ளை, சூரியநாராயணர் முதலிய தமிழ் அறிஞர்களால் தமிழ் சீர் திருத்தமுற்றும் இருந்திருக்கிறது.

65-க்கு முற்பட்ட தொடர்புச் சாதனமான சினிமாத் துறைகூட சிதையாத அழகுத் தமிழைக் கலாச்சாரமாக்கி, திரையிட்டிருக்கிறது.

இன்றைய காலகட்டத்தில், வீடியோ பத்திரிகை உட்பட அறிவியல் சிந்தனை ஊட்டவேண்டிய தமிழ் ஊடகங்கள் அனைத்துமே விளம்பர வியாபாரப் பண்டங்கள் என ஆகிவிட்டன.

திருட்டு, ஆபாசம், சாதிச்சண்டை, அரசியல் வன்முறை இப்படியாக உருவாக்கப்பட்டு சோமாரி பேமானிகளை அரங்கேற்றிக் கொண்டு இருக்கின்றது. தமிழகத்து எழுத்தாளர் பசுவையா எனும் சுந்தரராமசாமி, எழுத்தாளர் மாநாடு ஒன்றில் இப்படிக் கூறியுள்ளார்...

'எழுதுகிற ஆவலோடு எழுதுவதற்கு இலக்கிய வளமோ, கருத்துக்களோ இல்லாமல், நோய்களை இனங்கண்டு, அதில் தெளிவடைந்து அறிவு பூர்வமாக ஆராயப்பட்டு முடிவாகிவிட்ட விடயங்களை மீண்டும் ஆணிவேரில் இருந்து ஆராய முற்படுவதன் மூலம் மீண்டும் சமூகப் பிரச்சினைகளை பத்திரிகைகள் தூண்டுகின்றன". பசுவையாவின் இந்தக் கணக்கிலே

மேற்குலகில் வெளியாகும் எமது ஒருசில பத்திரிகைகள் சஞ்சிகைகளையும் போடத்தான் வேண்டியுள்ளது.

இதோ விடியல் ஒன்று. விடியலை உணர்த்தக் காகம் பறக்கிறது.

சமுதாயத்தின் வெற்றி அதன் பலத்தை அறிந்திருப்பது மட்டுமன்று, அதன் பலகீனத்தை அறிந்திருப்பதிலும், அதனை நீக்குவதிலுமே அடங்கி இருக்கிறது எனும் பேராசிரியர் க. ப. அறவாணனைத் தாங்கி நண்பர் முல்லையூரானின் இந்தக் காகம் பறந்து வருகின்றது. புறநானூற்று வார்த்தைகள் புத்துயிர் பெற்றுவிட்டன. வயிற்றிற்குச் சோறிட வேண்டும் என்னும் வள்ளலார் வாக்குகள் காகமாகப் பறந்து வந்து அகத்தியர் கமண்டலத்தைக் கவிழ்த்து காவிரியாக்கிய கதையாகிறது. இந்த காவிரி கர்நாடக, தமிழக மாநில சண்டைகளை இங்கே நேரவிடாது. இந்தக் காகம் எங்களது சொந்தக் காகம். தன் இனத்திற்கு ஏதும் ஊறு நேர்ந்து விட்டால் அபாயக் குரல் எழுப்பி தன் இனத்திற்கு எச்சரிக்கை செய்து துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் காகம். உணவைக் கண்ட நாய்கள் நீ முந்தி, நான் முந்தி என ஒன்றை ஒன்று கடித்துக்குதறுவதுபோல அல்லாமல், உணவைக் கண்டதும் ஒலிஎழுப்பி தனது இனத்தை எல்லாம் வரவழைத்து ஒன்றாக மகிழ்ந்து பகிர்ந்துண்ணும் காகம். இங்கே நிறத்திலே காகம் ஆக இருக்கும் தமிழனிடம் ஒற்றுமை, ஒன்றுகூடல் எனும் மணம், குணம் திகழவைக்க வேண்டி நண்பர் முல்லையூரானின் இந்தக் காகம் பறந்து வருகின்றது. ஒற்றுமைக்கு வித்திடப்போகும் இந்தக் காகத்தால் தமிழ்ப் பத்திரிகை உலகம் கடைத்தேறும் என்று நம்புவோம். எழுதப்பட்ட சட்டங்கள் ஆட்சி புரியும் ஜனநாயகப் பண்புகள் நிறைந்த இந்த டேனீஷியர் வாழும் நாட்டிலே உண்மையான, அறிவான, சூதாட்டத்தை அறிந்து கொள்ளாததாக ஈழத் தமிழர் தோற்றப்பாடுகளை எடுத்துக் காட்ட வேண்டி முல்லையூரானின் இந்தக் காகம் பறக்கத் தொடங்கிவிட்டது 'காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும் அன்னநீ ரார்க்கே உள..' என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. உணவைக்

கண்டதும் கரைந்து தன் இனத்தோடும் சேர்ந்திருந்து காகம் உண்ணும். அதுபோன்ற இயல்பு கொண்டவர்களுக்கே சிறப்புக்களும் வந்து சேரும். எனப் பொருள்தருவது மேற்படி குறள்.

அதிகாலை எழுந்திருத்தல். யாரும் காணாமல் புணர்தல், உறவு கலந்துண்ணல் முதலான நல்ல பண்புகள் காகத்திடம் இருப்பதனை கண்டு அதனை தமிழருக்கு உணர்த்த பழந்தமிழ்ப் புலவர் ஒருவர் பாடிய 'காக்கைக் குணம்' என முடியும் வெண்பா ஒன்றும் எனது நினைவுக்கு வருகின்றது. 'பட்சமாய் இருங்க! பகிர்ந்துண்டு வாழுங்க! பழக்கத்தை மாத்தாதிங்க!' இது கலைஞர் கருணாநிதி அவர்களின் பராசக்தி என்ற தமிழ்ப் படத்தில் வந்த ஒரு பாடல்.

பர்மாவுக்கு பிழைக்கச் சென்ற தமிழகத் தமிழன் பர்மியரால் அகதி ஆக்கப்படுகிறான். அங்கே தாய்நாட்டு மக்களால் புறக்கணிக்கப்படுகிறான். அந்த வேதனையில் காகத்தை பார்த்து மனித சமூகம் கற்றுக் கொள்ளவேண்டியதை உணர்த்த அந்த பர்மியத் தமிழ் அகதி பாடியதாக வரும் பாடல் அது. அந்த அகதியை முல்லையூரான் இனங்காட்டுவதிலும் ஓர் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது.

வணக்கம்.

# II. தாயக அரங்க நிகழ்வுகள்

## 1. கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில்...

(1974-இல் யாழ்ப்பாணத்தின் 4-ஆவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டு சோக சம்பவங்களை, 1975இல் யாழ்ப்பாணம் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி நவராத்திரி விழா கவியரங்கில் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் முன்னிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இன்றைய தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, உள்ளிட்ட ஏனைய கவிஞர்களுடன்...)

### நான்காவது மாநாட்டிலே...

ஆராய்ச்சி மாநாடு நான்காவது ஈழமதில்
அழகு நடையுடனே அடியெடுத்து வைத்ததுவே!
பாரிஸின் எழில்கோலம் பார்த்த தமிழ்ப் பெண்ணாள்
வாரிசு தேடி யாழ்ப்பாணம் வந்தாளோ!
பலகாலம் தேடியஎம் பண்டையநாள் சொந்தமிது!
பற்றிப் பிடித்தோம் அணைத்தோம் துடிதுடித்தோம்!
விலகோம் தாயேநாம் உங்களுக்கு மைந்தர்அன்றோ!
வாங்கள் இருங்கள் எப்படி உங்கள் சுகம்?
மலேசியத்தில் இனங்கண்டே மதராசாம் தமிழகத்தில்
அண்ணா அமைப்பினிலே அலங்காரம் உற்றீர்கள்!
பலமைலுக் கப்பாலே பாரிசும் போனீர்கள்!
சுதந்திரத்து வாடையிலாச் சூழ்துயரத் தமிழினத்து
யாழ்நகரம் வந்துள்ளீர்! பத்தேநாள் சொந்தம்இது!
பந்தம் பாசம் பற்று வைப்பதெலாம்
பெருங்கொடுமை தாயேநின் பிரிவென்றால் துயர்வருதே!..

தமிழ்த்தாயின் வரவாலே தமிழ்மைந்தர் மகிழ்வுற்றார்!
கம்பனது வர்ணனையாம் காவியமாய் நகர்சமைத்தார்!
அலங்கார ஊர்திகளும், அன்றையநாள் தமிழினத்தின்
அரசிருக்கைக் காட்சிகளும் பண்டையநாள் ஏடுகளும்
பண்பாட்டுப் பவனிகளும் கண்ணாரக் கண்டோமே!
ஆய்வாளர் சொன்னதெலாம் காதாரக் கேட்டோமே!
ஆங்கிலத்தார் மொழிந்ததமிழ் அதிசயம்! வாய்பிளந்தோமே!
தமிழே! எம் தமிழேநீ அந்நியத்தார் நாவினிலே
அழகொழுக வீற்றிருக்கும் செம்மைகண்டுள்ளம் சிலிர்த்தோமே!
ஆனந்தக் கண்ணீர்ப் பெருக்காலே தமிழே நீவாழி
தழைத்தென்று மொழிந்தோமே!
பத்தாம்நாள் வெளியரங்காம் முற்றவெளிமைதானம்!
கடலலையாய்த் தமிழரெலாம் திரண்டிருந்த ராத்திரியாம்!
நன்றியெலாம் நவில்கின்றார் நமைநாடி வந்தவர்கள்!
பாவேந்தன் கவிதைகளை நாவேந்தி நின்றனன் ஓர்
தமிழகத்துப் பேரறிஞன் இசுலாம்சோதரனாம்!
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று
சங்காய் முழங்கினனே!
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்திட்டால்
சங்காரம் நிசமென்று சங்காய் முழங்கினனே!
சத்தியத்து மைந்தனது தாய்த்தமிழ்ப் பாசமது
பித்தர்களின் சித்தமதில் பொறாமையைத்தான் ஊட்டியதோ?
கண்ணில் சுடர்வீசக் கடலாய்நாம் பொங்கி நிற்க
கண்ணீர்ப் புகையாலே கறைப்படுத்தி விட்டனரே!
திசையறியாத் தடுமாற்றம்! விசையான பொல்அடிகள்!
வசைமொழியோ சிங்களமாய் வருகிறதே என்செய்வோம்?
- பொலிசாரின்
சப்பாத்துக் கால்களுக்குள் எப்படியாய் துவையுண்டோம்?
துப்பாக்கி வேட்டுகளா? துடிதுடித்துப் போனோமே!
மின்சார இணைப்பறவே அதற்குள்ளும் ஓலஓலி!
எதிரிகளைக் குறிபார்த்து எம்செருப்புப் பறக்குதிதோ!
எங்கிருந்தோ கல்மாரி எதிரிகளைத் தாக்குததோ!
எங்கிருந்தக் கல்மாரி வருகுதெனப் பார்க்குகையில்

சிங்கக் குருளை சிவகு மாரனைக் கண்டோம்!
பாசம் வளர்க்க வந்த பண்புத் தாய்த் தமிழே!
பத்தே நாளுடனே பிரிகின்றீர்! - அவ்விடத்தே
பலியான மறத்தமிழர் பத்துப்பேர்! - அன்னவரைப்
பெற்றவளே! உன்னினைவை வைத்தாயோ நடுகல்லாய்...?
கல்லதனுள் கடவுளரே கைகூப்பி நிதம் தொழுவோம்!
வல்லதமிழ் அணங்கொருகால் வருவாள்காண் யாழ் அரங்கு
தொல்லை நீங்கியதாய் தூயதமிழ் மைந்தரெலாம்
நல்ல கவிபாடி நலம் பெறவே வேண்டிடுவோம்!
- ஆம்,

இன்பத்துக் கதிபதிகள் நாமே கூடி
ஈழத்துக் கடற்கரையில்
கவிதை பாடி
நன்முத்துத் தெறிப்பதென நீரை அள்ளி
நீள்கரையில் கொட்டிவிட
நண்டே துள்ளி
பொன்நாடு என்வீடு என்றே பொந்தில்
புதிதாக வளைவைத்தே
போகும் சந்தில்
நின்றாடும் அலைக்கரமே! நிலவே வானே!
நிறைவான இன்கவிகள்
நாளை தோன்றும்!

வணக்கம்

## 2. திருக்கோணமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில்..

(1982இல் திருக்கோணமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில், மேற்படி திருக்கோணமலையின் 19ஆம் நூற்றாண்டு அறிஞர், அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர், தி.த. கனகசுந்தரம்பிள்ளை அவர்களின் நினைவுக் கவியரங்கில் இடம்பெற்றது. இந்த விழாவிலே மட்டக்களப்பு அறிஞர் எப்எக்சி நடராசா முன்னிலையில்...

தலைமை : தாபி சுப்பிரமணியம்

கவிஞர்கள் : அமரசிங்கம், கோணேஸ்வரன், கா. இரத்தினலிங்கம், நவசோதிராஜா, ஆனந்தபிரசாத், தில்லை முகிலன் ஆகியோருடன் கவிவேழம்)

### திருமலை தந்த கனகசுந்தரம்

'... என்தமிழன் ஈழகத்தே இருக்கின் றானா?
இலங்குதமிழ் கவிமரபைக் காக்கின்றானா?
தன்மானம் காக்க வழி சமைக்கின்றானா?
தரணிஎலாம் தன்தமிழை விதைக்கின்றானா?
மன்னவர்முன் காத்தமறை தமிழன் மன்றில்
மங்காமல் சுடர்பரப்ப வைக்கின்றானா?'
என்றுபல கேள்விகளைக் கேட்டிட் டார்கள்!
என்கனவில் அன்றையநாள் அறிஞர் பல்லோர்!

செந்தமிழன் ஈழகத்தின் பூதத் தேவன்!
செப்பு தமிழ் சங்கமதே சாற்றுகின்ற

அந்தஒரு கவித்தமிழன் எதிராய் நின்றே
அழகாகச் சிரித்திட்டான்! அடடா இன்பம்!
இந்தஒரு ஈழகத்திற்கு உரிமை கேட்க
இவன்கொடுக்கும் இலக்கியமே போதும்! ஆமாம்!
எந்தை தமிழ்ப் பூதன்அவன் புதையல் காப்பான்!
என்றாலும் அவன் கேள்வி என்னை வாட்டும்..!

இன்னின்னும் எத்தனையோ புலவோர் தாங்கள்
ஈழகத்துக் கவிஞரெனப் பேசிக் கொண்டார்!
அன்றையநாள் கவிமரபைக் காத்திட்டாராம்!
அவர்படைத்த கவிதைகளை அவரே சொல்ல
என்தலைதான் சுற்றியது ஈழம் இங்கே
இப்படியும் தமிழ் வளர்ந்த வரலாறுண்டா?
என்றாங்கே ஒருகணம்நான் திகைத்தே போனேன்!
எல்லோரும் மறைந்திட்டார் ஒருத்தர் நின்றார்!

சைவமுடன் தமிழ் வளரும் தெய்வக் குன்றம்
திருக் கோண மலை மண்ணை அழைத்திட்டாராம்!
பையனிலே சுட்டிஎனத் திறமை காட்டி
பறந்தவராம் சென்னைஎனும் தமிழ் நாட்டிற்கு
மெய்யுணர்வோடு இன்தமிழை மதத்தைக்காக்க
மேன்மைபெற உழைத்தவராம் சான்றோர் போற்ற
பொய்மையிலா புன்னகையில் புலமை காட்டி
பொறுமையுடன் கனகர்அவர் புகன்றே நின்றார்!

... நான் அழைந்த தமிழ் மண்ணில் தமிழே வாழும்
நம்பிக்கை மிகவுண்டே அங்கே தானே
கோன் அவர்எம் கோணேசர் குடிகொண்டுள்ளார்
குறிப்பறிந்தே அடியவர்கள் கூடிச் செல்வார்!

ஞானவழி பெறுவதற்கோர் நல்லோர் குன்றம்!
சம்பந்தப் பெருமானார் பெருமை என்றும்!
ஆனதனால் நான்பிறந்த மண்ணே வாழும்!
அருமைமிகு இளங்கவிஞ! பதிலைக் கூறும்!

'என்தமிழன் ஈழகத்தே இருக்கின்றானா?
இலங்குதமிழ்க் கவிமரபைக் காக்கின்றானா?
தன்மானம் காக்கவழி சமைக்கின்றானா?
தரணிஎலாம் தன்தமிழை விதைக்கின்றானா?
மன்னவர்முன் காத்த மறை தமிழன் மன்றில்
மங்காமல் சுடர்பரப்ப வைக்கின்றானா?'
என்னையா பதில் இறுப்பேன் ஈழம் வாழும்
எங்களது தலைமுறையே எண்ணிப் பாரும்!

கோணமலை நாதரது குன்றைப் பாரும்!
குமுறிஅழும் கடல் அலையின் ஓலம் கேளும்!
நாணம்இலா ஆணவங்கள் அகிம்சா பேசும்.
நடுத் தெருவின் நிழல் மரமா ஞானம் கூறும்!
மானம் இங்கு காப்பவரே முன்னே சென்று
மாதுமையாள் கோணேசர் புகழைப் பாடும்!
ஆனதமிழ் கவிமரபைக் காக்கும் ஆங்கே!
ஆஸ்திகமும் நாஸ்திகமும் நமக்கா வேண்டும்!

வணக்கம்

## 3. திருக்கோணமலை விக்கினேஸ்வரா கல்லூரியில்...

(திருக்கோணமலை பெருந்தெரு விக்கினேஸ்வரா கல்லூரியில் 1982-இல் இடம் பெற்ற நல்லை அமிழ்தனின், முன்னோடிகள் பாரதிவிழா கவியரங்கிலே)

**கவிஞர்கள் :** க. கோணேஸ்வரன் கோப்பாய் சிவம், தில்லை முகிலன், புரட்சிவண்ணன், நல்லை அமிழ்தன், கா. இரத்தினலிங்கம் ஆகியோருடன் பாரதிபாலன்.

### நடிப்பிலே நம்மவர்...

நாலுமுழ வேட்டியுடன் நாலைஞ்சு தோழருடன்
வேலுப்பிள்ளை சீவியது விற்பனைக்குப் போகுமுதல்
ஆளுக்கு ஒரு சிரட்டை அவசரமாய்ப் பருகியதும்,
ஏழைக்கு வாழ்வுவரும் எங்களின்கை ஓங்கிவிடும்
நாளைக்கு நடக்குமென நல்லதமிழ் பாடியதும்,
கள்ளினிலே மிதக்கின்ற கட்டெறும்பின் கதிபோலே
கள்ளர்களாம் முதலாளிக் கயவர்நிலை பாருமென
துள்ளிஒரு நடைநடந்து தூஎன்று துப்பியதும்,
``...வேலு! இந்தக்கதி எமக்கு கனகாலம் இருக்காது!
வேண்டுமெனில் பார்இரண்டு மூன்றாண்டு முடிவதற்குள்
ஓலையிட்ட உன்குடிசை ஓட்டடுக்குச் சிகப்பாகும்!
சாலைகளும் சந்திகளும் சந்ததிஉன் புகழ்பாடும்!
சீவுகிற உன்வேலை சீக்கிரத்தில் முடிவதற்கும்
காவுகிற கள்ளாலே கனகாசு பெறுவதற்கும்
கூவுகிற கோழிகளைக் குழம்பாக்கி நீ உண்டு
கடிகாரம் கட்டி ஒரு கதிரையிலே நீ அமர்ந்து
மாக்ஸ்உடனே மாசேதுங் லெனினையும்நீ வாழ்த்திஒரு
வோக்ஸ்வேகன் காரிலே வீதிஉலா போய்வரலாம்!
பார்க்கத்தான் போகின்றாய் பாசமுள என்தோழா!

எங்களுக்கு நாட்டினிலே எத்தனையோ வேலையப்பா!
உங்களுக்காய் வாழுகிறோம்! உண்டதற்கு நன்றி!... என
ஓசிக்கள் ஏவறையில் ஒருகவிதை முழக்கியதும்,
பாசியிலே வழுக்கிஒரு படிக்கட்டில் உருண்டதுவும்,
பாசிஎனும் பச்சையடா பகைநமக்கு என்றதுவும்,
குளத்தினிலே தவம்புரிந்த கொக்கினமே சாகவென
கலம்பகத்தைப் பாடியதும், கவண்மேந்துக் காரர்களின்
போக்குகளைச் சாடிஒரு புதுக்கவிதை முழக்கியதும்,
தொழிலாளி, விவசாயி தோழரின்கை ஓங்குமென
தோள்தட்டி நின்றதுவும், துயர்நிறைந்த ஏழைகளின்
பொதுஉடமை ஆட்சியிலே செருப்பணிய நினைத்ததுவும்,
அதுவரைக்கும் கால்சிவக்க அனல்கொதிக்கும் வெய்யிலிலே
புரட்சியிட நினைத்ததுவும், போதுமடா போதுமென
அயல்நாட்டு மோகமிடஅபுதாபி பார்த்ததுவும்,
ஓரிரண்டு ஆண்டின்பின் ஊருக்குத் திரும்பியதும்,
ஒருலட்சம் வங்கியிலே டிப்போசிட் கட்டியதும்,
பெருமட்டம் தான்என்று பெல்பொட்டம் போட்டிப்போ
இவர்மட்டம் தட்டுகிறார் இங்கெல்லாம் அலுப்புகளாம்!
அடுத்தடுத்துப் போனாலும் அவர்படலை திறக்காது!
விடுங்கோவேன் படுக்கட்டும்! விடிந்தபின்னே விழிக்கட்டும்!!

வணக்கம்

# 4. திருக்கோணமலை புனிதசவேரியார் பாடசாலையில்...

(02.02.1988இல் திருக்கோணமலை புனித சவேரியார் பாடசாலையின் சங்கப் பலகைக் கவியரங்கில் இந்திய அமைதிப் படையின் கட்டுப்பாட்டில் இருந்த திருக்கோணமலையில் அனைத்து தமிழ் அமைப்புகளும் சுதந்திரமாக நடமாடிய காலப்பகுதி கவியரங்கு.

**தலைமை** : ஆசிரியர், கவிஞர். புஸ்பராஜன் அவர்கள்
**கவிஞர்கள்** : க. கோணேஸ்வரன், நவசோதிராஜா, கபூர், தில்லை முகிலன், புரட்சிவண்ணன், முதலான கவிஞர்களுடன் பாரதிபாலன்.)

## இல்லாத ஒருமைப்பாடு...

'சிறைக் கோட்டத் துள்வைத்துப் பார்த்திட்டாலும்
சில நல்ல பதவிகளை
தந்திட்டாலும்
கறைபடியாக் காளையர்கள் என்றே சொல்வோம்! - நாம்
காறி உமிழ்ந்திட்ட கதை
சிறையே சொல்லும்!
அறையடிகள் ரத்தத்தைக் கக்கினாலும்
அவர் தோட்டா எம்நெஞ்சைத்
துளைத்திட் டாலும்
அறை கூவி நிற்போம் எம் தமிழே! - நாங்கள்
அடிபணியோம் இறுதிவரை தமிழன் ரத்தம்!'

குன்றென நிமிர்ந்தே அன்று
கொள்கையில் ஒருமை பெற்றே
மன்றெனும் தமிழ்மண் மீதில்
மாபெரும் ஆணை இட்டோம்!
இன்றைய நிலைதான் என்னே!
இதயமே நோகுதையா!
கன்றுகள் பிரிவால் தாய்மைக்
கதறலே கேட்குதையா!

சிங்களன் திருந்தினாலும்
சிந்தையால் இரங்கினாலும்
எங்களின் தமிழன் இங்கே
எதிரிதான் எமக்கென்றான
பங்கம்ஏன் சூழ்ந்ததப்பா
பதறும் என் நினைவில் மின்னும்
சங்கதி சொல்வேன் யாரும்
சஞ்சலம் கொள்ளாதீர்கள்!

நாவலர் பெருமான் என்றே
நாமெலாம் வணங்கும்அந்நாள்
காவலர் தமிழ்த்தாய்க்கு இங்கே
கடும்பணி புரிந்தார் என்றே
ஆவலாய் பயிற்றும் போழ்தில்
ஆசையாய்க் கேட்போர் போலே
பாவனை புரிந்தோம் அன்று
பலன்அது நேருது இன்று!

கண்டனம் விடுத்தும் சைவக்
காவியம் படித்தும், இங்கே
மண்டபம் கல்விக்கூடம்
மாபிர சங்கம் செய்தும்,
தண்டனை தருவார் போல
சாதிகள் இழித்தும் சொல்லிக்
கொண்டவர் குறிப்பேடுஎன்னும்
கொள்கையில் வளர்ந்தோர் அன்றோ!
தீர்க்கமாம் சிந்தை இன்றி
தீந்தமிழ் காத்தோம் என்றே
மூர்க்கமாய்ச் சொல்லிப் போன
மூத்தவர் செய்கையாலே
போர்க்கொடி தூக்கி இங்கே
பொதுப்பகை ஒழிப்போர், தம்முள்
தேர்ந்திடா ஒருமைப் பாடே
தீங்கினை விளைக்கு தப்பா!

நேர்படப் பார்த்தல் வேண்டும்!
நேர்படப் பேசல் வேண்டும்!
தேர்ந்தநல் அறிவே கொண்டு
தெளிவுற மொழிதல் வேண்டும்!
ஊர்உலகு ஒவ்வா வார்த்தை
உனக்கு அதில் உடன்பாடென்றால்
சீர்பெறப் பயின்ற பின்னால்
சிறப்புறப் போதிப்பாய் நீ!

வந்தனைக்கு ஏற்ற தெய்வ
வடிவழகு ஓவியத்தின்
விந்தையால் உய்யும் மாந்தர்
விண்ணரசு ஏற்பார் என்றால்
சிந்தையில் புதிதாய் தோன்றும்
சிறப்புறும் எண்ணச் சாற்றால்
உந்தனின் எதிர் காலத்தை
ஓவியம் ஆகத் தீட்டு!
-நீ
பழகிய மனிதர்க்கு எல்லாம்
பழையஓர் மனிதன் என்ற
வளமையை மாற்றிப் பாரேன்!
வாழ்க்கையில் மாறிப் பாரேன்!
எழுதி வைத்து இருப்ப தெல்லாம்
ஏடெனும் பழைமை என்றால்
விழுதுவிட்டோங்கும் எல்லா
வித்தையும் பழமை அன்றோ!
உண்மையே தேடித் தேடி
உயிர்விடும் உந்தன் உள்ளம்!
திண்மையே பெற்றிடாது
திகைப்பதேன் சிந்தித்தாயா?
கண்ணியர் என்றுஉன் உள்ளம்
கருதிடும் மாந்தர்க்கு உன்னை
கண்ணியன் ஆக்கும் ஆவல்
கடுகளவேனும் இல்லை!
உந்தனின் உயர்வைக் கண்டே
உள்ளத்தில் அழுக்காறு உற்றே
சிந்தையால் உன்னைக் கொன்றே

சிரிப்பினால் உன்னைத் தூக்கும்
அந்தகர் விழி நோக் காதே!
ஆபத்தை எதிர் நோக்காதே!
இந்த ஓர்கணம்நீ சிந்தி
இனி உனைத் தீமை தீண்டா!

பார்த்ததைப் பார்த்துப் பார்த்து
பகற்கனா காண்பது எல்லாம்
நேற்றுடன் நிறுத்திப் போடு
நிம்மதி நிறைத்துப் போடு!
போற்றுவார் போற்ற உன்னைத்
தூற்றுவார் தூற்ற, உண்மை
நாற்றினை நட்டுப் பாரேன்
நற்பயன் காண்பாய் திண்ணம்!

உள்ளத்தில் உண்மை நீதி
உயர்ந்தநல் வாக்குக் கொண்டே
கள்ளத்தால் நெருங்கிடாதே
கயவரில் கண்ணும் வைத்து-ஓர்
பள்ளியின் சிறுவன் போலே
பண்புறு நலனைப் பெற்றே
துள்ளியே திரிவாய், உன்னைத்
தூயனாய்த் துதிப்பர் உண்மை!
உளவியல் நூல்வல் லார்கள்
உரைத்திடும் உண்மை ஈது!
களத்தினில் நிலையாம் தன்மைக்
கற்பனைத் திடமும் நல்ல
வளமிகு ஆற்றல் வேண்டின்
வயது நாற்பதுதான் எல்லை!
இளைஞு!நின் ஏக்கே ஜீக்கே
இதைஇனி நினைத்துப் பார்க்கும்!

வணக்கம்

# 5. திருக்கோணமலை இந்து கல்லூரியில்

(1982-இல் அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கான கலை இலக்கியப் போட்டி திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் நடைபெற்றபோது, திருமலை மாணவன் ஒருவன் பாடுவதற்கு கவிவேழம் எழுதிக் கொடுத்த பாடல் இது. இப்பாடல் மேற்படி போட்டியில் முதல் பரிசை தட்டிச் சென்றது. இதற்கு இசை வடித்தது மிருதங்க வித்துவான் தற்போது கனடா மொன்றியலில் வசிக்கும் திருமலைக் கலைமாமணி ஆனந்த பிரசாத் அவர்கள் )

## தார்மீகம் மலர்கின்றது!

திருவாசல் கதவிங்கு திறக்கின்றது-ஒரு
தெய்வீக உணர்வெம்மை அழைக்கின்றது!
வருங்காலம் நமதென்று உரைக்கின்றது! - நல்
வரலாறு நம்கையில் தருகின்றது!

மலைவானும் மண்மேடும் மகிழ்கின்றது - இன்ப
மழைச்சாரல் மெலவந்து மயக்கின்றது!
அலைபாடி கரை வந்து களிக்கின்றது! - அது
ஆனந்த ராகத்தில் நடிக்கின்றது!

முகில்கூடு மேகத்தை மயில் காண்குது! - அந்த
மகிழ்வோடு மன்றத்தில் நிதமாடுது!
சுகமான இளந்தென்றல் தாலாட்டுது! - இளந்
தளிர்ச் சோலைக் கொடி கொம்பைத் தான் சேருது!

ஆற்றோரம் தனைநாடி மான் செல்லுது - அதன்
அழகான விழிமீனை இனங் காணுது! -
சேற்றாங்கு நண்டென்ன செயல் பண்ணுது - அங்கு
சேர்கின்ற தவளைதன் உறவென்குது!

கனிதூங்கு மரமேனோ களிகூருது! - அதை
குயிலோடும் கிளியோடும் அணில் தேடுது!
மனிதா உன் வாழ்விங்கு ரசமாகுது - ஈழ
மாதா உன் தார்மீகம் மலர்கின்றது!

வணக்கம்

# 6. திருக்கோணமலை இந்துக்கல்லூரியில்... கவிதைப் பட்டிமன்றம்

**தலைப்பு : கம்பனைப் போல் வள்ளுவனைப்போல் இளங்கோவைப் போல பாரதி நிலைப்பானா? நிலைக்க மாட்டானா?**

(1983 இல் திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் அகில இலங்கை கம்பன் கழக ஆதரவில் பாரதி அரங்கில் நடைபெற்ற கவிதைப் பட்டிமன்று. விழாவில் தமிழகத்தில் இருந்து 'கம்பன் புகழ்' திருச்சி பல்கலைக்கழக பேராசிரியர். கம்பவாருதி டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்கள் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டார். இன்றைய கம்பவாருதி ஜெயராஜ், முதலான கம்பன் கழகத்தினர் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்திருந்தனர். வித்துவான் சி. ஆறுமுகனார் தலைமையில் கவிதைப் பட்டிமன்று நடைபெற்றது. கவிபாடிய நண்பர்களில் இன்று ஜேர்மனியில் வாழும் கவிஞர் கோடையிடி குமரன், மற்றும் கணேசராஜா, உதயன் உள்ளிட்ட கவிஞர்கள் பங்கேற்றனர். பாரதி நிலைக்க மாட்டான் என்ற அணியில் கவிவேழம் பாடி அணிக்கு வெற்றி ஈட்டித் தரவே பாரதி தோற்றதான தீர்ப்பு சனங்களிடை சலசலப்பை ஏற்படுத்தியது. கம்பன் இராதாகிருஷ்ணன் சமாதானம் கூறுமுகமாக கம்பனைப்போல வள்ளுவன் போல இளங்கோவைப் போல பாரதிக்கும் தனியிடம் என்று கூறி சபையை சமாதானப்படுத்தினார். மேற்படி கம்பவாருதி இராதாகிருஷ்ணன் அவர்கள் கவிவேழத்தின் கவியாற்றலைப் பாராட்டினார்)

**நிலைக்க மாட்டான்**

நடுவர் என அமைந்த நல்ல தமிழ் பெரியவரே!
விடுகை விடவல்ல என்கவிதைத் தோழர்களே!
கடல்அலையைத் தாண்டி இங்கே
கவி காக்க வந்தவரே!

கடல் அலையாய் காட்சிதரு
கருத்துமிகு அவையினரே!
அனைவருக்கும் என்றன்
அன்பான வணக்கங்கள்!
கம்பனைப் போல் வள்ளுவன்போல்
இளங்கோவைப் போல்...
- இல்லாது
பாரதி நிலைக்கான் என்று
பாடிடப் பணித்தலாலே
பாரதி பாலன்என் பேர்
பாரினில் நிலைக்காது என்று
பகற்கனா காணுகின்ற
பண்புடைத் தோழர்க் கிங்கே
புகட்டுவேன் பகவத் கீதை!
புறப்படும் போருக் கென்பேன்!

கம்பனின் பாடல் என்றால்
காலமே மறந்து போகும்!
வம்பெனும் புதுமை ஆங்கே
வந்து பார் என்றிழுக்கும்!
தம்பியின் பாசம் அண்ணன்
ஆட்சியில் நீதி நோக்கும்!
எம்தலை முறைகட்கெல்லாம்
ஏற்றவோர் பாடம் கம்பன்!

பத்தினிப் பெண்ணைக் காட்டி
பாதத்துச் சிலம்பினாலே
முத்தமிழ் மன்னர் வாழ
முடிச்சுதான் போட்டான் அந்த
நற்றமிழ் இளங்கோ செய்த
நூல் சிலப்பதி காரத்தால்
நித்தியமாக வாழ்வன்
நீணில நிலைக்க மாதோ!

ஊர்தியில் ஊர்ந்தான் சீமான்
உபாலியின் உடல்எங்கென்றே
ஊரெலாம் தேடு திப்போ
உலகினுக்கு உண்மைப் பாடம்!
அளவிறந்து ஆவதெல்லாம்
அழிவினுக் காகத் தானாம்
களவினால் ஆய ஆக்கம்
காட்டினார் செந்நாப் போதார்!

வனத்தினில் வாடும் கோதை
வாட்டமே தவமாம் சீதை
சினமிகு அரக்கர் கூட்டச்
சிறுமையாம் கொடுமைக் குள்ளே
தனதுஉயர் கற்பைக்காத்து
தருமமே வாழச் செய்த
ஜனகனின் பெண்ணாம் அந்த
ஜானகி தமிழர் கன்னி!

பண்பிலே சீதை போல
பழந்தமிழ் வழக்காறு எல்லாம்
கண்ணியன் கம்பன் காட்டி
காலத்தைக் கடந்தே வாழ்வன்!
புண்ணிய வாளன் உங்கள்
பாரதி புதுமைப் பெண்ணை
மண்ணிலே தவழச் செய்தான்!
மாசுதான் தமிழன்னைக்கு!

இன்னிசை புரக்கும் எங்கும்
ஏழுலகு உவக்கும் - அன்புக்
கன்னியர்கூட்டம் அந்த
கற்புயர் சீதை ஆகி
மன்னவர் ராமர் என்ற
மதிப்பில் ஆடவரைப் பேணி
தன்னிகர் இன்றி வாழ
தந்தவன் கம்பன் என்போம்!

தருமதே வதையாய் ஆங்கே
தூதுவன் அனுமன் தன்றன்
அருமைகள் அனைத்தும் காட்டி
அவனிவாழ் இனிமை தேக்கி
ஒருமையோ டளித்தான் - எங்கள்
உயர்கவி கம்பன் என்றும்
பெருமையே தமிழ் அன்னைக்கு
பேச்சினி ஏன்தான் காணும்!

பாரதத்தினில்ஓர் கர்ணன் - இங்கோ
பாசத்தில் கும்பகர்ணன்!
வீரத்தைக் காட்டித் தானும்
விண்ணுலகடைந்தான் - அண்ணன்
சோரன்ரா வணன்என் றாலும்
சோற்றதன் நன்றிக் காக
தாரணி தர்மம் சாற்றி
தன்உயிர் கொடுத்தான் வீரன்!

அரக்கனே ஆனபோதும்
அவனியில் தர்மம் வாழ
வரத்தகு நல்லோர் வாழ்க்கை
வாய்க்கும்என்று இராமன் தன்னை
கரங்குவித்து ஏற்றே நின்றான்
கண்ட வீடணனின் செய்கை
சிரம்தனில் ஏற்கும் தோறும்
செந்தமிழ், ஈழம் வாழும்!

உளவியல் நூல் வல்லார்கள்
உரைத்திடும் உண்மை ஈது!
களத்தினில் நிலையாம் தன்மைக்
கற்பனைத் திடமும் நல்ல

வளமிகு ஆற்றல் வேண்டின்
வயதுநாற் பதுதான் எல்லை!
இளங்கவி மறைந்தான் முப்பத்து
ஒன்பதே வரலாற்றுண்மை!

மனதிலே உறுதி இல்லை
வாக்கிலோ தெளிவும் இல்லை
நினைவதோ தேசத் தொல்லை
நிறைவிலா சுகமும் தொல்லை
தினம்தினம் கவிஞன் கொள்கைத்
திறத்திலே பதற்றம் என்றால்
மனம்திறந் தியம்பல் வேண்டும்
மாக்கவி நிலைக்கான் என்று!

வாழ்வினுக்கு உகந்தஓர் நூல்
வள்ளுவன் ஆக்கித்தந்தான்
வாழ்கிறான் அகிலம் யாவும்
வளமிகு குறளைக் கேட்போம்!- ஆம்
வாழ்கிறான் அகிலம் யாவும்
வள்ளுவன் குரலைக் கேட்போம்!
தோழ் கண்டான் தோழே கண்டான்
தொடர்கவிக் கம்பன், ஆகா
யாழிசைச் சிலம்பால் எங்கள்
இன்கவி இளங்கோ வெல்வான்!

வள்ளுவர் இளங்கோ கம்பன்
வரிசையில் எட்டார் யாரும்
துள்ளியே சொன்னான் உங்கள்
சுதந்திரக் கவிஞன்...
...' யாமறிந்த கவிஞரிலே கம்பனைப்போல்
வள்ளுவன்போல் இளங்கோவைப் போல்,
பூமிதனில் கண்டதில்லை உண்மை வெறும்
புகழ்ச்சி இல்லை!'

வள்ளுவர் இளங்கோ கம்பன்
வரிசையில் எட்டார் யாரும்
துள்ளியே சொன்னான் உங்கள்
சுதந்திரக் கவிஞன், தன்னை
வள்ளுவன் இளங்கோ கம்பன்
வரிசையில் தாசன் என்றே
எள்ளளவேனும் சொல்லான்
எங்களின் ஷெல்லி தாசன் - இல்லை
உங்களின் ஷெல்லி தாசன்!

ஒற்றுமைப் பாலம் போட்டான்
உங்களின் கவிஞன்
'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்!
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்'

ஒற்றுமைப் பாலம் போட்டான்
உங்களின் கவிஞன் - இங்கோ
கத்தியும் துவக்கும் ரத்தம்
கக்கிடும் நிலைதான் இன்னும்!
சத்தியம் தருமம் வாழ
சரித்திரம் படைக்கும் ஆவல்
இத்தரைக்கு இன்னும் இல்லை
என்பதால் கவிஞன் தோற்றான்!

குருவெனக் கொள்ளத் தக்கார்
குவலயத்து ஒருத்தர் அன்றோ!
அருமையாம் கவிஞர் உங்கள்
ஆக்கிய குருக்கள் சொல்வேன்!

மாங்கொட்டைச் சாமிஎனும் குள்ளச்சாமி
மரணபயம் காத்திடுகோ விந்த சாமி
பாங்காக பாவியரின் துயரம் போக்கும்
யாழ்ப்பாணச் சாமியுடன் இன்னும் ஏதோ

ஆங்காங்கே பாடுகிறார் கவிஞர் - அந்த
ஆங்கிலத்து நிவேதிதையைத் தொழுதிட்டாராம்!
போங்காணும் பாரதியார் நிலைப்பார் என்றோ?
பொறுத்திருங்கள் எம்பக்கம் நிலைக்கப்போது!

முத்தமிழ் வேந்தர் ஆட்சி
முறைபடக் காத்தல் செய்ய
அத்தமிழ்க் கவிஞர் மூவர்
அழிவிலாக் கவிதை செய்தார்!
பித்தனைப் போலே ஒன்றைப்
பத்தெனப் புலம்பல் செய்யும்
அத்தகைக் கவிஞன் நாட்டின்
அடிமையாம் அதனால் சொல்வேன்
''ஒரு பேச்சுக்குத் தான்''
பாரதி நிலைத்தல் செய்யான்! - இந்தப்
பயத்தினால்தானே நானோ
பாரதி பாலன் என்ற
பேரினால் மானங் காப்பேன்!

வணக்கம்

# 7. குறுங்காவியம்

## பாருக்குள்ளே வல்ல நாடு!

(16.06.1990 இல் திருமலை கலை இலக்கிய வட்டத்தின் ஆதரவில் திருக்கோணமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில் வெளியீட்டு விழா காண இருந்த கவிவேழத்தின் கவிதைக் கனவுகள் என்னும் கவிதைத் தொகுதி வெளியீட்டுவிழாவில், மேற்படி நூலில் இடம் பெற்றதும், கவிவேழத்தின் குரலினால் படிக்கப்பட இருந்ததுமான இக் காவியம் அன்றைய தாயக சம்பவங்களை உள்வாங்கிய காவியமாக விமர்சிக்கப்பட இருந்தது. அனைவராலும் போற்றப்பட்டது. நாட்டின் அசம்பாவிதத்தினால் வெளியீட்டு விழா இடம் பெறாது போய்விட்டாலும், நிகழ்ச்சி நிரல் அறிவித்தலில் கண்டவாறு விழா நிகழ்ச்சி பற்றிய தகவல் இங்கே ஆவணப்படுத்தப்படுகின்றது.

மேற்படி விழா தலைமையை பிரபல எழுத்தாளரும் கல்வித் திணைக்கள அதிகாரியுமான திரு.க. அருள் சுப்பிரமணியம் அவர்களும், வரவேற்புரையை கலை இலக்கிய வட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர் திரு.சி. சசிகுமார் அவர்களும், நூல் அறிமுகம் தபால் அதிபர் பண்டிதர் க. கனகராஜா அவர்களும், வெளியீடு வட கிழக்கு மாகாண கல்வி கலாச்சார அமைச்சின் பணிப்பாளர் திரு. எஸ் எதிர்மன்ன சிங்கம் அவர்களும், முதல் பிரதி கல்வி அமைச்சின் செயலர் ஈ. ஜே. சற்குணராஜா அவர்களும், சிறப்புப் பிரதிகள் பெறுபவர்களாக, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. பொ. ஜெகதீஸ்வரன் அவர்களுடன், செயலர் நகராட்சி மன்றம் திரு. பெனடிக்றதாசீசியஸ், திருக்கோணமலை வைத்திய அதிகாரி ஞானகுணாளன், சர்வோதயம் இயக்குனர் திரு. அ. சிவலோகநாதன (பி) அவர்களும், நூல் விமர்சகர்களாக தாபி. சுப்பிரமணியம், திருமலை சுந்தா, க. கோணணேஸ்வரன், திருமலை நவரம், சட்டத்தரணி பா. ஜெயபாலன், சட்டத் தரணி கே. இராஜகுலேந்திரன் அவர்களும் ஊக்கம் அளிப்போராக புரவலர்களும், நண்பர்களுமாக திருவாளர்கள் ரவிச்சந்திரமோகன், இரா. கலியுகவரதன், கவிஞர் கோப்பாய் சிவம், இந்து இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்த சிவபாதசுந்தரம், திருமலை

சுந்தா, மைக்கல் கொலின், செல்வரெத்தினம், திசையசிங்கம், சித்தி அமரசிங்கம், எஸ். உதயகுமாரன், சி. ஜீவானந்தம், டாக்டர். ராஜா, திரு.கா. இரத்தினலிங்கம், மயூரன்ஸ் ராஜக்கோன், ஜெயம்ஸ் ரஞ்சன், பற்குணம் ஆகிய அனைவரும் ஒருங்கிணைந்து விழாவினைச் சிறப்பிக்க இருந்தனர்.

வீணைக் கச்சேரியுடன் விழா ஆரம்பமாக இருந்தது.

இராணுவ கெடுபிடியால் அனைவரும் நகரை விட்டு இரவோடு இரவாக வெளியேற வேண்டிய சூழ்நிலையால் மேற்படி நூல் வெளியீடு தடைப்பட்டது. நிகழ்ச்சி நிரல் அறிவிப்பை பிரபல எழுத்தாளரும் ஓவியருமான தாபி. சுப்பிரமணியம் அவர்களால் ஓவிய வடிவில் வடிவமைக்கப்பட்டு கல்லச்சில் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது. மேற்படி விழாவில் விமர்சிக்கப் பட இருந்த புகழ் பெற்ற காவியம் இங்கே இடம் பெறுகின்றது.

## முன்கதை...

ஓர்அகதி மேற்குலகு வந்து சிறு தீவு ஆன தனது நாட்டு நிலவரத்தை ஒரு கவிதை மூலம் வெளிப்படுத்தி தனக்கு அகதி அடைக்கலம் வேண்டும் என்று கோரல்.
அகதியின் அந்தக் கவிதை மேற்குலக மொழி ஒன்றில் மொழி பெயர்க்கப்பட்டு அவர்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படல்.

அகதியின் அதே நாட்டைச் சேர்ந்த புண்ணிய மூர்த்தி அகதியாக இல்லாமல் ஏற்கெனவே வந்து பட்டம் பெற்று புகழ் பெற்ற விஞ்ஞானி ஆகிக் கொண்டவர். அவரது ஐரோப்பிய உதவியாளர் வழியாக அந்த அகதிக்கவிதை அவருக்கு எட்டி' அவமானத்தை ஏற்படுத்துகிறது.

அவரது பெற்றோர் கடிதம் அவருக்கு ஊர் நினைவைத் தூண்டுகிறது. பெற்றார் ஊரிலே குண்டடிபட்டு இறந்து போன செய்தி கூட விஞ்ஞானிக்கு சில மாதங்களின் பின்னர் தான் கூறப்படுகிறது. சுதந்திரம் இல்லாத கட்டுக்காவலுடன் கூடிய அவரது மேற்குலக விஞ்ஞான வாழ்வு உலக வாழ்வை வெறுப்படையச் செய்கிறது. அழிவு சாதனங்களை ஆய்வினால்

கண்டுபிடிக்கும் அவருக்கு, தனது பெற்றோர் ஊரிலே இறந்தசெய்திகூட தாமதமாகக் கிடைத்தமை அவரை நோகவைக்கிறது. அழிவு சாதனங்களை ஆக்கும் தனது கண்டுபிடிப்பால்தான் உலகிலே அத்தனை அவலம் என்ற எண்ணம் அந்த விஞ்ஞானிக்குப் பிறக்கிறது. சந்திர மண்டலத்தில் வீடுகட்டி வாழலாம் என்ற ஆய்வு வரை வந்த விஞ்ஞானியான அவர் ஆன்மா பெற்றவர் மறைவின்பின் ஆன்மிகம் நாடி சிந்திக்க ஆரம்பிக்கிறது. மூடமை என்று கருதப்பட்டவை அனைத்தும் அவருக்கு நம்பிக்கை என இப்போது ஆகிக்கொள்கிறது.

தனது ஆற்றலை இறைவன் தருகிறான் என்பதான ஆறுதலூடாக அவர் தனக்கு தோன்றும் கனவுகள் மீதும் நம்பிக்கை வைத்து அந்தக் கனவின் அடிப்படையில் தனது பெற்றார் அகதி முகாமில் வந்திருப்பதாகக் கருதி மறுநாள் அகதி முகாம் செல்கிறார். அங்கே தஞ்சமானவர்களில் ஒரு இயக்க போராளியே முதலில் தென்படுகிறான். அவன் தான் எப்படி அகதியாய் வந்தான், முன்னர் தான் கையாண்ட போர் உபகரணங்கள், மூத்தவரை கனம் பண்ணும் காலம் போய் தங்களைக் கனம் பண்ணும் காலம் தோன்றி விட்டமை பற்றிதெரிவிக்கிறான். அவனது வார்த்தை ஊடாக தான் முன்பு பார்த்த பழைய இனிய ஊர் மறைந்துவிட்டதான அச்சமும் வேதனையும் அவரை குழப்புகிறது. தனது கண்டுபிடிப்புகளாலேயே இத்தனை அவலம் என்றதான எண்ணம் விஞ்ஞானிக்குக் குற்ற உணர்வாகிறது. முகாமில் உள்ளவர்களை எட்டிப்பார்க்கிறார். கனவிலே கண்டதுபோல அங்கே இவரது பெற்றவர் இல்லை. ஆனால் அந்த மேற்குலக அகதி முகாமில் இருந்தவர்கள் கூட்டுப்பிரார்த்தனையில், தங்கள் நாடு நிம்மதியில் வாழவேண்டும் என்பதாகவே... முகாமை விட்டு புதிய சிந்தனையுடன் அந்த விஞ்ஞானி வெளியேறி தனது ஆய்வு கூடம் அமர்ந்து, ஏதோ கண்டுபிடிப்பு செய்து அதனுடன் மேற்குலக நாட்டை விட்டு ஓடிப்போகிறார்... அவரை அந்த மேற்குலக நாடு தேடுகிறது. அவரைதேடிக் கண்டுபிடித்துத் தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும் என்பதாய் பத்திரிகை தெரிவிக்கிறது. அவர் கண்டுபிடித்த புதிய சாதனம் என்ன? இனிப் படியுங்கள்...

## பாருக்குள்ளே வல்ல நாடு!

**அகதியின் கவிதை**

`அந்தஓர் தீவில் இன்று
அவலமே மரணஓலம்
எந்தஓர் நாளும் கேட்கும்!
எதிரிகள் தமக்குத் தாங்கள்!
இந்தஓர் நிமிடம் மட்டில்
இருபது முடிந்திருக்கும்!
சொந்தஊர் மட்டும் என்ன?
சொந்தமே ஐந்து தேசம்!

ஐந்தெனப் பங்குபோட்டு
ஐக்கியம் இன்றி நாளும்
சொந்தத்தைக் கொல்லுகின்றார்
துரோபதிப் பெண்ணைச் சேர
அந்தஓர் முறைமை நீங்க
ஐவரும் வரும் தங்கள் பக்கம்
வந்திடென் றிழுக்கின்றார்கள்!
வழுகியே நழுவும் ஆடை!

ஆடையே ஏதும் இன்றி
அலறும் அப் பெண்ணைக் காணும்
காடைதுச் சாதனன் தன்
கைவலி போனது என்றே
தாடையைத் தடவிக் கண்ணால்
தன்பசி ஆற்றுகின்றான்!
பாடையோ பாஞ்சாலிக்கு?
பாண்டவர் மானம் போச்சே!

மானத்தை காவல் செய்யும்
மாதவன், பாஞ்சாலிக்கு
வானத்தை கருமை ஆக்கி
வழங்குவன் ஆடை - அந்தோ
ஈனதுச் சாத னர்க்கோ
இலகுவாய்ப் போயிற் றாங்கே! - தீவின்
வானத்து இருளுக் குள்ளே
வகுத்த பாண்டவரோ ஆறு!

...' தீண்டுதுச் சாதனர்தம்
தீமைகள் சகிக்க மாட்டோம்!
பாண்டவர் அறுவர்ஆகப்
பாரதம் மாற்ற மாட்டோம்!...'
வேண்டுமென்று அறுவர் ஆக்கி
வேதனைக் குமுறல் தேக்கும்
பூண்டுகள் ஒழிக்கும் கீதை?
புரட்சியாய்க் கேட்கு தங்கே!

...' இந்தஓர் நிமிடம் மட்டில்
இருபது முடிந்திருக்கும்!
சொந்த நாட்டு எல்லைக் குள்ளே
சுதந்திரக் காற்றா வீசும்?
சிந்தைகள் நோவோர் ஆனோம்!
சிதறினோம் திசை பிரிந்தோம்!
இந்தஓர் அகதிக்கு இங்கே
இடந்தர வேண்டும் சாமி!...

**மேற்கிலே தாயக விஞ்ஞானி!**

அகதியின் கவிதை ஒன்றின் - அந்த
ஆங்கிலப் பெயர்ப்பின் ஆழம்
சகதியில் நிற்கச் செய்தே
சவுக்கினால் அடித்தாற் போலும்!

மிகமிகக் கலங்கிப் போனார்!
மேற்கில் இங்கு என்றோ வந்தார்!
செகமதைத் திகைக்கச் செய்யும்
தீரராம் விஞ்ஞானத்தில்...

**விஞ்ஞானியின் உதவியாள் கிண்டல்!**

... "குடிபெயர்ந்தோனின் இந்தக்
குழம்பிய இதிகாசத்தை
நடித்திட கொலிவூட்டார்கள்
நல்லதோர் தீவும்தேடி
பிடித்திடப் படத்திற்கென்றே
பெரியதோர் திட்டம் போட்டு
கடிதினில் கிளம்பப் போறார்
காத்திருக்கின்றார் ஐயா!..."

**விஞ்ஞானி வெட்கம்!**

பேச்சுடன் பேச்சாய் அந்த
பீற்றராம் உதவியாளன்
கூச்சலாய் சொன்னான் செய்தி
குறுகியே போனார்ஞானி!
ஏச்சுப் பேச்சு!, உலகத்தாரின்
ஏளனப் பார்வை!, அந்தோ!
போச்சடா மானம்! என்றே
புலம்புறார் புண்யமூர்த்தி!

**புண்ணிய மைந்தன்!**

புண்ணியம் வாழ என்றே - தங்கள்
புதல்வனின் நாமம் தன்னை
புண்ணிய மூர்த்தியாகப்
பொலிவுறச் சூட்டி, அந்தக்

கண்ணியப் பெற்றோர் இட்ட
கல்வியால் உயர்ந்தோன். இங்கே
விண்ணிலே பறந்தே வந்தான்
விவேகவிஞ்ஞானி ஆனான்!

புண்ணிய மூர்த்தி செய்த
புதுப் புது விஞ்ஞானத்தால்
புண்ணியம் பாவமாச்சு!
புறப்படும் படைகட்கெல்லாம்
எண்ணிய வெற்றி எய்தும்!
'எங்கள் விஞ்ஞானி மிஸ்ரர்
புண்' எனப் புகழ்வார் இங்கே! - ஒரு
'புண்' என நோவார் ஞானி!

**சுதந்திரச் சிறை...**

சொந்தவோர் விடயம் என்பார்
சுதந்திரம் தேவை என்பார்
இந்தஊர் மாந்தர் வாழ்வை
இனிதுறக் களிக்க, இங்கே
வந்தஎம் ஞானி மட்டும்
வகைஎன மாட்டிக் கொண்டார்!
இந்தவிஞ் ஞானிக்கு இங்கே
இருக்குதே கட்டுக்காவல்!

**காலம்தப்பிய தகவல்...**

ஐந்துஆண் டான போதும்
அந்தஓர் செய்தி. இன்னும்
இந்தவிஞ் ஞானிக் கிங்கே
இதயத்தைக் கொன்றே தின்னும்

சொந்தஊர்ச் செய்தி ஒன்றை
சொல்லினர் மாதம் மூன்றில்!
அந்தஓர் கணத்தில் ஞானிக்கு
அனைத்துமே வெறுத்துப் போச்சு!

**பெற்றவர் கடிதம்...**

... நேரிலே வாடா கண்ணே
நினைவெலாம் நீயே!- உன்னைக்
காரிலே வருதல் போலக்
கனவெலாம் கண்டோம் ராசா!
யாரினி எமக்கு ஐயா!
ஏன்பதில் போடா யாமே
ஊரிலே உனக்கா கத்தான்
உயிருடன் வாழுகின்றோம்!

எத்தனை நோன்பு நோற்றோம்
எதையெதைத் தின்று தீர்த்தோம்!
உத்தம புதல்வன் வேண்டி
உண்மையில் தவமே சேர்த்தோம்!
சித்தமே மகிழ்ந்து துள்ள
சிவன்அரு ளாலே வந்தாய்!
வித்தக! ஞானம் ஊரில்
விளங்கும் உன் கனவும் கண்டோம்!

பதினாறு பெற்றால் தானே
பெருவாழ்வு என்பார் உண்மை!
பதினேழு பதினெட்டு ஆகி
பெரும்பான்மை ஆளுது எம்மை
விதிகூட எங்கள் சாதி
விளங்கிடா வகையில் ஏதோ
சதிகள்தான் செய்யுதாமோ?
சந்ததி குறைவே நாங்கள்!

தறியிடும் நூலைப் போல
சேலையும் தாயைப் போல
நெறிஇடும் பிள்ளை என்றே
நேர்த்தியாய்ச் சொன்னார் அன்று!
வெறிகுடி இல்லாப் பெற்றோர்
வம்சமே தாறுமாறாம்!
மறிகடா ஆதல்போல
மைந்தனே நடக்குதிங்கே!

எங்களின் மைந்தன் மட்டும்
இதில் விதி விலக்காம் என்றே
இங்கெலாம் உள்ளோர்க்கேநாம்
இராப்பகல் எடுத்தே சொல்வோம்!
தங்கமே! கல்யா ணத்தால்
தக்கலர் பெண்ணைத் தேர
இங்குநீ வருதல் வேண்டும்!
இல்லறம்நடத்தல் வேண்டும்!

பிள்ளையே இல்லை என்னும்
பெரும்பழி தீர, என்றும்
கொள்ளையாம் இன்பம் சேரக்
குவலயத் துதித்த மைந்த!
வெள்ளையர் பெண்ணே வேண்டாம்!
விளக்கிட வீட்டிற்கேற்ற
கிள்ளையே வேண்டும்! வம்சம்
கிருக லட்சுமியால் தோன்றும்!

இருபது வருடம் ஆச்சு - உன்
இன்முகம் மறந்தே போச்சு!
ஒருதரம் வருவேன் என்றே
ஒருபதில் போடாயாமே!
வருத்தமும் வயதும் ஏற
வாழ்க்கையே பாரமாச்சு!
அருமையாய்ப் பெற்ற மைந்த
அழுகிறோம் .பறந்தே வாராய்!

**ஒப்பம் மட்டுமே...**

இப்படிக்கு உன்னைப் பெற்ற
ஏரம்ப மூர்த்தி என்றே
ஒப்பமும் இட்டே அன்று
அனுப்பிய கடிதம் என்றும்
செப்பிட உறவு செய்ய
ஷெல்பிலே இன்றும் உண்டு
அப்புவோ இன்றைக்கில்லை
ஆச்சியும் அங்கே இல்லை!

**புண்ணியம் பாவம்...**

செப்பும்என் விஞ்ஞானத்தால்
சிறந்ததிந் நாடு. இங்கே
எப்படி எல்லாம் கண்டேன்
எதையெதைச் சொன்னேன்!, ஐயோ!
இப்படி உயரும் நாட்டிற்கு
இராப்பகல் உழைத்த நானே
எப்பிறப்பினிலே காண்பேன்
எந்தனின் பெற்றோர் தம்மை!

ஆச்சியும் அப்புவும் ஊரில்
அங்குஓர் ஷெல்லினாலே
பூச்சிய வெளிக்குப் போனார்!
புண்ணயர் புலம்பல் ஆனார்!
தீச்செயல் புரிந்தேன், எந்தன்
தெய்வதப் பெற்றோர் தங்கள்
மூச்சது போகச் செய்த
மூர்க்கம் என் விஞ்ஞானந்தான்!

அழிவுசா தனங்களாலே
அவனியில் உயரும் நாடாய்

பழிகளைச் சுமந்தே வாழும்
பண்பிலார் குழுவில், நான்போய்
இழிமகன் ஆனேன் ஐயோ!
இனியஎன் பெற்றோர்க் கீந்தேன்!
பழிஎனும் படையல் அந்தோ!
புண்ணியம் பாவ மாச்சு!

ஞானமார்க்கம்...

கிண்ணத்து மதுவும், கையில்
கோழிறோஸ் (ற்) துண்டுமாக
எண்ணத்து மீதிஎல்லாம்
ஏற்றஆய்வாளரோடே
விண்ணதில் வீடுகட்டும்
வித்தைகள் மொழிந்த ஞானி
புண்ணிய மூர்த்தி, பெற்றார்
போனபின் மாறிப் போனார்!

தரமிகு தந்தை தாயைத்
தாய்த்திரு நாட்டை விட்டே
நரகத்தை மோட்சம் என்னும்
நாட்டிற்கு ஏன்தான் வந்தேன்?
கரமது குவித்தே ஏற்றே
கடவுளர் நூலில் இன்று
சரணம்என் றானார் ஞானி!
சஞ்சலம் தீரப் பேணி!

ஞான விளக்கம்...

வேதியல் பயிற்சி யோடே
வேதநூல் பயிற்சி வேறாய்
மீதிநாள் பொழுதில் ஏதோ
மேன்மைகொள் நிறைவே சேர,

`ஓதிய வண்ணம் இந்த
உலகதன் இயக்கம் அந்த
வேதியன் இறைவனாலே
விளங்குமாம்!' என்பார் ஞானி!

சிவநட னத்திற் கேற்ற
சிந்தையே ஆய்வு கூடம்!
தவமெனும் விஞ்ஞானத்தை
தருவதால் மனித னாலே
அவனியில் புதுமை ஒன்றும்
ஆவதே அல்ல என்பார்!
உவமையில் உலகை, ஊரை
உண்மையை இறைவன் என்பார்!

அதிசயம் மட்டும் அல்ல
அருளதும் காட்டும் உண்மை!
விதிவசம் மட்டும் அல்ல
விண்ணவர் தலைவன் தானே
புதியதும் காண்பிப் பானாம்!
புன்மையர் எங்கட்கெல்லாம்
அதியுயர் ஆய்வின் உண்மை
அளிப்பவன் இறைவன் அன்றோ!

அத்தகைத் தெய்வத்தாலே **கனவு நனவாகுமா?**
அவனியில் தந்தை தாயை
வித்தையால் பெறலாம் என்றே
வணங்கிடும் விஞ்ஞானிக்கு
மெத்தைமீது உறக்கம் மேவ
மிதந்ததோர் கனவு, ...ஆகா
பெத்தவர் அகதிக் கேம்பில்!... -ஞானி
புறப்படப் போறார் காலை!

**அகதி முகாமில் அகதிப்போராளி!**

எஸ்எம்ஜி எல்எம்ஜி ரூநோட்ரூவும்
எஸ்எல்ஆர் எம்சிக்ரின் ஜீகே இன்னும்
...ஜெஸ் ஓக்கே.. ஜீதிரியும் ஏக்கே fபோட்டி
செவிண்உடனே உண்டின்னும் ரீயில் fபிப்ரி
ஸிக்ஸ் உடனே ரீ எயிற்றி வண்ணும் உண்டு!
சிறப்பான றொக்கற்று லோஞ்சர் உண்டு!
எக்ஸ் வைசற் முடிப்பதற்கே கற்றோம், ஆனால்
ஏட்டினையோ தலைகீழாய்ப் பிடித்திட்டோமே!

ஒன்றிருந்து ஒன்றுதாவி
ஒன்றுமே வேண்டாம், நின்றால்
கொன்றிடப் போறார் என்றே
குழம்பி ஓர் அகதியான
கென்றியாம் இயக்கப் பேராம்!
கேம்பிலே இங்கே வந்தே
ஒன்றிய இளைஞன் சொன்ன
உண்மையால் உறைந்தார் ஞானி!

**போராளியின் ஆவேச விளக்கம்!**

... என்னநீர் பயந்திட்டீரோ
எங்களைக் கண்டே ஊரில்
சின்னஓர் பையன் கூட
சிறப்புடன் ஆடும் ஆட்டம்
என்னவென்று எண்ணி உள்ளீர்!
எல்லெம்ஜி ஏக்கே டுப்டுப்
முன்னரைப் போலே அல்ல
மூத்தவர் பணிவார் எம்மை!

என்னைஓர் தலைவன் போல
ஏற்றஓர் பதவி தந்தால்
ஒன்றிருந்து ஒன்று தாவி
அகதியாய் வந்தே சேரேன்!

தொன்று தொட்டு எங்கள் மக்கள்
தொடக்கிய கதையே நாங்கள்!
தன்னிகர் மானம் தேடி
தப்பிநான் சென்றேன் ஓடி!

தப்பிநான் சென்ற கூட்டம்
தறிகெட்டகூட்டம் பாரும்
தப்பிநான் ஏதும் சொன்னால்
தலையுடன் வாலும் வைப்பர்
எப்பவும் சந்தே கந்தான்
என்னைஓர் இளப்பம் ஆக்கி
செப்புவர் ஸென்றிக் காவல்
செய்திடத் தெருவில் நிற்பேன்!

தெருவழி முன்னாள் தோழர்
சிறுமையாய்ப் பார்த்தே செல்வர்!
அருவருப் பாகக் காறி
உமிழுவர் கானில், எந்தன்
உருவமே மாறிப் போன
உணர்வினால் கலங்கிச் சோர்ந்தே
ஒருத்தரும் வேண்டாம் என்றே
ஓர்புது அமைப்புச் செய்தேன்!

செய்தஎன் அமைப்புக் கூடச்
சீர்பெற வில்லை, என்னை
மெய்யிலே தலைவன் என்றே
மதித்திட வில்லை, சேர்ந்த
பொய்யர்க ளாலே ஊரில்
பொடியன்கள் பேரே போச்சு!
தெய்வமே மன்னிக் காது!
திகைத்திட வேண்டாம் சொல்வேன்!

ஆட்களைக் கடத்தல் செய்வோம்!
　　　　ஆடுபோல் வெட்டிச் சாய்ப்போம்!
நாட்களைக் கர்த்தால் ஆக்கி
　　　　நகரத்தை நாறவைப்போம்!
வேட்டதன் ஓசை காட்டி
　　　　வழிப்பறி புரிவோம், ஊரில்
வீட்டதன் சொந்தச் சண்டை!
　　　　வீதியின் பிணமாய்ச் சேர்ப்போம்!

சேர்த்தஅப் பிணத்தில் ஏதோ
　　　　செய்ததென்று எழுதி வைப்போம்!
பார்த்தவர் பதற எங்கள்
　　　　பலத்தினை வளர்த்தே வைத்தோம்!
ஊர்த்தெரு மனையில் உள்ளோர்
　　　　உடமைஎம் உரிமை செய்வோம்!
கார்கள் பஸ் லைசன்ஸ் வேண்டாம்!
　　　　கண்டவாறு ஓட்டுவோம்நாம்!

வீதியில் விபத்து நேர்ந்தால்
　　　　விளக்கமும் தருவோர்நாங்கள்!
பாதியில் படைத்தோன் தொண்டை
　　　　பகற்கொள்ளை புரிவோர் நாங்கள்!
தேதியும் தருவோம்! எம்போல்
　　　　தேர்ந்தஓர் தர்மன் யாரும்
ஆதியில் கூட அல்ல
　　　　ஆரம்பம் முடிவும் நாங்கள்!
('தர்மன், யமதர்மன்')

## தப்பிய அகதி!

தங்களின் பெயரைச் சொல்லி
　　　　தனிப்பிழை புரிந்திட்டாராம்!
எங்களின் பொடியள் மூவர் - காணோம்
　　　　எவன் வந்து கடத்தினானோ?

அங்கினி இருந்தால் தொல்லை!
ஆதலால் அனைத்தும் விட்டேன்.
இங்கொரு அகதி ஆனேன்
இத்தனை சொன்னேன்! போதும்!

**விஞ்ஞானி விறைத்தார்!**

அன்னைதந் தையரைக் காண
அகதிகள் கேம்பில் வந்தார்
முன்னைய கனவே உந்த
மூத்த விஞ்ஞானி புண்ணார்
சின்னவோர் இளைஞன் கென்றி
செப்பிய கதை களாலே
'அன்றைய ஊரே போச்சு!' என்று
அச்சமே கொள்ளல் ஆனார்!

**ஊர்ச் சிறப்பு**

வானம் பார்க்கும் சோகப் பூமி!
வாய்க்கால் ஓரம் மண்டூ கத்தின்
கீதம் கேட்பதோ கார்த்திகை மார்கழி
காலம் அறிந்தே கடுகியே விரையும்
மண்ணின் மைந்தரின் மகத்துவம் மிளிரும்!
தென்னையும் பனையும் திரள் திரளாக
ஓங்கி வளர்ந்தே உச்சியைத் தொடுதல்
ஏங்கும் அன்னை பூமியின் அவலம்
ஏனென்று அறியும் இலட்சியம் தானாம்!
இனிய கழனிகள் இதுவெனக் கூற
இடுப்பை ஒடித்தே இராப்பகலாக
கலப்பை பிடித்தே கால்நடை மலத்தை
கைகளில் பிசைந்தே கதிரெனும் செந்நெல்
குடலையாய்த் தோன்றி குனிந்துடல் வணங்க
அடடா அழகென்று ஆனந்திக்கும்

மண்வளம் காக்கும் மானிடர் பூமி!
உணவது இன்றியும் ஒருகணம் வாழலாம்
உடையது இன்றியோ மறுகணம் மாள்வுதான்!
உடலதன்மானம் உடையினில் அன்றோ!
கடலெனும் நீலக் கற்றையை நெய்தே
அன்னை பூமிக்கு இயற்கையே உடுத்த - உலகம்
என்னே அழகு என்றே வியக்கும்!
எத்தனை பூமிகள் பொறாமையில் சபிக்கும்!
சித்தம் மகிழ சிரிப்பலை ஒலிக்க
அன்னை பூமியின் அணைப்பினில் துயிலும்
சின்னக் குழந்தை சிலிர்த்தெழுந்து அன்னாள் ஆடையை
விலக்கி அமுதம் பருகலாய்
வாடைக் காற்றில் வள்ளம் அமர்ந்தே
கடல்படு திரவியம் கரையினில் சேர்க்கும்
விடலைகள் மலிந்த வளமிகு ஊராம்!
உடலதன் வலிமை! உளமதன் உறுதி
உத்தம பூமி இதுவென உணர்த்தும்!
தொழிலாளர்தம் தொண்டுகள் எல்லாம்
அழியாச் சின்னம் அன்றைய குடிகளின்!
சின்னத் தனமுள சிறுமதி யாளரோ
சின்னமேஅன்று அதைச் சாதி என்று அளப்பர்!
ஆன்ம நேயம் பயின்றவர் உள்ளம்
மேன்மை உறவே மக்களை நோக்கும்
அத்தகு சாதிகள் அமைத்த அவ்வூரில்
அறிஞர் பல்லோர் உதித்தனர், வாழ்வின்
நெறிமுறை நல்கினர், நானிலம் எங்கும்,
ஊரின் புகழே ஒலித்திட, ஆளும்
பேரின வாதிகள் புழுங்குவர் உள்ளம்!
பழிபாவத்தை பயந்துஉளம் சபிக்கும்
பண்புள்ள மக்கள் பயிலு நல்லூரில்
தண்ணீர் அருந்தவே தத்துவம் பிறக்கும்!
புண்ணியம் வேண்டும் பிறந்திட ஆங்கே!

**ஊர்இழப்பு...**

முட்புதர் மூடி முழுமையை மறைக்கும்
முகப்பிடு ராச்சிய சின்னம்!
கட்புலன் காணக் கருத்துடன் பேணா
கரிசனை ஆள்பவர் வஞ்சம்!
திட்டமிட் டெங்கள் திருமொழி பறித்தே
தீங்குகள் புரிவது சகியாத் - தமிழ்
கட்டிளங் காளை கருத்துகள் மாறி
கண்டவாறு அலைவது சரியா?

அன்பெனும் பாசச் சங்கிலி தூக்கி
அனைவரும் பிணைந்திடல் அறியாத்
துன்பமும் சாவும் தொடர்ந்திடச் சனங்கள்
தோல்விகள் காண்பது சரியா?
தன்பெரு மானம் தரணியில் நீத்தே
தடிஅடி படுவது முறையா?
கென்றிகள் போடும் ஷென்றி களாலே
கேவல மாவது மொழியா?

**பாவ வினை; விஞ்ஞானி புலம்பல்**

'முற்பகல் இங்கே கண்டேன்
முழுமைவிஞ்ஞானம் சொன்னேன்!
பிற்பகல் விழையுது அங்கே
பிழையெலாம் என்னால் தானே!
கற்களைக் கொண்டே வாழ்ந்த
காலத்தின் அமைதி போச்சு!
புற்களும் பூண்டும் அல்லோ
புதுயுக வீரம் ஆச்சு!'

'இதயமே இல்லா இந்த
இயந்திர மனிதர் நாட்டில்
புதையலாய்ப் போனேன் ஏதோ
புதுமைகள் செய்தேன், ஞான

உதயமே எந்தன் ஊரின்
உந்துகைப் பிடிமானந்தான்!
இதயமே இல்லா ஊராய்
இன்றெனது இன்னூர் போச்சா?

எந்திர வழியில் இங்கே
எதுவித ஓய்வும் இன்றி
சந்திர வழி ஆராயும்
சாதிகள் ஆவல் எல்லாம்
தந்தையை விஞ்ச வேண்டும்!
சரித்திரம் திருத்த வேண்டும்!
பந்தமோ பாசம் இன்றி
பாரினை ஒழித்தல் வேண்டும்!

அழிவுசா தனங்க ளாலே
அகிலத்திற்கு அச்சம் காட்டும்
பழிகளின் படைப்பிற்கு ஏற்ற
பங்களிப் பாளன் நானா?
விழிகளில் கண்ணீர் சோர
விம்மிடும் விஞ்ஞானிக்கு
பிழியுதே இதயம் தன்னைப்
பிரார்த்தனைப் பாடல் ஒன்று!

**பெற்றவர் மட்டும் இல்லை**

ஐம்பதுக்கு அதிகம் ஆனோர்
அகதிகள் கேம்பின் உள்ளே
மெய்மையோ டமர்ந்தே சேர்ந்து
வேதனை மொழியும் பாடல்!
பொய்மையாய் கனவாய்ப் போனார்! - அங்கே
புண்ணவர் பெற்றோர் இல்லை
தெய்வத்தைக் கேட்டாற் போன்று
தாழமும் பாட்டும் கேட்கும்!

**தாழமும் பாட்டும்!**

காட்டேரி கலைந்தோட வேண்டும்! - ரத்தக்
காட்டேரி கலைந்தோட வேண்டும்! - அந்த
பேயோட்ட பூசாரி வேண்டும்! வேண்டும்!!
காட்டேரி கலைந்தோட வேண்டும்!

வீடெங்கும் விளக்கேற வேண்டும்! - உள்
வில்லங்கம் பறந்தோட வேண்டும்!
நாடெங்கள் நலம் காண வேண்டும்! - அங்கு
நாமெல்லாம் உறவாட வேண்டும்!

கற்றஒரு மேதைக்கிடம் இல்லை - அங்கே
கண்கண்ட தொண்டருக்கும் தொல்லை!
பள்ளி செல்லும் பிள்ளைகட்கும் தொல்லை - இது
காட்டேரி வீறு கொண்ட எல்லை!

காட்டேரி கலைந்தோட வேண்டும்! - அந்தப்
பேயோட்ட பூசாரி வேண்டும்! வேண்டும்!!
காட்டேரி கலைந்தோட வேண்டும்!

**பூசாரியை தேடும் விஞ்ஞானி!**

`ஆவேசம் வந்துற்ற பூசாரி போல் ஆங்கே
ஆகாகா என்றாட வேண்டும்! - ஒரு
அழகான வெண்கோழி அரைப் போத்தல் சாராயம்
அடுக்காக எனைக் கேட்க வேண்டும்!

நீவேசம் போட்டாலும் நெஞ்சத்தில் தவறில்லை
நினைவுக்குள் சுகம் ஒன்று தோன்றும்! - அந்த
நிறைவான எண்ணத்தில் சிறுபிள்ளையாய் மாற
நான்கண்ட நாடிங்கு தோன்றும்!
- ஒரு

பூவாசம் தரும்போது புளகிக்கும் நினைவொன்று
புரியாத இன்பத்தை ஊட்டும்! - அந்த
பூ ஒன்று செய்கின்ற புரியாத கதைபோல
பூசாரி உடன் தோன்ற வேண்டும்!

சாவாசம் செய்கின்ற தாய்நாட்டு சங்கதி
சற்றேனும் பறந்தோட வேண்டும்! - இவர்
சஞ்சலம் தீர்த்திட பூசாரியானவர்
சொல்வதை நான் செய்ய வேண்டும்!

**கடமைவீரர் விஞ்ஞானி!**

அகதி முகாமில் உள்ளவர் எல்லாம்
அப்புவும் ஆச்சியும் ஆனார்!
சகதியில் நின்றே நீங்கினராகச்
சஞ்சல ஞானி எழுந்தார்!
அகத்தனில் ஏதோ அதிசயம் தோன்ற
அவசர மாக விரைந்தே
சுகத்தினை மறந்தே ராப்பகலாகச்
சோதனைக் கூடம் அமர்ந்தார்!

**விஞ்ஞானியை காட்டித் தர சன்மானம்!**

... விதிமுறைகள் விஞ்ஞான உலகிற்கு ஈந்தே
வியப்பில் எமை ஆழ்த்திடுபேர்
அறிஞன் எங்கே?
சதிகாரரர் தாம் கடத்திச் சென்றிட்டாரோ?
சங்கதியே தெரிந்தவர்கள்
தொடர்பே கொள்க!

அதி உயர்ந்த சன்மானம் அரசே நல்கும்!
அவர் சேவை எம்நாட்டுத்
தேவை ஆகும்!
புதிதாக தாம் கண்ட ஆய்வும் கொண்டே
போய் மறைந்தார் பெயர் டாக்டர்
புண்ணிய மூர்த்தி! ...

**விஞ்ஞானியர் குழப்பம்!**

இறுதியிலே புண் கண்ட விஞ்ஞா னத்தால்
இவ்வுலகம் ஈடாட்டம்
கொள்ளும் என்றே
அறுதியிட்டுக் கூறிடலாம்:. அவ்விஞ்ஞானி
ஆக்கிய அச் சாதனத்தை
எதிரார் நாட்டின்
எல்லைஎனும் நாற்றிசையில் பொருத்திக் - கையால்
ஏற்றஒரு தன்னியக்க கருவி கொண்டே
சொல்களத்திற்கு அப்பாலே சென்றே நின்று
சொன்னபடி இயக்கிடில் ஊர்
ஈடாடிப் போம்!

ஊர்த் துடிப்பே ஒருகணம்பின் அடங்கிப் போகும்
உல்லாச வாழ்க்கை எலாம் ஒடுங்கிப் போகும்!
போர்த்துடிப்பு கொண்டவரோ அஞ்சிப் போவார்!
பூமியதன் ஈடாட்டப் பிரதேசத்தை
ஓர் கணத்திற்கு அப்பாலே சென்று பார்க்கில்
உறைந்திடுமே ரத்தமெலாம்
ஊர் இல்லாது
வேர் மரங்கள் கட்டிடங்கள் அமுங்கிப் போகும்!
வெறுமை உள்ள பாலை எனக்
காட்சி சொல்லும்!

(முற்றும்)

# III. ஐரோப்பிய நாடக அரங்கிலே...

## 1. நெஞ்சினிலே சுமந்து

(கவிதா இசை நாடகம்)

ஈழத்தின் போர்க்காலச் சூழலால் அநாதரவாக டென்மார்கில் புலம்பெயர்ந்த சிறுவனின் கதை. குறுந்திரைச் சித்திரமாக வெளிவரவுள்ள இது, 27.05.2007 இல் கொல்பேக்கில் உள்ள நாடக அரங்கிலே நாடக மேடை வடிவில் அரங்கேறியது. இதன் ஒவ்வொரு காட்சி ஆரம்பத்திலும் கவிதை வடிவில் திரைக்குப்பின்னே குரல் காட்சித் தொடரை நகர்த்தும்.

### காட்சி : 1

திரைக்குப் பின்னே குரல்: (கவிதை வடிவில்)

சொந்த நாடுகளில் சுதந்திரத்தை இழந்தவர்கள்!
பந்த பாசங்களை பாதியிலே துறந்தவர்கள்!
இங்கே மேற்குலகில் அடைக்கலமாய் வந்தவர்கள்! - ஆம்
டென்மார்க்கின் அகதிகளும் அவர்களிலே ஓரினந்தான்!
பண்பாட்டை பழக்கத்தை பாதியிலே நிறுத்தி விட்டு
கொண்டாடும் மேற்குலகில் கொள்கைகளை வகுப்பதற்கு
திண்டாடும் அகதிகள் தம் தேசத்து நினைவுகளை
இங்கிருந்து இரைமீட்கும் எத்தனங்கள் எத்தனைதாம்!
ஈரானும் ஈராக்கும் இசுலாமின் நெறிதொடர
ஐரோப்பா துருக்கியரும் அவர்களுக்குள் பங்கமைக்க
பண்பாட்டு கூறுகளை பலவாறாய்ப் பாகமிட்டே
சோமாலிக் கறுப்பினமும் இசுலாமின் வழிதொடர
முக்காடு போட்டு முகமதியைக் காட்டுகிற
பண்பாடாய் இவர்களெலாம் கறாம் கூறி சலாம் புரிய
கயிறுகளாய் அட்டைகளாய் சிகைபின்னி அலங்கரித்து
கறுப்பினங்கள் ஆப்பிரிக்கக் கூறுகளைக் காட்டி நிற்க

வியட்நாமும் தடிக்குச்சி உணவருந்தி விழா எடுக்க
தாலிக் கொடி பொட்டு தாவணியாய் பூச்சூடி
தமிழீழத் தாய்க்குலமும் பண்பாட்டு விழா நடத்த
வேட்டி சால்வைகளில் ஆண்மகனும் தமிழ் முழங்க...
இந்த அகதிகளோ இந்து இஸ்லாம் புத்தர்களை
சிலுவைக் கொடி நாட்டில் அடைக்கலமாய்த் தொழுது நிற்க!
சிலுவைக்குள் ஐக்கியமாய் மதமாற்றம் பெற்றவர்கள்
விவிலியத்தின் வழிதொடர்ந்து தம்வாழ்வை நெறிப்படுத்த - ஆம்
புலம் பெயர்ந்த மக்களெலாம், பலவாறாய் தங்களுக்குள்
சிந்தித்தும் குழம்பி நின்றும் வாழ்ந்துவரும் இன்றைய நாள்!

இது, 2007...
அன்று, 1987
ஆம் - டென்மார்க்கில்...
20 ஆண்டுகள் முன் புலம்பெயர்ந்தோர் உலகம் அதோ!
டேனிஷ் வகுப்பறை - சிறுவர்களின்
டேனிஷ் வகுப்பறை!
வகுப்பு வாதங்களோ வர்க்க பேதங்களோ
புகுந்து பாழடிக்கா பிஞ்சுகளின் உலகம் இது! - இங்கே
புலம்பெயர்ந்த பிஞ்சொன்று புலம்பித் தவிக்கிறது - அது
நெஞ்சினிலே சுமந்து வந்து - இங்கே
நினைவுகளாய் மீட்பதெது!?

இடம் : டென்மார்க்கில் சிறுவர் வகுப்பறை

காலம் : பகல்

(5-வயது நிரம்பிய தமிழ்ப் பையன் கண்ணனுடன் ஏனைய நாட்டு மாணவர்களும் டேனிஷ் ஆசிரியையும். ஆசிரியை பல நிறத்து அகதியர் குழந்தைகளுக்கு டேனிஷ் மொழி படிப்பித்தல்... கரும்பலகையில் கப்பல், விமானம், கெலி ″ படங்கள்... அதன் டேனிஷ் சொற்களைச் சொல்லித் தருதல்...)

கெலி என்பதற்கான டேனிஷ் சொல்லை உச்சரித்து கரும்பலகையில் காட்டும்போது பின்னணியாக சடசட என்ற உலங்குவானூர்தியின் சத்தம் கேட்க வேண்டும்.. உட்கார்ந்திருக்கும் புலம் பெயர் பல நிறத்துக் குழந்தைகளில் கண்ணனது அங்க அசைவு மாற்றங்கள் ஊடாக பார்வையாளர்களை ஈர்க்க வேண்டும். ஈழ நிகழ்வுகளை பிரதிபலிக்கும்படியாக அந்த ஈழச் சிறுவனின் பாத்திரப் படைப்பு அமைய வேண்டும்...

இப்போது, காட்சி 7இல் இடம் பெறும் சோகமயமான தாலாட்டுப் பாடலான உலகத்தின் அமைதி போனதே! என்ற தாலாட்டுப் பாடலின் சில வரிகள் வயலின் இசைமூலம் வந்து கொண்டிருக்க வேண்டும்...

மேலே, வெகு அருகில் கெலி வந்தது போலவும், படார் என்று குண்டு போட்ட சத்தம்போலவும் ஒலியமைப்பு வேண்டும்...

அந்த சத்தங்களை கேட்டது போன்ற உணர்ச்சிகளை வகுப்பின் ஏனைய சிறுவர்களோ ஆசிரியரோ காண்பிக்காதபடி காட்சி அமைப்பு வேண்டும். கண்ணன் மட்டுமே அசைவுகள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி தனது இருக்கையில் இருந்து எழுந்து ஐயோ! அம்மா! என்று அலறி கீழே தடால் என்று மயங்கி விழவேண்டும். ஆசிரியர் அருகே ஓடிப்போய் கண்ணன்' என்று உலுப்ப பிள்ளைகளும் அவர்கள் உச்சரிப்பில் 'கண்ணான்!' என்று தேம்ப வேண்டும்... காட்சி 7இல் இடம் பெறும் சோகமயமான தாலாட்டான உலகத்தின் அமைதி... என்ற பாடலின் ஏனைய ஓரிரு வரிகள் சோக பின்னணி இசை என ஒலிக்கவே திரை மூடவேண்டும். அவர்களது மங்கல் உருவம் திரையை ஊடறுத்து பார்வையாளர்களை ஈழ நினைவுக்கு கொண்டு செல்வதாக திரைமூடி அடுத்த காட்சி ஒழுங்குகள் அமைய வேண்டும்...

## காட்சி : 2

**இடம்:** தமிழீழத்தில் ஒரு கிராமத்து வயல் காட்சி.

**காலம்:** அதிகாலை

**பாத்திரங்கள்:** அரிவு வெட்டுப் பெண்கள் (பின்னணி பாடலுக்கு ஆடல்...)

காட்சி தொடங்கு முன்...

**திரைக்குப்**
**பின்னே குரல்:** தென்றல் காற்றும் தெம்மாங்குப் பாட்டுமாய் கண்ணன்
வாழ்ந்திருந்த தமிழீழக் கிராமமிது! கமபுலத்தைப் பேணி
கச்சிதமாய் வாழ்ந்துவரும் கமக்காரர் ஆக்கி வைத்த
கலாச்சாரக் கிராமம் இது!
களமேட்டில் அறுவடை நாள்!
ஊர் முழுதும் கொண்டாட்டம்! - அரிவையரின்
ஆட்டமும் பாட்டுமாய் ஊர்முழுதும் கொண்டாட்டம்!

(திரை விலகல்...)

(நெல் அறுவடை செய்யும் கிராமத்துப் பெண்கள் பாடி ஆடுதல்)

**பாடல்:**

பூபாளம் பாடுவோம் பூவையர் நாம் ஆடுவோம் அருவி
வெட்ட அதிகாலை கூடுவோம் - செந்நெல்
அருவி வெட்ட அதிகாலை கூடுவோம் அகப்பை ஏந்தும்
கைகளிலே அரிவாள்கள் தூக்குவோம்!
குனிந்து குனிந்து அருவி வெட்டிப் போடுவோம்! - நாங்கள்
அணியணியாய் அருவி வெட்டிப் போடுவோம்!
போர்க்களத்தே பொங்கி நின்று போர் புரிந்தே வெற்றி
கண்ட போராளர் போலக் களம் ஆக்குவோம் - இந்த
காராளர் கச்சிதமாய் களமேட்டில் போர் குவித்தே

பொலிபொலி நெல் என்று போடு போடுவோம்! - இந்த
காற்றுள்ள போது தூற்றிக் கொள்ளுவோம்!
நெல் மணிகள் தரம் பிரிப்போம் நீளப் பைகள் தனில்
நிறைப்போம்
மூடைகளைச் சுமக்க உதவி பண்ணுவோம் - அத்தான்
மூடைகளைச் சுமக்க உதவி பண்ணுவோம்!
அந்தி சாயும் நேர முன்பே அரிவையர் நாம் ஓடிச்சென்றே
பெருமைகளை ஊர் முழுதும் பேசுவோம்! - எங்கள்
பெருமைகளை ஊர் முழுதும் பேசுவோம்! (பூபாளம்)
ஊர்கள் எல்லாம் உவகை பொங்க உலைகள்தன்னில்
அரிசி பொங்கி
தைப்பொங்கல் வாழ்த்துச் சொல்லிப் பாடுவோம்! - எங்கள்
உழவர் நாளின் பெருமை கண்டு உள்ளம் தன்னில்
உறுதி கொண்டு
களத்து மேட்டைக் காத்து நாளும் வாழுவோம்! - எங்கள்
ஊருக்கெல்லாம் உயிர்கள் தந்து வாழுவோம்! - இந்த
உயிர்கள் வாழ உணவு தந்து வாழுவோம்!
என்றும் வாழுவோம்! என்றும் வாழுவோம்!

(திரை)

## காட்சி : 3

இடம்: தமிழீழத்தில் கண்ணனது வீடு.

பாத்திரங்கள்: கண்ணனது பெற்றோருடன் கண்ணன் புத்தாடையுடன்

திரைக்குப்
பின்னே குரல்: (கவிதையாக)

தமிழர்க்கும் சிங்களர்க்கும் சித்திரைப் புத்தாண்டு!
பஞ்சாங்கம் சொல்லுகிற பலன்வழியே தம்வாழ்வை-
அவர்கள்

நம்பிக்கையோடே நிலைநிறுத்தும் புத்தாண்டு!- இங்கே
கண்ணனது வீட்டினிலும் புத்தாண்டு மகிழ்ச்சி இது!
(திரை திறக்கும்போது கோயில் மணி ஒலிக்க வேண்டும்)
(கண்ணனது வீட்டில் தாய் தந்தையுடன் கண்ணன் சித்திரைப் புத்தாண்டு கொண்டாடல்.. சுவாமிப் படம் இருத்தல்... தீபம், அல்லது சாம்பிராணி புகைத்தல்... புதிய உடையுடன் மூவருமாக ஆடிப் பாடல்...

பாடல்:

தாயும் தந்தையும்:

இன்று போல என்றும் ஈழ நாட்டிலே - நாங்கள்
ஒன்று பட்டு வாழ்வோம் ஒரு கூட்டிலே!
நன்று நன்று நன்று - புது
வருஷம் வந்ததின்று இனிய பொங்கல் உண்டு
இனித்து வாழ்தல் நன்று!
(இன்று)

தாய்: மருத்து நீரைத் தலைக்கு வைக்க வேண்டுமே! - தெய்வ
வணக்கத்தோடு தலை முழுக்கும் வேண்டுமே!

தகப்பன்: பஞ்சாங்கம் நல்ல நேரம் கூறுமே - புதுப்பஞ்சாங்கம்
நல்ல நேரம் கூறுமே

மூவரும்: அந்தப் பலன் வழி எம் பண்பாடு போகுமே! (2)
(இன்று)

தாய்: புத்தம் புதிய ஆடை பூண வேண்டுமே! - இந்தப்
புத்தாண்டில் புதிய சிந்தை தோன்றுமே!

கண்ணன்: கைவிஷேசம் தந்தை தர வேண்டுமே!
கைவிஷேசம் தந்தை தர வேண்டுமே!

மூவரும்: நாங்கள் கடவுள் பாதம் சென்று கூப்ப வேண்டும்!
இனிக் கடவுள் பாதம் சென்று கூப்ப வேண்டுமே!
இனிக் கடவுள் பாதம் சென்று கூப்ப வேண்டுமே!

(திரை)

**காட்சி : 4**

இடம்: தாய்த் தமிழ் ஈழத்தில் மீனவ கிராமம் படகிலே மீன்பிடித்து வரும் இருமீனவர்கள் படகைத்துடுப்பால் வலித்தபடி பாடுதல்...)

திரைக்குப்
பின்னே குரல்: பசுமைவயல் காடுகளா! - அதோ!
பரந்த கடல் பரப்பு!
கடல்துறையில் படகுகளில்
கடல்தாயின் அன்பளிப்பு! - ஆம்
படகுகளில் மீன்பிடித்து
பக்குவமாய்க் கரையேற்றி
ஊர் முழுதும் சுவைக்க வைக்கும்
உழைப்பாளி ஓசை அதோ!
கரைநோக்கி விரைபடகில்
காளையர்கள் உற்சாகம்
கரைபுரளும் அலைநடுவே
காற்றலையில் பாடல்அதோ!

(பாட்டு)

(கடலிலே இருவர் படகிலே இருந்து கரைநோக்கி துடுப்பு வலித்தபடி பாடல்...)

ஒருவன்: காற்றினிலே பாய்விரிச்சு கடல் அலையில் போர் முடிச்சு
ஏற்றி வந்தமீனை இனம் சொல்லவா? - நான் சொல்லவா?

மற்றவன்: ஏங்கிக் கடல் ஓரத்திலே என் வரவைப் பார்த்திருக்கும்
எந்தன்மனையாளிடத்தே செல்லவா!
நான் செல்லவா?

ஒருவன்: கரைகண்ட ஓடத்தின் களிப்பென்னடா!

மற்றவன்: இன்னும் - கரை காணா உள்ளத்தின் தவிப்பென்னடா!

ஒருவன்: தரை மோதும்திரை கூறும் கதை என்னடா?

மற்றவன்: எம்மைத் - தாலாட்டிச் சீராட்டும் தாயல்லவா? - கடல்
தாயல்லவா?

ஒருவன்: களைபிடுங்காக் கமக்காரர் நாமல்லவா? - கடல்
விழைவிக்கும் பயிர்சொந்தம் நமக்கல்லவா?

மற்றவன்: உழுகின்ற நிலமெல்லாம் கடல் அல்லவா! - இந்த ஓடத்தை
ஏர் என்று நீ சொல்லவா?

இருவரும்: காற்றினிலே பாய்விரிச்சு
கடல் அலையில் போர்முடிச்சு
ஏற்றி வந்த மீனை இனம் சொல்லவா!
ஏங்கிக் கடல் ஓரத்திலே எம்வரவைப்
பார்த்திருக்கும் எந்தன்மனை யாளிடத்தே
செல்லவா - நான் செல்லவா?

ஒருவன்: கண்ணான மீன்இரண்டு கருவிழியாய்
வட்டமிடும் காதலியின் மனக்கடலில்
படகோட்டவா?

மற்றவன்: அந்த, கனிவான நினைவலையில்
காற்றலைக்கும் கடல்வாழ்க்கை
கரும்பாகும் என்கதையை நீ கேட்கவா!

## காட்சி : 5

இடம் : கண்ணனின் வீடு

காலம் : மதியம்

பாத்திரங்கள்: பெற்றோருடன் கண்ணன், (கண்ணன் தந்தை நல்ல தம்பியும் அவர்மனைவியும் உரையாடல், கோழி முட்டை இட்டபின் கொக்கரிப்பது போன்ற சத்தம்... தொடர்ந்துபக்கத்து வீட்டு வடிவேலு முருகேசு படலையடியில் குரல் கொடுத்துக் கொண்டிருக்க நாய் குரைக்க வேண்டும். அழைப்பை ஏற்று இருவரும் உள்ளே வருதல்)

காட்சி தொடங்கு முன்...

திரைக்குப் பின்னே குரல்:

பசும் பயிராய் பொற்கதிராய் புன்னகைத்த வயல்காடு
அறுவடைக்குப் பின்னாலே அழகிழந்து கிடக்கிறது.!
பாறை இறுகியதாய் பாளம் என வெடித்து
பரிதாபத்தோடே பூமி வான்பார்த்து ஏங்குதுபார்!

(இப்போது, மின்னல், இடி, சோ என்ற மழை இரைச்சல்.. ஒளி, ஒலி வடிவில் ஏற்படுத்தப் படல் வேண்டும்) மழை பெய்து ஓய்ந்தமையை பார்வையாளர் உணர்வுகளில் உருவாக்கியபின் உழவு யந்திரம் வயலை உழுவது போன்ற சத்தம் உண்டாக்கியபின் திரைக்குப் பின்னே குரல் தொடர வேண்டும்...

அதோ! தூறல் மழை கண்டு ஊராரின் துடிதுடிப்பு!
உழவு யந்திரங்கள் உழுது வயல் பண்படுத்த ஓடோடி
உழைக்கிறதாம்! - இப்போ நாள் விதைக்கும் நேரத்தை
ஊர் பார்த்து நிற்கிறதாம்!
கண்ணனது வீட்டினிலும் அவ்வாறாய்...

இடம் : கண்ணனின் வீடு

காலம் : மத்தியானம்

பாத்திரங்கள்: கண்ணனது தந்தையான நல்லதம்பி, தாய், பார்வதி, சிறுவன் கண்ணன், பக்கத்து வீட்டு வடிவேலு, முருகேசு... (கண்ணனின் வீட்டில் தந்தை நல்லதம்பி சாய்மனைக் கதிரையில் சாய்ந்தபடி வீரகேசரி வாசித்தல்... தாய், கண்ணனுக்கு சோறு ஊட்டியபடி இருத்தல்... பத்திரிகையை மடித்தபடி நல்லதம்பி மனைவியிடம் பேசுதல்... )

நல்லதம்பி: (தாளலயத்துடன்)
பஞ்சாங்கம் எங்க புள்ளை பார்வதி! - வாகிய
பஞ்சாங்கம் எங்கே புள்ளை பார்வதி!
நாள்விதைப்பிற்கு நல்ல நேரம் பார்க்கணும்!
நல்விழைச்சல் வீடு வந்து சேரணும்!
செல்வம் வீடு சேரணும் நாங்க செல்வாக்காய் வாழணும்!-
பஞ்சாங்கம் எங்க புள்ளை பார்வதி - அதற்கு
பஞ்சாங்கம் எங்க புள்ளை பார்வதி!

பார்வதி: (கண்ணனுக்கு சோறு ஊட்டியபடி)
பொடிக்கு சோறு தீத்திறேன் பெட்டகத்துக்கை பாருங்கோ
தீத்திப்போட்டு எடுத்துத்தாரன் நில்லுங்கோ - சோறு
தீத்திப்போட்டு எடுத்துத் தாறன் நில்லுங்கோ!
தீத்திப், போட்டு எடுத்துத்தாறன் நில்லுங்கோ!

(நல்லதம்பி மீளவும் பத்திரிகையில் கவனம் செலுத்தல், அப்போது நாய் குரைத்தல், தொடர்ந்து இருவரது குரல் தாழலயம்)

ஒருவர்: நல்ல தம்பி! நல்ல தம்பி!

மற்றவர்: நல்ல தம்பி நிற்கிறாரோ தங்கச்சி
நல்ல தம்பி நிற்கிறாரோ தங்கச்சி!

நல்லதம்பி: (மனைவியிடம் மெதுவாக கூறுவது போன்ற பாவனையில்)
பக்கத்து ஒழுங்கையாட்கள் வாராங்க - அந்தவடிவேலும் முருகேசும் வாராங்க
பக்கத்து ஒழுங்கை ஆட்கள் வாராங்க!

பார்வதி: (படபடப்புடன்)
கண்ணன் சோறு தின்கிறான்! கண்ணன் சோறுதின்கிறான்
கண்ணூறு நாவூறு வந்திடும் பார்த்தால்
கண்ணூறு நாவூறு வந்திடும்! உள்ளே போய்
தீத்துறேன் கண்ணா வாடா உள்ளுக்கு ஓடிடடா
அடுக்களைக்குள் முன்னுக்கு - கண்ணா
ஓடிடடா அடுக்களைக்குள் முன்னுக்கு!!
(தாயும் கண்ணனும் உள்ளே போய்க் கொண்டு இருக்கையில் பார்வதி பதிலாக...)

பார்வதி: வாருங்கோ அவர் நிற்கிறார்! - அண்ணாமார்
வாருங்கோ அவர் நிற்கிறார்!
(அப்போது வடிவேலுவும் முருகேசுவும் வருதல். - முருகேசுவின் உடை பழைய பழுப்பேறிய சறம் (லுங்கி)
முருகேசுவின் உடை பழைய பழுப்பேறிய வேட்டியை கொடுக்காக கட்டி தலையில் குழம்பிய தலைப்பாகை அவரது கையிலே ஒரு வெறும் சாராயப் போத்தல்)

நல்தைம்பி: வாருங்கோ வாருங்கோ
வடிவேலுவும் முருகேசுவும் வாருங்கோ!
வடிவேலு வாருங்கோ! முருகேசு வாருங்கோ
வடிவேலு முருகேசு வாருங்கோ
அண்ணைமார் வாருங்கோ
வடிவேலுவும் முருகேசுவும் வாருங்கோ!

வடிவேலு: வணக்கம் நல்ல தம்பி வணக்கம் நல்ல தம்பி!

முருகேசு: மனிசி பிள்ளை சுகமா நல்ல தம்பி - பையன்
கண்ணன் எங்க காணோம் நல்ல தம்பி - பையன்
கண்ணன் எங்கை காணோம் நல்ல தம்பி!

பார்வதி: (குசினிக்குள் இருந்தபடியே)
இங்கே கண்ணன் இல்லை!
இங்கே கண்ணன் இல்லை
விளையாட வெளியாலே போயிட்டான் - கண்ணன்
விளையாட வெளியாலே போயிட்டான் - கண்ணன்
விளையாட வெளியாலே போயிட்டான்!

நல்லதம்பி: மத்தியான வெய்யிலுக்கை வாறீங்க! - கொஞ்சம்
மோர் குடிச்சு பேசுவோமா சொல்லுங்க - புளிச்ச
மோர் குடிச்சு பேசுவோமா சொல்லுங்க!

முருகேசு: மூன்று முட்டி கள் அடிச்சு வருகிறோம்! - இவன்
வடிவேலன் வடலியிலே சீவி வைச்ச பனங்கள்ளில் மூன்று
முட்டியை முடிச்சுப் போட்டு வருகிறோம் (2)

வடிவேலு: மோர் வேண்டாம் பேசுவோம் மோர் வேண்டாம்
பேசுவோம் மூன்று முட்டியும் முடிச்சுப் போட்டு வருகிறோம்!

முருகேசு: நாங்கள் கள் முட்டி மூன்றடிச்சு வருகிறோம்!

நல்லதம்பி: வந்த நோக்கம் என்னவென்று சொல்லுங்கோ!
- நீங்க
வந்த நோக்கம் என்ன வென்று சொல்லுங்கோ!
- நான்
என்ன உதவி செய்ய வேண்டும் சொல்லுங்கோ!
- இப்போ
என்ன உதவி செய்ய வேண்டும் சொல்லுங்கோ!
- நான்
என்ன உதவி செய்ய வேண்டும் சொல்லுங்கோ!

முருகேசு: வயல் விதைக்க நல்ல நேரம் பார்த்திட்டோம்!

வடிவேலு: நாங்கள் பார்த்திட்டோம்!

முருகேசு: வயல் விதைக்க பஞ்சாங்கம் பார்த்திட்டோம்.

வடிவேலு: நாங்கள் பார்த்திட்டோம்! வயல் விதைக்க பஞ்சாங்கம் பார்த்திட்டோம்!

முருகேசு: விதை நெல்லு வாங்க வேணும் உன்னிடம்!

வடிவேலு: விதை நெல்லு வாங்க வந்தோம் உன்னிடம்!!

நல்லதம்பி: அதற்கென்ன தருகிறேன்! விதை நெல்லு தருகிறேன்.
எந்த நாளில் விதைக்க வேணும் சொல்லுங்கோ! -
அதற்கு பஞ்சாங்க நேரம் என்ன சொல்லுங்கோ!!

முருகேசு: வாக்கியபஞ் சாங்கநேரம் நாளை அதிகாலை
5மணிகாலை (2) விதை விசிறும் நேரம்
நாளை 5 மணி காலை...

வடிவேலு: திருக்கணித பஞ்சாங்கம் 6 மணி காலை -
நாளை 6மணி காலை விதை நெல்லு விசிறும்
நேரம் 6 மணி காலை நாளை 6-மணி காலை

முருகேசு: நல்ல தம்பி நீயும் நானும் 5ந்திற்கு விதைப்போம்
காலை 5ந்திற்கு விதைப்போம்... வாக்கிய
பஞ்சாக்கக் காரர் 5ற்கு விதைப்போம் - காலை
5ந்திற்கு விதைப்போம்.

வடிவேலு: நான்... திருக்கணித நேரப்படி 6க்கு விதைப்பேன்
- காலை ஆறுக்கு விதைப்பேன் - நான்
திருக்கணிதநேரப்படி ஆறுக்கு விதைப்பேன் -
காலை ஆறுக்கு விதைப்பேன்.

நல்லதம்பி: அப்படியே! ஆமாம் அப்படியே!!
மூவருமாய் வயல்வெளிக்கு போகலாம் - நாளை
போகலாம் - நாள், விதைக்க போகலாம் - எந்தன்
உழவுயந்திரம் தனில் ஏறிப்போகலாம்!!
ஒன்றாய் போகலாம்!! ஒன்றாய் போகலாம்!!

வடிவேலு: நல்லது, நாங்கள் போகலாம். ஒன்றாய் போகலாம்...

முருகேசு: விதை நெல்லு... எங்கள் விதை நெல்லு!!

நல்லதம்பி: தெரியாதா.... எந்தனுக்கு தெரியாதா?
வண்டியிலே ஏற்றி வைப்பேன் வாருங்கோ - காலை
வாருங்கோ - நாளை வாருங்கோ - போக
அதிகாலை ஒழுங்கையிலே நில்லுங்கோ - போக
அதிகாலை முடக்கினிலே நில்லுங்கோ!!
ஒன்றாய் நில்லுங்கோ!

இருவரும்: நன்றி நல்லதம்பி. நன்றி நல்ல தம்பி!!
வருகிறோம் நாங்கள் வருகிறோம்!

முருகேசு: தவறணையை பூட்டப் போறான் வருகிறோம் -
கள்ளுத் தவறைணையைப் பூட்டப்போறான் வருகிறோம்!!
(கையில் உள்ள வெற்றுப் போத்தலை காட்டியபடி)
கள்ளு - தவறணையைப் பூட்டப்போறான்
வருகிறோம்!! - சென்று வருகிறோம்!

வடிவேலு: நாங்கள் வருகிறோம்..

(திரை)

## காட்சி : 6

இடம்: தமிழீழ கிராமத்தில் ஒரு விளையாட்டுத் திடல்

காலம்: மாலை

பாத்திரங்கள்: கண்ணனும் ஏனைய சிறுவர் சிறுமியரும் ஆடிப்பாடல்... பாடல் முடிவில் நிறைமாதக் கர்ப்பிணி வடிவில் கண்ணனது தாய் படபடப்புடன் ஓடிவருதல்...

திரைக்குப் பின்னே குரல்:

தமிழர்தம் தேசியத்தில் விளையாட்டும் பெரும்பங்காம்!
மாட்டு, வண்டிச் சவாரி! வாரோட்டம்
கும்மி கோலாட்டம் இப்படி காளையர்க்கும் கன்னியர்க்கும்
- தமிழ்
கலாச்சார விளையாட்டு! - ஆம்
ஆண்களது விளையாட்டும் பெண்களது விளையாட்டும்
வெவ்வேறாய் அமைந்திருக்கும்! - ஆண், பெண்
சிறுவர்களின் விளையாட்டோ இருபங்காய்
இணைந்திருக்கும்!
கண்ணன் தன் தோழருடன் ஊர்த்திடலில் கூடுகிறான்!
விளையாடக் கூடுகிறான்:

இடம்: விளையாட்டுத் திடல்,

காலம்: மாலை.

(கண்ணன் தோழர்களுடன் ஒன்றாய் கூடி விளையாட்டுத் திடலில் ஆடிப்பாடல்... பாடல் முடிவில் கெலியின் சிறிய சத்தம்... அப்போது தாயார் பதறியபடி வந்து சிறுவர்களை ஓடச் சொல்லி கண்ணனை கூட்டிச் செல்லல்...)

பாடல்: (சிறுவர், சிறுமியர்)

கிளித்தட்டு கெந்தி விளை யாடுவோம்! - வெகு
கெட்டித் தன மாகப் பாடி ஆடுவோம்!
எட்டுக்கோடு வாரோட்டம் கொக்கான்வெட்டு பாண்டியாட்டம்
கிட்டி புல்லு பூம்பந்து எங்கள் கையில் இருக்கையிலே
கிளித் தட்டு கெந்தி விளையாடுவோம்! - வெகு கெட்டித்
தனமாகப் பாடி ஆடுவோம்!
கண்ணாரே கடையாரே பொத்துவோம்! - வேண்டாம்
கைகோர்த்து எல்லோரும் சுற்றுவோம்!
காரியமில்லை மணலில் கந்தசாமி கோயில் கட்டி
கெட்டிமேளம்
பீப்பி ஊதி
காவடிகள் ஆடி நிற்போம்! (2)
கிளித் தட்டு கெந்தி விளையாடுவோம்! - வெகு கெட்டித்
தனமாகப் பாடி ஆடுவோம்! - கண்ணா
கிளித் தட்ட கெந்தி விளையாடுவோம்! - வெகுகெட்டித்
தனமாகப் பாடி ஆடுவோம்!

(அப்போ நிறைமாதக் கர்ப்பிணியாக கண்ணனின் தாயார் மூச்சிரைக்க ஓடிவருதல். தூரத்தே வெடிச் சத்தமுடன், உலங்கு வானூர்தியின் சட சட சத்தம் சிறிது கேட்டல்)

பார்வதி: (மூச்சிரைத்தபடி...)
கண்ணா! கண்ணா! - உன்னை
எங்கெல்லாம் தேடுவதோ கண்ணா! - உன்னை
எங்கெல்லாம் தேடுவதோ கண்ணா!
ஊர் கெட்டுக் கிடக்குதடா கண்ணா! - வானில்
உலங்கு வானூர்திகளோ பறக்குதடா கண்ணா!
வெடிச் சத்தம் கேட்குதடா கண்ணா! (2)
வானொலியே கூறுதடா ஊரடங்கு உத்தரவாம்
எங்கெல்லாம் தேடுவதோ கண்ணா - உன்னை
எங்கெல்லாம் தேடுவதோ கண்ணா!
ஓடிப்போய் வீட்டுக்குள்ளே இருக்கணும்!
ஓடிவா! கண்ணா ஓடிவா!! - நாங்கள்

ஓடிப்போய் வீட்டுக்குள்ளே இருக்கணும்! - நாங்கள்
ஓடிப் போய் வீட்டுக்குள்ளே இருக்கணும்!
(பார்வதி ஏனைய சிறுவர் சிறுமியரைப் பார்த்து)
பிள்ளைகாள்! எங்க பிள்ளைகாள்!!
வேளைக்கே வீடுபோய் சேருங்கோ! - நீங்கள் வேளைக்கே
வீடுபோய் சேருங்கோ! - உங்கள்
தாய்தகப்பன் தேடுகிறார் தலைதெறிக்க ஓடுகிறார்
வேளைக்கே வீடுபோய் சேருங்கோ! சுறுக்காய் ஓடுங்கோ!!
சுறுக்காய் ஓடுங்கோ! சுறுக்காய் ஓடுங்கோ!!
(எல்லோரும் ஓடுதல்)

(திரை)

## காட்சி : 7

இடம்: கண்ணனது வீடு, தாயார் ஏணையை (தூளியை) ஆட்டிக்கொண்டு தாலாட்டு பாடிக் கொண்டு இருக்க பக்கத்தே தாயை பற்றியபடி கண்ணன் நிற்றல். தாலாட்டு பாடலின் இடையில் தகப்பன் கலப்பை கொண்டு வந்தபடி பாடுதல். வெளியே விமானம் கெலி ஓசைகளும் செல் அடி ஓசைகளும் ஒலித்தல், இடையே நாய் ஊளையிடும் ஒலி.)

திரைக்குப் பின்னே குரல்: (கவிதை வடிவில்)
அழகான கிராமம் - இன்று
அழகிழந்து கிடக்கிறது!
செல்லடியும் குண்டடியும்
செவிப்பறையைத் துளைக்கிறது!
கண்ணனது விழிகளிலே கடும் அச்சம் தெரிகிறது! -தாய்
அவளின்
அழுகுழந்தைத் தாலாட்டோ அவலத்தில் பிறக்கிறது!!

(திரை விலகல்)

பாடல்: (தாலாட்டு)

உலகத்தின் அமைதி போனதே!
ஊழிக் காலம் உருவானதே!
கதறிடு மகளே கதறி அழு - எந்தன்
கண்மணி நன்றாய் கதறி அழு!
உன்போல நானோ குழந்தை அம்மா! - இன்று
உனைக்காக்க வழிதான் சொல்லம்மா!
என்தாயும் எனக்கிதை சொல்லவில்லை - இந்த
அவலங்கள் அந்நாள் வரவில்லை!
உலகத்தின் அமைதி போனதே
ஊழிக் காலம் உருவானதே
கதறிடு மகளே கதறி அழு! - எந்தன்
கண்மணி நன்றாய் கதறி அழு!!

(அப்போது கலப்பையை தந்தை தோழிலே சுமந்தபடி தாடி மீசையுடன் பாடுதல்...)

தகப்பன்: கலப்பை பிடித்தே கமபுலன் காத்த
அந்நாள் காலம் உருவானதே - எங்கள்
உழவு யந்திரத்தின் உதவிகள் எல்லாம்
எரிபொருள் இன்றிப் பாழானதே! - இன்று
எரிபொருள் இன்றிப் பாழானதே!

தாய்: சிங்களர் நிலமோ செழிப்பினிலே - இந்த
இயற்கையின் வளமோ அவர்களுக்கே
செந்நெல் போகங்கள் அவர்களுக்கே - அவர்
ஆட்சியும் தமிழர்க்கு அவலத்திலே - அவர்
ஆட்சியும் தமிழர்க்கு அவலத்திலே

இருவரும்: உலகத்தின் அமைதி போனதே!

தகப்பன்: வரண்ட எம் நிலத்தில் வாழ்நாள் எல்லாம்
வாடி வாடி உழைக்கின்றோம்!- நாங்கள்

தேடிய செல்வம் அனைத்தையும் இழந்தே
தெருத் தெருவாக அலைகின்றோம்!! - இன்று
தெருத் தெருவாக அலைகின்றோம்!!

தாய்: வானம் பார்த்த பூமியில் இங்கே
மழையா பொழிகிறது - இன்று
மழையா பொழிகிறது! - எங்கள்
வாழ்க்கைப் பயணம் முடிவதற்கென்றே
மழைதான் பொழிகிறது! - குண்டு
மழையாய்ப் பொழிகிறது! - குண்டு
மழையாய்ப் பொழிகிறது!

இருவரும்: உலகத்தின் அமைதி போனதே
ஊழிக் காலம் உருவானதே
கதறிடு மகளே கதறி அழு - எங்கள்
கண்மணி நன்றாய் கதறி அழு.

(பாடல் முடிவில் ஷெலியின் பயங்கர சத்தம் அதிகரித்து படார் என்று குண்டு போட ஏணையும் அறுந்து விழ தந்தை, தாய் கண்ணன் ஆகியோர் குற்றுயிரும் குலை உயிருமாய்கிடக்க அந்த இடத்திற்கு பக்கத்து வீட்டு வடிவேலுவும், முருகேசுவும் வருதல்..)

முதலில் முருகேசு அங்கே ஓடிவந்து...

முருகேசு: இராகத்துடன்...
ஓடிவாடா வடிவேலு ஓடிவாடா ஓடிவாடா நல்லதம்பி
விட்டிலைதான் செல்விழுந்து போட்டுதடா!
மூச்சுப் பேச்சை காணோமடா!
ஓடிப்போய் பார்ப்பமடா!
ஓடியாடா வடிவேலு!
ஓடியாடா ஓடியாடா!

(இருவரும் கண்ணன் வீட்டிற்கு ஓடி வந்து அவனது தாய் தந்தையரை புரட்டிப் பார்த்து கையை விரித்தல்.)

முருகேசு: (ஒப்பாரி)

மூச்சு பேச்சு இல்லையடா - இதுகள்
கதை முடிஞ்சு போச்சுதடா...
கோதாரி சிங்களவன் - இந்த
குடியையுமா ஒழிச்சான்கள்...
அப்பாவி நல்லதம்பி - உன்னை
எங்கைஐயா காண்பன் இனி.. (2)

(முருகேசு, கண்ணனை தூக்கிப் பார்த்தபடி மூச்சு வரக் காண்பதான உணர்வை பிரதிபலித்தல்.)

முருகேசு
ஒப்பாரி:

எப்படியாய் வாழ்ந்தவர்கள்
இப்படியாய் ஆனோரோ
பெற்றவரை பறிகொடுத்து - கண்ணன்
அநாதரவாய் போனானோ! - இன்று
அநாதரவாய் போனானோ!

வடிவேலு
ஒப்பாரி:

நல்லதம்பி பெத்த பிள்ளை
நடுத்தெருவாய் போனானோ - இந்த
வடிவேலன் இருக்குமட்டில் - இவனை
அநாதரவாய் விடுவேனோ
நல்லதம்பி வாரிசை
நல்லபடி நான் வளர்ப்பேன்!
கண்ணன்இனி என்மகன்தான் - இவனை
கண்கலங்க விடமாட்டேன்!
முருகேசர்! ஐயோ முருகேசர்!!

(குலுங்கி அழுதபடி குழந்தை கண்ணனை முருகேசிடம் இருந்து வடிவேலு வாங்குதல்)

முருகேசு
ஒப்பாரி: அருமை பெருமை என வளர்ந்த இந்த குஞ்சல்லோ - இப்போ
அநாதைஎன ஆச்சுதடா
அடே என்ரை வடிவேலா! (குலங்கி ஒப்பாரியான வடிவேலுவின் தோளில் முகம் புதைத்து அழுதல்)

வடிவேலு: நாளுக்குநாள் நம்மசனம் சாகுது! - இந்த
நாட்டினிலே எப்படித்தான் வாழ்வது!

முருகேசு
ஒப்பாரி: சவம் காவிச் செல்லும்போதும் சுடுகாடுபோவதற்குள்
சவமாகும் சம்பவங்கள் நடக்குது! - தெருவில்
சவமாகும் சம்பவங்கள் நடக்குது! குண்டுபோட வட்டமிடும் விமானம் கண்டு பிணத்தை வைத்தே பதுங்கு குழி தேடி ஓடல் நடக்குது - எல்லாம் சாவீடாய் தமிழர் வாழ்வு இருக்குது.

வடிவேலன்
ஒப்பாரி: புத்தர் பூமி பேசுகின்ற புத்தி கெட்ட
சிங்களவர் தமிழ்க் கொலையை அகிம்சை சொல்லல் நடக்குது! - எங்கள் தமிழ்க் கொலையை அகிம்சை சொல்லல் நடக்குது! நாளுக்குநாள் நம்ம சனம் சாகுது! - இந்த நாட்டினிலே எப்படித்தான் வாழ்வது!

முருகேசு
ஒப்பாரி: பாட்டன் பூட்டன் சந்ததிகள்
பலநூறு ஆண்டுகளாய்
பாசத்தோடு வாழ்ந்து வந்த நாடிது - இரத்த
பாசத்தோடு வாழ்ந்து வந்த நாடிது!

வடிவேலு
ஒப்பாரி: அன்று-
பறங்கிக் காரன் வந்தும்கூட
பல கொடுமை புரிந்துங்கூட
பண்பாடு காத்து வந்த நாடிது! - தமிழ்
பண்பாடு காத்து வந்த நாடிது! - இன்று
நாளுக்குநாள் நம் சனம் சாகுது! - இந்த
நாட்டினிலே எப்படித்தான் வாழ்வது!

முருகேசு
ஒப்பாரி: கோயில் குளம் பாக்கி இல்லை
குண்டுமாரி பொழியுது!
மருத்துவத்து மனைகளிலும்
செல்லடிதான் நடக்குது
பாயினிலே படுக்கையிலே
பொதுசனங்கள் சாகுது! - அந்த
வாயில்லாத சீவன்கூட
வாய்பிளந்து கிடக்குது - அங்கே
ஆடுமாடு சீவன்களும்
வயலில் மடிந்து கிடக்குது!

வடிவேலு,
முருகேசு: நாளுக்கு நாள்
நம்மசனம் சாகுது - இந்த
நாட்டினிலே எப்படித்தான் வாழ்வது!

வடிவேலு
ஒப்பாரி: பாதுகாப்பு தேடிப் பலர்
படகில் ஏறிப் போகிறார்!
அகதியாகி தஞ்சமென்று
அயல்நாட்டுக் கோடுறார்!

முருகேசு
ஒப்பாரி: போதும் போதும் நரக வாழ்க்கை

புறப்படணும் நாங்களும்!
நம்முயிரை காக்க வழி
பார்க்கவேணும் நாங்களும்!

இருவரும் ஒப்பாரி:
நாளுக்கு நாள் நம்ம சனம் சாகுது - இந்த
நாட்டினிலே எப்படித்தான் வாழ்வது!

( திரை )

**காட்சி : 8**

இடம்: கடற்கரையில் ஒரு படகு.

பாத்திரங்கள்: படகிலே அகதியர் வரிசையில் கண்ணன் வடிவேலு, முருகேசு குடும்பமுடன்

திரைக்குப் பின்னே குரல்...

அதோ!
நங்கூரம் பாய்ச்சி நடுக்கடலில் ஒரு கப்பல்
அங்கதனை அடைவதற்கு படகுகளில் ஊர்மக்கள்...
ஏஜன்சி எனும் முகவர் ஏற்பாட்டில் பணம் கொடுத்தே
ஐரோப்பா நாடுகட்கு படையெடுக்கும் ஊர்மக்கள்!
கண்ணன்அவன் வடிவேலு குடும்பமுடன் ஊர் இழந்து
கடல் கடந்து போகின்ற கண்ணீர் காட்சிஅதோ!

(திரை திறக்கும்போது, நாளுக்கு நாள் நம்ம சனம் சாகுது!
இந்த நாட்டினிலே எப்படித்தான் வாழ்வது! என்ற தாழலய பாடல் வரியை பின்னணி வயிலின் இசையில் ஒலிக்க வேண்டும். தூரத்தே கப்பலில் இருந்து ஒலி விட்டு விட்டு கேட்பதுபோல் இருக்க வேண்டும்... படகிலே சிலர்...

அதிலே கண்ணன் (கண்ணைக் கசக்க வேண்டும்)
அருகே
வடிவேலு, முருகேசு அவர்கள் மனவியர்)
(படகோட்டி தண்டு வலித்தபடி பாடுதல்...)

நெஞ்சினிலே துயர் சுமந்து
நெடுங்கடலைத் தாண்டி இன்று
தஞ்சமென்று செல்வோமடி - ஈழத்
தமிழ் இனத்தின் கதை கேளடி!(2)
சொத்து சுகம் துறந்தவர்கள்!
சொந்த பந்தம் பிரிந்தவர்கள்
திக்குத் திசை தெரியோமடி - ஈழத்
தமிழ் இனத்தின் கதை கேளடி!
(நெஞ்சினிலே)
கடல் அலையின் துரும்பாகி
காற்றலைக்கும் படகாகி
ஊர் பிரிந்து போறோமடி - எங்கள்
தமிழினத்தின் கதை கேளடி - இந்த
அகதியரின் கதை கேளடி! - தமிழ்
அகதியரின் கதை கேளடி

(திரை)

**காட்சி : 9**

**இடம்:** மீளவும் டென்மார்க் வகுப்பறை

**பாத்திரங்கள்:** முதல் காட்சியில் உள்ளபடி மாணவர்களும், ஆசிரியரும் கண்ணனைச் சூழ எழுந்து நிற்றல்...

**திரைக்குப் பின்னே குரல்:**

கண்ணன் அவன் டென்மார்க்கில்

கால்பதித்த கதை இதுதான்!
வடிவேலன் வளர்ப்புமகன் - இங்கே
வாழ்ந்து வரும் கதை இதுதான்! - ஆம்
எண்பத்தே ளாமாண்டுத்
தமிழ் அகதிக் கதை இதுதான்!
ஈழத் தமிழினத்தை ஈனமிகு சிங்களவர்
வாழத் தகுதியற்ற வரலாறாய் ஆக்கியதால்
எங்கள் - பண்பாட்டின் பொங்கிசங்கள் - இன்று
பலநாடாய் அலையுது பார்! - அவ்வாறாய்
கண்ணனிவன் டென்மார்க்கில்
கால்பதித்த கதை இதுதான்
வடிவேலின் வளர்ப்பு மகன் - வகுப்பில்
மயங்கிவிட்ட கதையிதுதான்!

திரை திறக்கும்போது: காட்சி 3-ன் இன்றுபோல என்றும் ஈழ நாட்டிலே என்ற பாடல் பின்னணி இசையில்.

(கண்ணன் கண்ணைக் கசக்கியபடி எழுந்து நிற்க ஆசிரியை அமைதி அடையும்படியாக முதுகை தடவி அணைத்தபடி ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம் என்பதை டேனிசில் கூறல்...

(அப்போது அனைத்து சிறுவரும் ஆசிரியருமாக டென்மார்க்கின் தேசிய கீதத்தை பாடுதல்)

## காட்சி : 10

இடம்: டென்மார்க்கில் முருகேசரின் வீடு...

காலம்: மாலை

பாத்திரங்கள்: முருகேசு அவர் மனைவி
இடையே முருகேசரின் டேனிஷ் நண்பர் பீற்ற சண்.
தனது மனைவி மரியாவுடன் வருதல்...

(திரைக்குப் பின்னே குரல்)

ஊர் விட்டு ஊர் தாண்டி
கடல் கடந்து மேற்குலகில்
கால பதித்த ஈழவர்க்கோ
மரணபயம் விலகியதாம்! - இங்கே
பணம் காசில் மிதப் பதற்காய்
பல தொழில்கள் இவர்க்கிருக்காம்.! ஊரில்
ஏற்காத தொழிலையெல்லாம் - இங்கே
ஏற்றுவந்து செய்கினமாம்!
தமிழ் புருஷர் இலட்சணமும்
தமிழ் பெண்டிர்இலட்சணமும்
பெரும்புள்ளி ஆவதற்கு
போட்டிஇட்டே உழைப்பதுவாம்! - இருந்தாலும்
ஊர் தந்த சாதியத்தில்
உட்கார்ந்தே உழைக்கினமாம்!
ஊர்ச் சாதிச் சங்கம் வைத்தும்
உயிர் மூச்சு விடுகினமாம்! - ஆனால்
சமத்துவத்தை பணமாக்க
பல தொழிலும் பார்க்கினமாம்!
மீன் கோழி பன்றி வெட்டல் முடிவெட்டல் உடை கழுவல்
கான் கக்கூஸ் தான் கழுவல் கியஸ்க் வைத்தல் கடை நடத்தல் - என
கடிதினிலே பணந்திரட்டி கனவான்கள் ஆவதற்காம்!
- இவ்வாறு
பணப்புழக்கம் வந்ததினால் பலபேர் வாழ்வினிலும்
பற்பலவாய் மாற்றங்களாம்! - ஆம்
நடையுடை பாவனையில் நம்மவர்கள் மாறிவிட்டார்
வெள்ளையனை விஞ்சி பென்ஸ்கார்கள் குடிமனைகள்! - பெருஞ்
சீட்டுக் காசுகளால் கொழும்பினிலும் குடிமனைகள்! - இங்கே
பிரமுகர்கள் ஆகிவிட்ட புலம்பெயர்ந்த கூட்டமிதில் - எங்கள்

கண்ணன் வடிவேலன் முருகேசன் கதை எதுவோ! - அதோ
முருகேசர் வீட்டின் ஒரு நாள் பொழுதிதுதான்!

(ஊரிலே தலைப்பாகை கோவணத்துடன் இருந்த முருகேசு கோட்சூட் போட்டு தனது வீட்டில் இருந்து பியர் அடித்து கொண்டு மதுபோதையில் உளறல்...)

முருகேசர்: (பாடுதல்)
ஊரிலே வயல் உழுதேன் வாய்க்கால் வரம்பமைச்சேன்
வடிவேலன் வடலியிலே பனங்கள்ளு நான் குடிச்சேன்
பெருங்குடி மகன் எனக்கு இந்த குடி மூலைக்குத்தான்
பியர் அடிச்சு ஏறவில்லை போட்டதிலே திருப்தியில்லை...
கனவான் என்ற எண்ணம் எனக்கென்று வந்ததில்லை - இந்த
கோட்டு சூட்டு வேசமெல்லாம் ஊர் கோவணத்துக் கீடாமோ
மண்பிசைந்து நாற்று நட்டு வயல்வரம்பில் நடந்த சுகம் - ஆகா
இப்பவும் நினைக்கையிலே என்னுள்ளம் சிலிர்க்குதப்பா!
வெளிநாட்டு வாழ்க்கை இது வேசமெலாம் வெறுக்குதப்பா - என்ரை
தலைப்பாவை கோவணத்தை டென்மார்க் மியூசியத்தில் வைக்கானோ!
குடிகார முருகேஸ் என்றால் - எந்த
குழந்தைக்கும் தெரிந்துவிடும்! - என்னை
குடிகாரன் என்று சொன்னோர் - இங்கே
பெருங்குடியர் ஆகிவிட்டார்!!
மறைச்சு வைச்சும் குடிப்பான்கள்!
யூறின் றபிளுக்காய் இந்த பியர் என்பார்கள் - இவர்கள்
செய்யாத திருக் கூத்தா? எல்லாமே செய்வார்கள் - மேடை
நாடகமும் போட்டு நின்றே - நல்ல
கரகோசம் பெறுவார்கள்! - டேனிஷ்

மொழி தெரியாத் தமிழருக்கு
மொழி பெயர்க்க வருவார்கள்! - யாரும்
அழகான பொடிச்சி கண்டால் - ஏதும்
ஆக்கினைகள் தருவார்கள்! - தமிழ்
கலாச்சாரம் சொல்லுவினம் - ஆனால்
காவாலிப் பழக்கங்கள்தான்! - தமிழ்
பண்பாட்டைச் சொல்லி நின்று - டிஸ்கோப்
பொடிச்சிகட்கும் அலைவார்கள்!
ஆளுக்கு தகுந்தாற்போல் - முன்னால்
அழகாக பேசுவினம்!
வாழைப் பழத் தோல் எறிந்தும் - நல்ல
வரவேற்பும் பாடுவினம் !
கற்கண்டு தேம்பாகாய்
கசிந்துருகி நிற்பார்கள்! - தம்மை
பிரமுகர் ஆக்கவென்றே - எங்கும்
பேயாய் அலைவார்கள்!
- இவர்களுக்கு
நெஞ்சினிலே உறுதி இல்லை!
நேர்மைத் திறனுமில்லை - இந்த
வஞ்சனை உலகினிலே - எனக்கு
வாய்ச்ச நண்பன் பியர்தானே!

(அப்போது காலிங் பெல் அடித்தல்)

முருகேசு: விசாலாட்சி - அடி
விசாலாட்டி! - (பின்னர் தனது வாயை பொத்தி)
விசாலம், என்ரை செல்லம்!
வாணை ஒருக்கால் வந்து
யார்வந்தார் பாருமணை!
வெளியாலை யாரோ வந்து
வெல்லெல்லே அடிக்கீனம்! - உவன்
வடிவேலன் தானோ - இல்லை
சீட்டுக்கார சீவாவோ!

புதிசாய் குடி பழகி - தெருவில்
புலம்பும் பரஞ் சோதிதானோ!
விசாலம்! என்ரை செல்லம்
வாணை! வந்து வெல்லை
யார் அடிச்சார் பாருமணை!

விசாலாட்சி: என்ன மனிசனப்பா!
ஏன் கூச்சல் போடுகிறீர்! - பெல்
அடிக்கட்டும் நல்லாய்
அதற்குள்ளை இது முடியும் - இந்த
சின்னத் திரைத் தொடர்தான்
முடியட்டும் வாறனப்பா!
அவசரம் உமக்கிருந்தால் - நீரே
ஆரெண்டுபாருமப்பா!

(முருகேசு எழுந்து போகிறார். அப்போது அவர் மனைவி விசாலாட்சி ரீவியை நிறுத்துவதுபோல பாவனை)

(அப்போது டேனிஷ்காரரான பிற்றர் சண் தனது மனைவி சகிதம் உள்ளே வருதல்)

முருகேசு: ஹலோ பீத்தல் சன்

பீற்றசண்: (டேனிஷ் உச்சரிப்பில்) கலோ மூதேசி!

முருகேசு: (வாய்க்குள் முணுமுணுப்பு...) எல்லாம் பீத்தல் சண்ணுகள்!

பீற்ற சண்: வாசிய டு (என்ன சொல்கிறாய்)

முருகேசு: (சமாளித்தபடி) புதிய பியர் போத்தலை எடுத்து காட்டி வேண்டுமா? என்று கேட்கும் பாவனையில் அவருக்கு ஒரு பியரை உடைத்துக் கொடுத்தல்... அப்போது

இருவரும் குடித்தல்... ஒரு பாட்டுப்படும்படி பீற்றர்சண் முருகேசுவை கேட்டல்... முருகேசு தனது மனைவியை ஒருக்கால் பாடும்படி கேட்டல்... பாடல் இறுதியில் முருகேசும் பாடுவதாக பாடல் அமைதல் தொடர்ந்து அதே பாடலை பீற்றர்சண்ணின் மனைவி போர்த்துக்கல் மூலத்தில் பிறந்த அதே மெட்டில் அதே பொருளில், அமைந்த முருகேசு குடும்பம் பாடிய பாடலை ஆங்கில பின்னணியில் பாடுதல்)

(தமிழ் பாடல் தமிழிலே ஆரவல்லி படத்தில் வரும் சின்னப் பெண்ணான போதிலே... பாடியோர் ஜிக்கி, ஏ.எம். ராஜா)

தமிழ்...

விசாலாட்சி: சின்னப் பெண்ணான போதிலே
அன்னையிடம் நான் ஒருநாளிலே
'எண்ணம்போல் வாழ்வு ஈடேறுமா?
அம்மாநீ சொல்!' என்றேன்.

முருகேசன்: வெண்ணிலா நிலா - என்
கண்ணல்லவா கலா - உன்
எண்ணம்போல் வாழ்விலே
இன்பம் காணலாம்

(முருகேச தம்பதியினரை முத்தமிட்ட வெள்ளையர் அதே தமிழ் மெட்டை ஆங்கிலத்தில் பாடுதல்)

ஆங்கிலம்:

**Mary & Peter:**

when I was just a little girl
I asked my mother, what I will be
will I be pretty, will I be rich
Her's what she said to me.
Que Sera, Sera,
whatever will be, will be
The Future's not ours, to see
Que Sera, Sera
What will be, will be.
When I grew up, and fell in love
I asked my sweetheart what lies ahead
will we have rainbows, day after day
Here's what my sweetheart said.
Que Sera, Sera,
whatever will be, will be
The Future's not ours, to see
Que Sera, Sera
What will be, will be.
Now I have children of my own
They ask their mother, what will I be
Will I be handsome, will I be rich
I tell them tenderly.
Que Sera, Sera,
whatever will be, will be
The Future's not ours, to see
Que Sera, Sera
What will be, will be.
Que Sera, Sera.

( திரை )

## காட்சி : 11

**இடம்:** தெருவோரம்

**காலம்:** மாலை

**பாத்திரம்:** ஒரு கண்ணன் ... அதன் பின் வேறு கண்ணன் உண்மையான கண்ணனும் அவனது வளர்ப்பு தாய் தகப்பனும்.. )

**திரைக்குப் பின்னே குரல்:**

சொந்த நாடிழந்து சோகம் பலசுமந்து டென்மார்க் வந்த
கண்ணனுக்கோ வயதிருபத் தொன்றாச்சு!
இளைஞன் கண்ணனவன் மேற்குலக வாழ்வினிலே
எப்படித்தான் வளர்ந்திருப்பான்?
கண்ணன் பேர் எங்களது கடவுளின்பேர் - ஆம்
கண்ணன் பேர் இந்துக்கள் கடவுளின்பேர்! - அந்த
கடவுள் கண்ணன் குறும்புகளை
பக்தி என நாம் துதிப்போம்!
இந்துக்கள் நாங்களன்றோ!
புராணத்தில் கடவுள் செய்த
பலகுறும்பு படித்தவர்நாம்!
வெண்ணை திருடியதும் கண்ணன் தான் - பெண்களது
சேலை திருடியதும் கண்ணன் தான் - கோபிகா
பெண்களுடன் ஆடியதும் கண்ணன்தான்!
இப்படி,
கடவுளரின் கதை கேட்டு
கன்னத்தில் போட்டவர்நாம்! - இங்கே
டென்மார்க்கில் கண்ணன் எனக்
கனக்கப்பேர் உள்ளார்கள் - அல்லி
மார்க்கட்டில் திருடிவிட்டான்
ஒரு கண்ணன் என்பாரும்
டிஸ்கோ பார்களிலே

ஆடும் கண்ணன் என்பாரும்
கால்கிழிந்த காற்சட்டை
காதினிலே வளையமிட்டு
டிஸ்கோ சாந்திகள்பின்
ஓடும் கண்ணன் என்பாரும்
மொழி அறியா பெண்டிருக்கு மொழி பெயர்க்க வந்துதங்கள்
காமக் களியாட்டு காட்டிடவும் துணிவாரும் - இப்படி
எத்தனையோ கண்ணன்மார்
இருக்கின்றார் டென்மார்க்கில்! - இவர்களிலே
எங்களது கண்ணனைநாம்
டென்மார்கில் தேடிடுவோம்! - இதோ
இங்கேஓர் கண்ணன் - டிஸ்கோவில்
கன்னியரோடு ஆடுவதில்
கடவுள் கண்ணன் தோற்பார் போ!

(ஒரு இளைஞன் வோக்மன் போட்டு காதிலே வளையமிட்டு ஆடி பாடுதல்... சில பெண், ஆண் பிள்ளைகள் கூட ஆடுதல்.. (இதற்கான பாடலாக, நான் அவனில்லை படத்தின் ராதா காதல் வராதா... என்ற பாடல் மேற்கத்தைய இசை கலந்தமையால் அதனை பயன்படுத்தலாம்.) பாடல்முடிவில்...

திரைக்குப் பின்னே (அசரீரி பாடலாக)

நெஞ்சினிலே சுமந்த ஈழம் நிழல்போலத் தொடருது
பஞ்சணையில் படுத்தபோதும் பழைய நாட்கள் வருகுது!
புலம் பெயர்ந்தோர் வாழ்வில் புது மாற்றம் எல்லாம்
தெரியுது! - அந்த
மாற்றம் செய்த கதையில் எங்கள் ஏமாற்றம் புரியுது!
கடந்த காலம் கனவா - இங்கு காணும் வாழ்வு கனவா!
கடந்த காலம் கனவா! இங்கு காணும் வாழ்வு கனவா?

(மேடை விளக்கு அணைந்து மிகவும் ஒளி, அங்கே வளர்ப்புப் பெற்றோருடன் அண்ணன்.)

-இதோ!
வடிவேலு வளர்ப்பு மகன்!
கண்ணனை நாம் கண்டுகொண்டோம்!
வாழ்வின் துயரமெலாம் மறக்க வைத்த தர்மமிகு
டென்மார்க் நாட்டினிற்கு நன்றிசொல்லும் விசுவாசி!
வளர்த்து ஆளாக்கி அன்பு செய்து காத்துவரும்
வளர்ப்புப் பெற்றவரை - போற்றி
வழிபடுமோர் பண்பினனாம்! - தமிழ்
பண்பாடு கலாச்சாரம் எனச் சொல்லி நடித்தே நம்
தமிழினத்தை கூறிடுவோர் வேஷங்களைப் புரிந்தமகன்!
கணனிக்குள் மறைந்து நின்று கற்கண்டாய் நஞ்சுதரும்
காடையரை இனங்கண்டு காறி உமிழ்பவனாம்!
பாதகம் செய்வாரைக் கண்டால் - பயங்கொள்ளல் ஆகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா. அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா - என்ற
மகாகவி பாரதியின் தாரகத்தை ஏற்ற மகன்! -ஆம்
ஊருக்கு உழைப்பவர்க்கு உள்ளத்தால் அவன் செருப்பு!
உதவாத பேர்களுக்கு உணர்ச்சியுடன் அவன் நெருப்பு!

(கண்ணன் தனது வளர்ப்புத் தந்தை தாயை அன்புடன் விழுந்து வணங்கிவிட்டு நிற்றல்... வளர்ப்புப் பெற்றவர் அணைப்பில் கண்ணன்
அப்போது அசரீரி பாடல் முன்பிருந்த மூத்த தமிழ் முழங்குதம்மா! பாடல் இடம் பெறும்போது நாடகத்தில் நடித்த அனைவரும் மேடைக்கு வந்து கரங்கூப்பியபடி நிற்றல் வேண்டும்...)

பாடல்: முன்பிருந்த மூத்த தமிழ் முழங்குதம்மா! - அன்று
மூவேந்தர் காத்த தமிழ் விளங்குதம்மா - இன்றும்
விளங்குதம்மா! - என்றும் விளங்குதம்மா!
சங்கத்திலே இறைவன் அவன் தமிழ் வளர்த்தான் - பாண்டி

சங்கத்திலே இறைவன் அவன் தமிழ் வளர்த்தான் - சேரன்
இமயத்தில் கல்கொணர்ந்து கோயில் செய்தான் - கற்புக்
கோயில் செய்தான் தமிழ் கோயில் செய்தான்!
முன்பிருந்த மூத்த தமிழ் முழங்குதம்மா!
பல்லவரும் பண்பாட்டை காத்து நின்றார் - வந்த
பல்லவரும் பண்பாட்டைக் காத்து நின்றார்! - ஈழ
பூதன் தேவன் நாகன் சென்று தமிழ் வளர்த்தான்
சங்கத் தமிழ் வளர்த்தான் - எங்கள் தமிழ் வளர்த்தான்!
முன்பிருந்த மூத்த தமிழ் முழங்குதம்மா!
வேற்றுமைகள் களைந்த இங்கே வாழ்ந்திடுவோம் - என்றும்
வேற்றுமைகள் களைந்து இங்கே வாழ்ந்திடுவோம்! - இந்த
வேற்று மண்ணில் தமிழ் முழங்கி உயர்ந்திடுவோம் - என்றும்
உயர்ந்திடுவோம் - நாம் உயர்ந்திடுவோம்!

முன்பிருந்த மூத்த தமிழ் முழங்குதம்மா!
வாழி தமிழ் வாழி என்று பாடிடுவோம் - என்றும்
வாழி தமிழ் வாழி என்று பாடிடுவோம் - எங்கள்
வருங்காலம் வேண்டி இங்கு கூடிடுவோம் - என்றும்
கூடிடுவோம் - நாம் கூடிடுவோம்! - நாம் கூடிடுவோம்!

(திரை)

# IV. கனடா, வானொலி அரங்கும் தாயக வன்னி நிகழ்வும்.

[கனடா கீதவாணி சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில், வெள்ளை அண்ணை மகரிசியின் நினைவுதினமான பங்குனி உத்தரதினத்தை முன்னிட்டு கவிவேழம் அவர்கள் ஆற்றிய ஆன்மிக இலக்கிய உரை. அவ்வுரை வன்னியில் வெளியான யோகசாத்திரம் என்ற நூலுக்கான வாழ்த்துச் செய்தியில் இடம் பெற்றது. நூல் வெளியீட்டு நிகழ்வின் போது, கிளிநொச்சி மகாவித்தியால உயர் கல்வி மாணவி செல்வி. அ. மாதுரி அவர்களால் அக்கட்டுரை வாசிக்கப்பட்டது.

கவிவேழம் விருப்பத்தின் பேரில், வன்னியில் இருந்து மின்னஞ்சலில் கிடைக்கப் பெற்ற யோகசாத்திரம் நூலாசிரியரின் நன்றி தெரிவிக்கும் பதில் கட்டுரை இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி விழாவில் அரச அதிபர், கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்வுரையை இங்கு வெளியிடும் பணியில் துணை நின்ற கணபதி இரவீந்திரன் அவர்களுக்கும் இவ்வாய்வுரையை இனிமையாக வாசித்த மாணவி செல்வி அ.மாதுரி அவர்களுக்கும் நன்றியுரையை கணினி வழி அனுப்பி வைத்த யோகசாத்திரம் நூலாசிரியர் சமூகயோகி இரா.கலியுகவரதன் அவர்களுக்கும், கவிவேழம் 'பாரதி பாலன்' நெஞ்சம் நெகிழ்ந்து நன்றி குவிக்கிறார்.]

## 'யோக சாத்திரம்' தரும் யோகியின் பணி வெல்க!

இந்த உலகம் ஆக்கம் பெற, உத்தமர்கள், மகான்கள், சித்தர்கள், தீர்க்கதரிசிகள், இறை அவதாரங்கள் எனக்காலத்திற்கு காலம் மனித தெய்வங்கள் தோன்றி இருந்திருக்கின்றனர். அனைத்து உயிரினங்களுக்கும் அன்பெனும் மார்க்கம் காட்டி தமது கருணைமிகு சேவையால் கவர்ந்து எதிரார் பிடியில் இருந்து அல்லது அழிவுகளில் இருந்து அனைத்து உயிரினங்களையும் காத்தல் செய்தும் வந்திருக்கின்றனர். தோன்றாத் துணையான எமது இறைவன் உயிரினங்களின் மீதான கருணைவாய்ப் படல் என்பதாய் எமது இக வாழ்விற்கு ஓர் அர்த்தம் உண்டென உணர்த்தும் பான்மைத்ததே இது.

இவ்வாறாகப் பார்க்கின்றபோது, இன்னும் காட்டு மிராண்டித்தனம் மனிதனை விட்டு விலகவில்லை என்பதனாலேயே காலத்திற்கு காலம் அத்தகைய கருணாமூர்த்திகளின் அவதாரம் அவசியம் என்பதாய் அந்த ஏக தெய்வத்தால் உணர்த்தப்படுகின்றது. என்பதாக உலக சமுகம் ஏற்கப்படவேண்டிய தேவையில் உலக வரலாறுகள் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே செல்கின்ற பாங்கின் ஊடாக தெளித்திட முடிகின்றது. `காட்டு மிராண்டித்தனம் எப்படி எங்கிருந்து தோன்றியது?'

`இன்றைய நாகரிக உலகம் எப்படிக் காட்டுமிராண்டித்தனம் ஆகும்?'

இவ்வாறாக எம்மவர் மத்தியில் கேள்விகள் எழுவதும்தவிர்க்க முடியாததே...

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் ஆகிய இறைவன் முன்னர் ஈழத்து நல்லூரிலே மானிட அவதாரத்தில் குருவாகி என்னையும் ஆட்கொண்டவர். குருநாதரின் பங்குனி உத்தர தினத்தை யொட்டி 03.04.2007இல் கனடா வானொலியிலே தொலைபேசி ஊடாக ஆற்றிய எனது ஆன்மிகச் சொற்பொழிவிலே மேற்படி கேள்விகளுக்கான விடை தெளிவாக்கப்பட்டது. அதனைச் செவிமடுத்த நேயர்கள் பலர் தொலைபேசி வாயிலாக இத்தகைய ஆன்மிக சொற்பொழிவை இதுவரை தாம் கேட்டதில்லை எனவும், நாஸ்திகவாதிகள் கூட தம்மை மெய்மறந்து கேட்கும்படியாக மேற்படி சொற்பொழிவு அமைந்து கொண்டதாகவும், எதிர்கால மாந்த இனத்திற்காக இத்தகைய நிகழ்ச்சிகளை தொடர்ந்துஒளிபரப்ப வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டதாக மேற்படி வானொலி நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்த அறிவிப்பாளர் கணபதி ரவீந்திரன் மிக்க மகிழ்ச்சியுடன் என்னிடம் தெரிவித்தார்...

இவை அனைத்தும் என்னை ஆட்கொண்ட இறைவன் கருணையினாலேயே சாத்தியம் எனக் கண்டு எனது குருநாதர் பற்றிய நூல் ஒன்றை உருவாக்கத் தொடங்கினேன். இதே காலப் பகுதியில் எனது உளக் கிடக்கை, இவ்வாறான ஆன்மிக சிந்தை ஏக காலத்தில் எனது தாயகத்திற்கும் சென்று சேரவேண்டும் என்பதாக...

குருநாதரின் திருவருளாக தாயகத்தில் வன்னியில் இருந்து எனது உடன் பிறவாச் சகோதரர் இரத்தினம் பிள்ளை கலியுகவரதன் அவர்கள் தமது 'யோகசாத்திரம்' எனும் நூல் வெளிவரும் தகவலை கணனிவழி தந்து நின்றபோது புளகாங்கிதம் அடைந்தேன். காலத்தின் தேவை கருதி வெளிவரும் அருமைச் சோதரரின் யோகசாத்திர நூலினை வாழ்துவாம்வேண்டி கனடா வானொலித்த மேற்படி குருநாதர் நினைவு சொற்பொழிவில் இருந்து ஒரு பகுதியை இங்கேதரவிழைந்து அதுவழி சோதரரின் யோகா நூலுக்கு அடியேன் ஆசி வழங்கலே இறைவன் சித்தம் போலும்...

'... மனிதன் நாகரிக வாழ்வு வாழத் தொடங்குமுன் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் அநாகரிகமாக காட்டு மிராண்டியாக வாழ்ந்த காலத்திலும் கூட அவனோடு அன்பு வாழ்ந்தது... இன்றைய நாகரிக உலகத்திலும் கூட இன்னும் காட்டு மிராண்டிகளாகவே உலகின் சில காடுகளில் வாழும் காட்டுவாசிகளை உலக வரைபடம் இனங்காட்டிக் கொள்வதை தொடர்புச் சாதனங்கள்வழி பார்த்தும் படித்தும் வருகின்றோம். அங்கே ஒரு மானிடத் தாய் தனது குழந்தைகளுக்கு முலை சுரந்து தாலாட்டிச் சீராட்டி வளர்க்கின்றாள்...

கொடிய விலங்குகளில் இருந்து அந்தக் குழந்தைகளுக்கு காவல் தருகின்றாள். அவர்கள் வளர்ந்துவர கணவன் அல்லது கணவர்கள் வேட்டைப் பொருளாகக் கொணரும் மாமிசம், காய், கனி, தானியம், கிழங்கு வகைகளை பிள்ளைகட்கு பகிர்ந்து ஊட்டி தனது கருணையை காட்டுகின்றாள். அவர்களை ஆதரித்து வளர்க்கின்றாள். அவளது கருணையால் குழந்தைகள் அவள்மீது அன்பைச் சொரிகின்றன.

இவ்வாறான காட்டுவாசிகள் போலவே அந்தக் காட்டிலே விலங்குகளும், பறவைகளும் தத்தம் குட்டிகள் குஞ்சுகளை பேணி நிற்கின்றன. தங்களுக்கு பாலூட்டும், தானியம் தரும் தம்மை ஈன்றவைகளை அவை அன்பினால் ஆலிங்கனம் செய்கின்றன.

பறவைகளில் சில உணவுக்கு, தானியங்கள் மட்டும் கொத்துவன அல்ல. அவை ஏனைய பறவை இனத்தையும் வேட்டையாடுவன. அத்தோடு நிறுத்தாது விலங்கின மாமிசமும் புசிப்பன. ஏன், மனிதக் குழந்தையை தூக்கிச்சென்று அதன் உடலை கிழித்து உண்ணும் கழுகு போன்ற பறவைகள் பற்றியும் நாகரிக உலகில் இருந்தபடி அறிந்திருக்கின்றோம். தவிர, தங்கள் மனிதப் பிணங்களை உறவினர்கள் கழுகுகள், காகங்களுக்கு உணவாக வைக்கும் மதத்தைச் சேர்ந்தவர்கள் பற்றியும் அறிந்திருக்கின்றோம்..

மிருகங்களில் ஆடு, மாடு, மான், மரை யானை முதலானவை புல், இலை தழை மேய்வன, தின்பன... அவற்றிலே சிங்கம், புலி முதலானவை ஏனைய மிருக இனங்களை, பறவை இனங்களை வேட்டையாடி அவற்றின் மாமிசங்களை உண்பன. அத்தகைய பயங்கர மிருகங்கள் மனிதரையும் வேட்டையாடி குதறிக் கிழித்து உண்பன.

இவ்வாறான சூழலுக்குள் தனது ஆரம்ப வாழ்வை அமைத்துக் கொண்ட மனிதனோ காய், கனி, கிழங்கு மட்டுமல்லாது, பறவை, விலங்கின வேட்டையிலும் தனது உணவுத்தேவையை பூர்த்தி செய்பவனாக இருந்திருக்கின்றான். அத்தோடு நிறுத்தாது தாம் சாராத ஏனைய மனிதக் குழாமை வேட்டையாடுதல் எனும் மனித மாமிசம் புசித்தல் என்பதாகவும் அத்தகைய காட்டு மிராண்டி மனிதரிடை அன்று நடைபெற்று இருந்திருக்கின்றது.

இவ்வாறான மனித மாமிசம் புசித்தல் எனும் போக்கில் இருந்து திருந்திய இன்றைய மனிதன் நாகரிகமாக வாழத் தலைப்பட்டு விட்டான்.

தனது மதத்தாலும் மொழியாலும் தான் மேன்மையான மனிதன் எனக் கூறவும் தன்னை அகிம்சா மூர்த்தி ஆகக் கூறவும் தலைப்பட்டு விட்டான். அவ்வாறாகி அனைத்து உயிர்களையும் தானே ஆளும் நிலைக்கு

உள்ளானதாக மொழியும் அவன் இன்றும் உலகின் எங்கோ ஒரு மூலையில் நரமாமிசம் புசிக்கும் ஒரு சில பிரிவினர் இருப்பதாக அருவருப்புடன் கூறியும் வருகின்றான்.

வட இந்தியாவில் ஒரிசாவின் மேற்குப் பகுதியில் வாழும் விவசாயிகளான ஒரு வேளாண் குழுமம் தங்களுக்கு நல்ல விளைச்சலைக் கொடுகக வேண்டி அதற்குரிய தெய்வத்திற்கு விழா எடுக்கின்றனர். அந்த மதச் சடங்கிலே 'மேரியா' என்ற நர்பலியை முதன்மைப் படுத்தி வந்திருக்கின்றனர். ஒரு காலத்தில் இந்தியாவில் தமது அன்பினால் ஆட்சி செலுத்திய அகிம்சா தத்துவம் நிரம்பிய புத்த, சமண மதங்களாலும், ஒழிக்க முடியாதுபோன அத்தகைய நரபலியை இந்தியாவை ஆட்சி செய்த பிரித்தானியரே நிறுத்தினர். அத்தகைய நரபலி தடை செய்யப்பட்டாலும் மனிதப் பலிக்குப்பதிலாக, அந்த வேளாளமக்கள் குரங்குகளையும், எருமைகளையும் 'மேரியா' பெயரோடு இன்றுவரை பலியிட்டு வருகின்றனர். அவர்களது அந்த மேரியா நரபலி அன்று எப்படி மேற்கொள்ளப்பட்டது?

அது, மனித இனத்தின் ஆரம்ப கால வரலாறாக, ஏற்கெனவே இனங்கண்டபடி பறவை இனங்களோ, விலங்கினங்களோ, முன்னைய காட்டுமிரண்டி மனிதர்களோ தங்கள் குழுமம் சாராத வேற்று இனங்களை வேட்டையாடும் பான்மையை ஒத்தது.

ஆம், 'மேரியா' என்ற நரபலிக்காக ஒரு மனிதனை அந்த வேளாளர்கள் வேறு கிராமங்களில் இருந்து திருடி வருவார்கள். பல மாதங்கள், ஆண்டுகளாக அந்த மனிதன் கொழுக்கும்படியாக உணவு கொடுப்பார்கள். ஒரு குறிப்பிட்ட நாளில் அந்த விவசாய விழா இடம் பெறும். அந்த சடங்கு சம்பிரதாய நிகழ்விலே அவர்கள் ஆடிப்பாடி பூசனை புரிவார்கள். பின்னர் தாங்கள் அயல் கிராமத்தில் திருடி வந்து தங்களால் கொழுக்கச் செய்த அந்த மனிதனை கொன்று அவன் உடலைச் சமைத்து உண்பார்கள்.

இந்திய வட நாட்டு நிலவரம் இவ்வாறு இருக்க, தமிழ்நாட்டிலே சேர, பாண்டிய, சோழர் எனும் மலைவளன், கடல்வளன் நெல்வயல்வளன் வழி செல்வமீட்டி அரசுபிரிந்த மூன்று தமிழ் மன்னர்களில், நெல்வயல் வளன் நிறைந்த பிற்காலச் சோழர்கள் காலத்தே நிகழ்ந்த ஒரு சம்பவம் மனிதனைச் சமைத்து உண்ணா விட்டாலும், நரபலிபற்றியது. தங்கள் சோழ மன்னன் போரிலே வெற்றி பெற, அவனது வீரர்கள் தமது உயிரை தாமே காளி தேவிக்கு பலியாக்கலே அது. அதனை நவகண்டம் என சோழர் புகழ் கூறும் ஜெயங்கொண்டார்தம் கலிங்கத்துப்பரணி மொழியும்...

... அடிக்கழுத்தி னுடன் சிரத்தை அரிவராலோ
அரிந்தசிர மணங்கின்கைக் கொடுப்பராலோ
கொடுத்தசிரங் கொற்றவையைத் துதிக்கு மாலோ
குறையுடலங் கும்பிட்டு நிற்கு மாலோ...'

பலிபீடத்தில் அரிந்துவைத்த அந்த மனிதத் தலை ஆண்டலை என்ற ஒருவகை பறவையின்வடிவத்தை ஒத்ததால் அந்தப் பறவை பலிபீடத்திற்கு அருகே வந்து அறுபட்ட மனிதத் தலையை தனது இனத்து பறவைதான் அந்த பலிமேடையில் தங்கி இருப்பதாக கருதி அதனை உற்றுநோக்க அறுபட்ட அந்த மனிதத்தலை அதனை அச்சுறுத்தவே அதனால் அந்த பறவை அச்சம் அடைகின்றதாக பரணிபாடிய ஜெயங்கொண்டார்தம் வர்ணனை அமையும்...

'நீண்ட பலிபீடத்தில், அரிந்துவைத்த
நெடுங்குஞ்சிச் சிரத்தைத் தன் இனமென்றெண்ணி
ஆண்டலைப்புள் அருகணைந்து பார்க்குமாலோ
அணைதலும் அச் சிரமச்ச முறுத்துமாலோ'

மேற்படி, கலிங்கத்துப்பரணி கூறும் நவகண்டம் கொடுக்கும் முறைமையை பிற்கால சோழ மன்னரின் மூன்று தலைமுறைக்கும் ஆசானாக இருந்த ஒட்டக்கூத்தரே நீக்கினார் என்பது ஐதீகம்.

இது தவிர அநாபய சோழன் அவையிலே தமிழ் சைவர்களுக்கு என சேக்கிழார் உருவாக்கிய பெரிய புராணத்தில் வரும், 63 - நாயன்மார்களில் சிறுத்தொண்டர் என்ற நாயனார் தனது பிள்ளையைக் கொன்று அந்த மாமிசத்தை அடியார் வேடத்தில் வந்த இறைவனுக்கு தமது பக்தி மேலீட்டினால் படைத்தவர்.

உலகில் அனைத்து சமூக வகுப்பினரின் வரலாறுகள் இவ்வாறாய் இருந்திருப்பதையே உய்த்துணர முடிகிறது. அதுவழி முன்னைய தமிழர்தம் பழம்பெருமையும், நாகரிகமும் பண்பாடும் வணக்க முறைமைகளும் அந்த வகையிலேயும் வைத்தெண்ணத்தக்க வகையில் இனங்காண வேண்டியும் நேரிடுகின்றது...

இவை கடந்த உலகே. இன்று நாங்கள் அனைவரும் காண்கின்ற நாகரிக உலகு எனத் தொடர்ந்து கூறிக்கொண்டு வருகின்றோம். இவ்வாறாக உலக நாடுகள் அனைத்திலும் இன்றைய மனிதர் தம்மை நாகரிக மனிதர் எனக் கூறத் தலைப்பட்டாலும், ஒருங்கிணைந்த உலகத்தை காண்பிக்க முற்பட்டாலும், அதற்கான வழிவகைகளில் இறங்கினாலும், அவர்களுக்குள்ளே இன்னும் ஒளிந்திருக்கும், மறைந்திருக்கும் முன்னய காட்டு மிராண்டித்தனம் என்பதான, மனிதரை மனிதர் வேட்டையாடுதல் எனும் போக்கு இன்னும் வெவ்வேறு ரூபங்களில் அரங்கேறிய படியேதான் உள்ளது.

அது, இனம், நிறம், மொழி, மதம், சாதி எனும் பல்வேறு பிரிவு நிலைக்குள்ளும் நின்றபடி தத்தம் மரபிலே ஊறியதாக ஆணவ வயப்பட்டு, ஆண்டான் அடிமைப்பேதம் என்பதாக, மனித வேட்டையை நிகழ்த்தி வருகின்றது.

ஆம், அது மேலும் விரிவாக்கம் பெற்றதாக தனது உறவு வட்டத்திற்குள் என்பதாகவும், ஏன் சொந்த சகோதர வட்டத்துள்ளும் என தொற்றி, ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன் என்பதாகி மனித வேட்டையை அரங்கேற்றி வருகின்றது. ஒருவரை ஒழித்தே இன்னொருவர் உயர்தல் என்பதாகவே உலகிலே அத்தகைய காட்டுமிராண்டியர் அரங்கேற்றம் நிகழ்ந்து வருகின்றது. பெயரளவிற்கு அகிம்சா மூர்த்திகளாகவோ, தாவர

பட்சணிகளாகவோ தூய இந்துக்கள் எனவும் புத்தர்கள் எனவும் எம்மவரில் சிலபிரிவினர் தங்களைக் கூறினாலும், அவ்வாறாகவே தங்கள் வாழ்வினை அமைத்துக் கொண்டாலும் அவர்களுக்குள்ளேயும், அத்தகைய மனிதவேட்டை எனும் முன்னைய நரமாமிச வெறி மேற்கூறிய வகையிலே இன்னும் இருந்து கொண்டே இருக்கின்றது. ஆம், தாவரங்களில் சில சிறு பூச்சி வண்டு இனங்களையும், வேறுசில விலங்கு பறவை இனங்களையும் அருகே வரும்போது, பற்றிக் கொண்டு அவற்றின் மாமிச சாரத்தை உறிஞ்சி வளர்வன... என்பதால் தாவர பட்சணியாக அகிம்சா மூர்த்தியாக தன்னை இனங்காட்டும் மனிதர்கள் தம்மை தூயவர்கள் என்று கொள்ள இடமில்லை என்று கூறிக் கொள்ளலாமா?

ஆக அத்தகைய தாவரபட்சணிகள் அல்லது அகிம்சா மூர்த்திகள் மனிதரும், போட்டி பொறாமைகளால் தந்திரங்களால் தலைமை வெறியினால் இன்னொருவனை கொடுமைபுரிதல், வீழ்த்தல், பழிவாங்கல் என்பது நரமாமிசம் எனும் முன்னைய காட்டுமிராண்டித் தனத்தின் இன்றைய மாற்று வடிவம் என்றே கொள்ள வேண்டி இருக்கின்றது. மேலும் விரிவாக கூறவேண்டுமாயின் இன்றைய நாகரிக மனிதர்தம் மனித வேட்டை என்பது, வேட்டைக்கு வலை விரித்தல் என்பது, தாம்சார் திட்டங்களை செயல்படுத்தல் என்பது... தமது உள்ளத்திலே புரையோடிப்போய் இருக்கும் வேற்றுமைகளை இனங்காட்டாது, அனைவரையும் தந்திரோபாயத்தால் அணுகி உரிய ஒரு நேரத்தில் தமது சுயநலத்திட்டத்திற்கு அனைவரையும் வேட்டையாடல் என்பதுவழி புலப்படுத்துகின்றது. உலகம் எங்கும் நடைபெறும் யுத்தங்கள், வன்முறைகள் முதலான உலக மாந்தரை பாதிக்கும், அழித்தொழிக்கும் பிரிவினாபேத சம்பவங்கள் இரத்தக் களரியை கக்கியபடி தொடர்தல் வழி நரமாமிசம் எனும் மனிதவேட்டை என்பதாகவே முன்னைய அநாகரிக உலகைவிட கேவலமாக அவை உணர்த்தத் தலைப்படுகின்றன. இவற்றிலே மொழி, பண்பாடு கலாச்சாரம் என்ற வேடத்துடன், மேடைப்பேச்சால் இனிய வார்த்தைகளால், பலகீனமான, அறியாமை குழப்பம் நிறைந்த அப்பாவி மாந்தருக்கு ,ஆறுதல் கூறுதல் அல்லது அரவணைத்தல்

போல்வதாக அவர்களது பலவீனத்தில் நுழைந்து தாம் விரித்த வலையிலே அவர்களை விழவைத்து புகழ், பதவிசுகம் பெறும். தற்குறிகள் அரசியல், அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், முதலாம் துறைகளுக்குள் நின்று சுயநலமற்ற ஏனைய ஆன்மநேய, ஆன்மிக பொதுநலத் தொண்டர்களுக்கும் இடையூறு விளைவிப்பவர்கள்...

இவ்வாறாகப் பார்க்கின்றபோது, மனிதர்தம் அறிவியல் பரிணாமம் என்பதாகக் கூறி அதன் வேற்று உருவம் என அதி பயங்கர சம்பவமாக - சக மனிதரை கூறுபோடும் இன்றைய நாகரிகம் கூறிக் கொள்ளும் அநாகரிக மனிதரின் வாழ்வில் இருந்து, ஆரம்ப உலகப் படைப்பு எனும், இயற்கையில் அமைந்த பறவை, விலங்கின வாழ்வுடன் தன்னை ஒருங்கிணைத்த முன்னைய மனிதரின் காட்டு மிராண்டிய வாழ்வு மேலானதே என்ற சிந்தை எம்மவர் மத்தியில் எழுவது தவிர்க்க முடியாதது.

இவ்வாறான, உலகெங்கும் வாழும் உன்மத்தர்களை எமது தொண்டுள்ளத்தால் சீர்திருத்தி உத்தமர்களாக அவர்களை வாழ்விக்க ஒரு நிறைவான மனித விழுமியங்கள் கொண்ட உலக சமுதாயத்தை உருவாக்கவேண்டிய கடமை உலக ஆக்கம் விரும்பும் எம்மவர் மத்தியில் எழுவதும் தவிர்க்க முடியாதது. இந்திய தத்துவஞானி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், 'மனிதன் வரலாறு என ஆக்கிவைத்தவைக்கு முடிவுரை காணல் என்பது உலகை ஒரு குடும்பமாக இணைத்தல் என்பதே...' என கூறுகின்றார். அவரது கூற்றை சற்று விரித்து கூறவேண்டுமாயின் மனிதன் வரலாறு என ஆக்கிவைத்த இரத்தக் கறைகளுக்கு முடிவுரைகாணல் என்பது உலகை ஒரு குடும்பமாக இணைத்தல் என்பதே! எனலாம்.

அவ்வாறாயின் நாடு, இனம் நிறம், மொழி, மதம் அனைத்தும் களைந்து உலக மனித இனம் ஒன்று கூடலே, உலகிலே சாந்தி ஏற்பட வழிவகுக்கும் என்பதாகின்றது.

---

அதுவே மனித வரலாற்றின் முடிவாகவும் இருக்கும். உலகம் ஒரே குடும்பமாக இணையும் அத்தகைய நாள் என்பது சொர்க்கத்தை பூமியிலே நிலைநிறுத்தல் போல்வதாகும்.

அத்தகைய நிலையை மனிதன் எவ்விதம் எட்டமுடியும்? அத்தகைய தகுதி பெறும் நிலை மனிதரிடை எப்போது தோன்றும்.?

சுனாமி அழிவுகள் முதலான இயற்கைச் சீற்றங்களினால், தமது உறவுகளை, சகமனிதரை இழந்தவர்களாகவும், தமது உடமைகளை மாடி மனைகளை, தோப்புத் துரவுகளை இழந்தவர்களாகவும் தங்கள் கண்முன்னாலேயே பறி கொடுத்தவர்களாகவும் எமது நாடு உட்பட உலகின் பல நாட்டு மக்களும் பல்வகைத் துயரைச் சந்தித்தே வந்திருக்கின்றனர். இந்த இயற்கைக்கு முன்னே எமது இகவாழ்வு நிலையாமை கண்ட பின்பும் எமது மனித குலம் ஆற்றிவரும் பாவ காரியங்கள் தொடர்ந்து நடைபெற்றபடியேதான் செல்கின்றது.

அவ்வாறானபோது, 'உலக மனிதரின் ஒருங்கிணைவு என்பது சாத்தியந்தானா?' என்ற ஐயப்பாட்டை அது தோற்றுவிக்கின்றது. இனத்தாலும் மதத்தாலும், மொழியாலும் தாம் வாழும் நாட்டினுள் தனித்துவமாக்கப்பட்ட ஈழத்தின் தமிழினம் தமது விடுதலைக்காக போராடும் இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான சிந்தனையை இன்னும் பின்னோக்கி நகர்த்த வேண்டியதாக இருக்கலாம்.

இருந்தபோதும் உலகை அழிவில் இருந்து மீட்பதற்கான ஆய்விலே இறங்கி அதற்கான முன்நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியது உலகை நேசிக்கும் ஒவ்வொருவரதும்கடமை. அவர்கள் அவ்வாறான உபதேசங்களை தாம் எதிராராகக் கருதுவோரிடை கூட எடுத்துச் சென்று உபதேசிக்க முடியும். அவர்களது அகக்கண்களை திறக்கமுடியும். அகிம்சா மூர்த்திகள்

எனக் கூறிக் கொண்டு அடாவடித்தனம் புரிவோருக்கும் தமது பணிவான போதனையால் அவர்களது சிந்தனையை அகலவிரிய வைக்க முடியும்.

அது, எம்மவரிடை தோன்றும் சுயநலமற்ற தொண்டர்களாம் யோகிகளாலேயே சாத்தியம். ஏற்கெனவே கட்டுரை ஆரம்பத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல எமது இக வாழ்வுக்கு ஓர் அர்த்தம் உண்டு என இறைவன் உணர்த்தும் பான்மைத்ததாக, ஒருங்கிணைந்த உலகத்தில் இருந்து ஞானியர் யோகியர் உருவாகி மதம் மொழி இனம் முதலானவை கடந்து அனைத்து உயிர்களையும் நேசிக்கும் பான்மைத்தவராக புலனின்பம் கடந்தவராக எனது குருநாதர், வள்ளலார் சுவாமிகள் போன்றவர்களை ஒத்தவர் களாக, வாடிய பயிர் கண்டு வாடும் - வாடியவற்றை பசுமை ஆக்கும் பரிபக்குவத்தில் தேர்ந்தவர்களாக உலகின் அனைத்துச் சமுதாயத்துள்ளும் அத்தகையோர் தோன்ற வேண்டும். அவர்கள் குழந்தைகளுக்காக யோகா, தியான பாட நெறிகளை உருவாக்கவேண்டும். குழந்தையரின் பெற்றோருக்கும் போதனை வகுப்புக்கள் நடத்தி குழந்தைகளை, பாகுபாடுகள் நீங்கி நெறிமுறையில் வளர்த்துவரப் பயிற்றல் வேண்டும். நற்சிந்தனைகளுடன் யோகா, தியான மூலம் குழந்தையரின் பெற்றவர்களையும் ஒரு நிலைக்குக் கொண்டு வந்தபடி குழந்தைகளை படிப்படியாக அவர்களுக்கு உரிய யோகா தியான முறைமூலம் பூரணமாக நெறிப்படுத்தல் வேண்டும்.

குழந்தைகளது ஆரம்ப வயதில் இருந்து படிப்படியாக அவர்களது வயதுக்கு வரும் பருவம் வரையு மான உலக தேடலை பாலியல் கல்வியுடன் இணைத்து அவர்களுக்கு எதுவித தயக்கமும் இன்றி பயிற்றுவித்து வரல் வேண்டும். ஆண், பெண் பேதமில்லாது அருகருகே ஆண்பெண் சோடிகளாக அவர்களை அருகிருத்தி யோகா தியானம் பயிற்றுவிக்க வைக்க வேண்டும். சாதியம் கடந்த அனைத்து தொழில்களையும் அவர்கள் மனங்கோணாமல் செய்யும் பக்குவநிலைக்கு அவர்கள் சிந்தையைச் செம்மைப்படுத்தி வளர்க்க வேண்டும்.

பண்டைய தமிழர்தம் கல்விமுறையில் அமையும் மக்களை பிரிவினா பேதமாக்கும் பாடத்திட்டங்களை ஒழித்து எமது எதிர்கால நன்மை கருதி அனைவரையும் உறவினர் ஆக்கும் நெறிமுறைகளை புதிய பாடத்திட்டத்தில் இணைக்க வேண்டும். ஏற்கெனவே எமது கீழைத் தேசத்தவர்களிடை உள்ளதான, குற்றம் புரிந்தோரை, வேற்று இனத்தவரை, அந்நியரை தவறான கண்கொண்டு பார்த்தலும், சமுதாயத்தில் இருந்து அவர்களை ஒதுக்கி வைத்தலுமான தவறான வழிமுறைகள் நீக்கப்படவேண்டும். குழந்தைகளின் அடிப்படை வசதிகள் உள்ளிட்ட சகல தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுத்தபடி அவர்களிடை இயலாமை என்ற சிந்தை எழாமல், தாழ்வு மனப்பான்மை தோன்றாமல் பரீட்சித்து தேறும் வழிமுறைகளை கற்பித்து அவர்களை பூரண மனிதர் ஆக்கிட முனைய வேண்டும்.

அதன்போது, அவர்களிடை விபரீத எண்ணங்கள் வராமல் செய்வதோடு வேற்றுமை இல்லாத நல்ல ஒரு பிரசையாக அவர்களை உருவாக்க முடியும். இதுவரை கூறிய, அடியேன் கூற்றை மறுதலிப்போர் 'இவர் கூறும் வழிமுறை தமிழர் சமுதாயத்தை கீழ்நிலைப்படுத்தி விடும்' என்ற உபதேசத்தைக் கூறி தமது பண்பாடு கலாச்சாரத்தை காப்பவர் தாமே என்பதாக குரல்கொடுக்கக் கூடும். தமிழர்தம் பிரிவினை வரலாறே இத்தகையது என்பதால் எச்சரிக்கையுடன் நாம் வைக்கும் விடயங்கள் அனைவருக்கும் புரியும் வகையில் உருவாக்கவும் தெளிவிக்கவும் வேண்டும். அந்த வகையிலே அடியேனை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் என்ற சர்வதேச அமைப்பின் உதவித் தலைவர்களில் ஒருவனாகவும் நடவடிக்கைக்குழுவிலும் இணைத்து மேற்படி அமைப்பை முன்னர் வளர்த்த மலேசிய நாட்டைச் சேர்ந்த மறைந்த பேராசிரியர் இர. ந. வீரப்பனார் அவர்களது வழி முறைகளை பின்பற்றி வருபவன் நான். அத்தகைய பெரியார் 99-களில் மறையுமுன் அடியேன் எழுதிக் கொண்டிருந்த சமரசபூமி என்ற அறிவியல் ஆன்மிக நாவலுக்குரிய கதையைப் பாராட்டி தமிழர்களின் உயர்ந்த பொக்கிசம் என வாழ்த்தி நின்றவர். எனவே தான் அவருக்கு சமர்ப்பணமாக அவர் மறைந்ததும் இந்தியாவில் அந்நூலை வெளியிட்டேன்.

அது தொடர்ந்து யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலும், கனடா ரொறன்ரோவிலும் கியூபெக்கிலும் புதிய ஓர் இலக்கிய வடிவம் என உலக மாந்தரை வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் மேற்படி எனது அறிவியல் ஆன்மிக நூல் அமைந்தது இங்கே குறிப்பிடத்தக்கது. எனவே, மலேசிய முன்னாள் அறிஞரும், உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்க தலைவருமாக இருந்த பேராசிரியர் இர. ந. வீரப்பனார் தம் ஆசி இத்தகைய கருத்துகளுக்கு உண்டென்பதால் அவரை மீறி யாரும் கருத்துரைக்க முடியாது.

ஆகவே, இங்கே கூறப்படும் குழந்தையர் யோகா தியான கல்வி முறைமையை யாரும் கொச்சைப்படுத்தவும் முடியாது... எனவே தான் அருமைச் சகோதரர் இரட்ணம் பிள்ளை கலியுகவரதன் அவர்களது யோகா நூலுக்கு எமது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க கடிதத் தலையிலே (லெட்டர்கெட்) எமது நல்லாசியை வழங்கி நிற்கின்றேன்.

உடலும் உள்ளமும் தூய்மையுடன் கூடிய வலிமை பெறல்... அறிவாற்றலை அதிகரிக்கச் செய்தல், தன்னைப்போல பிறரையும் நேசித்தல் முதலானவை யோகா, தியான முறைகளாலேயே சாத்தியம். ஆம், ஆரம்ப பாடசாலைகளில் இருந்து குழந்தைகளுக்கு யோகா, தியானம் பயிற்றுவித்து வருவதை உலகின் ஒவ்வொரு நாடும் மேற்கொள்ளல் வேண்டும். அப்போதே ஒரு வளமான ஆரோக்கியமான சந்ததி உலகெங்கும் உருவாகும். அத்தகைய ஓர் உயர்பணியில் தாய்த் திரு நாட்டில் தம்மை அர்ப்பணித்துள்ள யோகா, தியான இரட்ணம்பிள்ளை மரபில் உருவாகியவரும் சமுக மறுமலர்ச்சி காணத் துடிப்பவருமாகிய அருமைச் சோதரர் 'சமுகயோகி' கலியுகவரதன் அவர்கள் பணிகள் சிறக்க அடியேன் நல்லாசிகளும் வாழ்த்துக்களும்!

**வணக்கம்...**

(மேற்படி நூல் ஆசிரியரின் ஆய்வுடன் கூடிய ஆசியுரைக்கு நன்றி தெரிவிக்குமுகமாக ஆசிரியருக்கு வன்னி புதுக்குடியிருப்பில் இருந்து மின்னஞ்சலில் பதில் அனுப்பி இருந்த அறிவுக்கதிர் விஞ்ஞான சஞ்சிகை ஆலோசகரும், யோகசாத்திரம் நூலின் ஆசிரியருமான 'சமூக யோகி' அவர்களது பதிலில் இருந்து... 'எனது நூலுக்கான உங்கள் உரை பற்றி ஓரிருவரிகள்).

'இன்று ஐ.நா.வே உலக தலைவிதியை தீர்மானிக்கும் கருவியாகும். என்று தெய்வீக நீதி வழி நடக்கும் ஒரு நாடு ஐ. நா. வில் ஆதிக்கம் செலுத்துகின்றதோ, அன்றுதான் அன்பு இப்பூவுலகை ஆட்சி செய்யும். ஆனால், அந்த நாள் என்று வரும் என்பது தான் (Million Dollar Questions) மில்லியன் டொலர் கேள்வியாகும். உங்கள் கருத்துக்கள் யதார்த்த மானவை.

உங்கள் ஆசி மடலுக்கு நன்றிகள்.

வணக்கம்

அன்பு அண்ணா

இரத்தினம்பிள்ளை கலியுகவரதன்.

# படைப்பாளி உங்களிடம்

பல்வேறு அரங்குகளில் படைக்கப் பெற்ற எனது பன்முக இலக்கிய ஆக்கங்களைக் காலத்தின் தேவை அறிந்து 'அரங்க இலக்கிய அலைகள்' எனும் பெயரில் அழகுறத் தொகுத்தளித்துள்ள என் அருமை நண்பன் கணபதி இரவீந்திரன் அவர்களுக்கு என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இந்த 'அரங்க இலக்கிய அலைகள்' நூலுக்கு அணிந்துரை, வாழ்த்துரை, அணிந்துரை, சிறப்புரை எனப் பல்லுரைகள் வழங்கிப் பாராட்டிய இலக்கிய அறிவு ஜீவிகளுக்கும் எனது ஆக்கங்களை வாசிக்கும் உலகெங்கும் பரந்து வாழும் இனிய வாசக நெஞ்சங்களுக்கும் பலகோடி நன்றிகள்!

ஓர் இரண்டாண்டுகளுக்கு முன்பே வெளியிடப்பட்டிருக்க வேண்டிய இந்நூல் எதிர்பாராக் காரணங்களால் தடைபட்டு நின்றபோது, தடை களைந்து தொடர்ந்து ஆற்றுழி உதவும் உறுதுணையாளராக எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர் உலகளாவிய புகழுடைய கவிக்கோயிலான சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவரும் கிருபா பதிப்பகத்தின் நிறுவனருமாகிய முனைவர் மோசஸ்மைக்கேல் பாரடே அவர்கள் பழகிய காலம் குறைவேயாயினும் ஒன்றிய மனங்களால் ஆழ்ந்த நட்பினரான பேராசிரியர் இந்நூலை வெளியிடும் பொறுப்பைத் தமது பதிப்பகம் ஏற்றுக் கொள்ளும் என வாக்களித்து, அதனை இப்போது நிறைவேற்றியும் முடித்துள்ளார். அவருக்கு நான் வார்த்தைகளால் நன்றி சொல்லி ஆகுமா ? என் நெஞ்சம் நிறைக்கும் உணர்வுகளே அவருக்கு நன்றி! இனி இந்நூல் வாசகர்களாகிய உங்களிடம் !!

என்றும் உங்களவன்

**பாரதி பாலன்**



## ஆசிரியரைப் பற்றி...

**'அரங்க இலக்கிய அலைகள்'** தந்த கவிவேழம் பாரதிபாலன் **(முனைவர் ஜெயக்குமார் குமாரசுவாமி)** 11-11-1953 இல் ஈழத்து நல்லூரிலே பிறந்தவர். உலகத் தமிழ் இலக்கிய ஒன்றியப் பொதுச் செயலாளர். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் உதவித் தலைவர். அமெரிக்காவைத் தலைமை நிலையமாகக் கொண்ட சர்வதேச யோகா தியான அமைப்பால் பயிற்றப்பட்டு ஆசிரியராகி டென்மார்க்கில் பணிபுரிந்து வருகின்றார். சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற சிறந்த கவிஞரான இவர், மனித நேயம் மிக்கவர். மேற்குலகிலே பல கவிஞர்கள், எழுத்தாளர்கள் இவரால் உருவாக்கப்பட்டபோதும் எவ்வித ஆடம்பரமும் இன்றிவாழ்பவர். எமது சென்னை பச்சையப்பன் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் காலஞ்சென்ற முனைவர் வெ. தெ. மாணிக்கனார் அவர்களால் **'கவிவேழம்'** எனப் பாராட்டி கௌரவிக்கப் பெற்றவர். தனித்தன்மை வாய்ந்த இவரது படைப்புக்கள் உலக அறிஞர்களால் பாராட்டப் பெற்றவை. சிறுகதை, காவியம், நாவல், நாடகம், ஆன்மிகம் எனப் பன்முகம் கொண்ட இவர் சிறந்த ஆய்வறிஞரும் கூட. இவரது புதுமையான ஆய்வுகள் உலக அறிஞர்களைக் கவர்ந்து வருகின்றது. தமிழ் நாவல் வரலாற்றிலே ஒரு மைல்கல் என்பதாக மட்டுமல்ல, உலக நாவலின் தரத்தை எட்டிப் பிடித்துள்ள இவரது **சமரசபூமி** நாவல். சென்னைப் பல்கலைக்கழக இள முனைவர் பட்டப்படிப்பு ஆய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோ அறிவியல் தமிழ்த் தந்தை மணவை முஸ்தபா அவர்களால் இந்தியா, புதுவையில் வெளியிட்டு வைக்கப்பெற்ற இவரது உலகத் தரம் வாய்ந்த மேற்படி அறிவியல் ஆன்மிக நாவல், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மற்றும் மேற்குலக நாடுகளில் அறிமுக விழாக்கள் பல கண்டது. அவரது படைப்பு வரிசையிலே இப்போது வெளியாகும் இந்த **அரங்க இலக்கிய அலைகள்** என்ற நூல், உலகத் தமிழர் புத்தெழுச்சி பெற்று எழச் செய்யும் தனித்தன்மை வாய்ந்த அற்புதத் தொகுப்பாகும். இதனை வெளியிடும் கிருபா பதிப்பகத்தின் பணி வரவேற்கத் தக்கது.

முனைவர் வா.மு.சே. ஆண்டவர்
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி, சென்னை
தமிழ்நாடு, இந்தியா.

கிருபா பதிப்பக வெளியீடு